105

105

திருநெல்வேலி வேத சாஸ்திர நூல்கள்

III. 6

21 APR 1944

# பரிசுத்த ஞானஸ்நான முறைமைகள்

40

360

திருநெல்வேலி அத்தியக்ஷாதீன நூற்பதிப்புக்
கழக வெளியீடு

திருநெல்வேலி வேத சாஸ்திர நூல்கள்

III. 6

21 APR 1944
MADRAS

# பரிசுத்த ஞானஸ்நான முறைமைகள்

265.1

திருநெல்வேலி அத்தியக்ஷாதீன நூற்பதிப்புக்
கழக வெளியீடு

பதிப்பகம்:
நாடார் பிரஸ் லிமிட்டெட், சிவகாசி
1944

விலை அணா 4

21 APR 1944
MADRAS

# பாயிரம்

1919-ம் ஆண்டில் மகா கனம் தோர்ணக்கல் அத்தியக்ஷரவர்கள் பரிசுத்தஞானஸ்நானம் என்ற தலைப்பின் கீழ் சிறந்த நூல் ஒன்றை வெளியிட்டார்கள். அந்தப் புஸ்தகமிருக்க, திருநெல்வேலி வேதசாஸ்திர நூல்களில் ஒன்றாக ஞானஸ்நானத்தைப்பற்றி ஓர் புஸ்தகத்தை வெளியிடுவது அவசியமில்லை என்று எமக்குத் தோன்றிற்று. பின்பு, மூன்று முகாந்திரங்களையிட்டு இச்சிறிய நூலை வெளியிடத் தீர்மானித்தோம்.

1 அத்தியக்ஷரவர்கள் இயற்றிய புஸ்தகம் தற்காலத்தில் கிடைப்பது அரிது என்று கேள்விப்பட்டோம்.

2 அந்த நூல் 1925-க்கு முன் இயற்றப்பட்டிருந்தமையால் 1925-ல் வெளியிடப்பட்ட ஆங்கில ஜெப புஸ்தகத்தைப் பற்றியாவது அதிலுள்ள ஞானஸ்நான ஆராதனை முறைமைகளைப் பற்றியாவது அதில் ஒன்றும் எழுதப் பட்டதில்லை.

3 அந்தப் புஸ்தகம் தோன்றிய பின் இந்திய அத்தியக்ஷர்மாரும் விசேஷமாய்த் திருநெல்வேலி அத்தியக்ஷர்மாரும் ஞானஸ்நானத்தைப் பற்றியும் ஞானஸ்நான ஆயத்தத்தைப் பற்றியும் சில சட்டதிட்டங்களை வெளியிட்டிருக்கின்றனர். இவைகளும் ஆராய்ச்சி செய்யும் நண்பருக்கு தெரிந்திருப்பது அவசியமென்று கருதினோம்.

ஆகவே, இந்தச் சிறு நூலை இவ்வாண்டில் நாங்கள் வெளியிட நேரிட்டது. அத்தியக்ஷரவர்கள் இயற்றிய புஸ்தகம் கிடைக்குமாயின் அதை ஆராய்வதால் நம் நண்பர் அடையும் நன்மை கொஞ்சமன்று என்பது திண்ணம். கிடைக்காவிடின், ஞானஸ்நானத்தைப்பற்றி அவர்கள் அறியவேண்டியவை இந்நூலில் அடங்கியிருக்கும் என்பது எம் துணிபு. இக்காரியத்தை மூன்று துறைகளாக ஆராயவேண்டும்;

1. ஞானஸ்நானத்தைப்பற்றி திருச்சபையில் வழங்கிவந்த சித்தாந்தங்கள்.

இது திருச்சபை உபதேசம் என்னும் துறைக்கு அடுத்த ஆராய்ச்சி.

2 திருச்சபையில் ஆசரிக்கப்படும் ஞானஸ்நான ஆராதனை முறைமைகள்.

இது திருச்சபை வழிபாட்டுத் துறையைச் சேர்ந்தது.

3 ஞானஸ்நானம் பெறுவோருக்கும் ஞானத்தாய் தகப்பன் மாருக்கும் உபதேசஞ் செய்வோர் செய்யவேண்டிய கிரியைகள்

இது சபைப் பணிவிடையை நோக்கியது.

இந்த நூலை ஆராய்வோர் தாங்கள் விசுவாசிக்கவேண்டிய சத்தியங்கள் எவை என்றும், தாங்கள் பணிவிடை செய்யும் ஆலயங்களில் ஞானஸ்நான ஆராதனை நடக்கவேண்டிய விதம் இன்னதென்றும், தாங்கள் நிறைவேற்றவேண்டிய கடமைகள் எவையென்றும் கற்றறிந்து கொள்ளலாம் என்று நம்புகிறோம்.

ஸ்தேவான் திருநெல்வேலி

## 1-ம் அத்தியாயம்: ஸ்நான ஆசாரத்தின் வரலாறு

1. மத சம்பந்தமான சுத்திகரிப்புக்கென்று ஸ்நானம் செய்யும் ஆசாரம் சகல ஜாதியாருக்குள்ளும் தொன்றுதொட்டுக் கையாளப்பட்டுள்ளது. உதாரணமாய், இஸ்ரவேலருடைய ஆசரிப்புக் கூடாரத்தின் முன் மோசே வெண்கலத் தொட்டி ஒன்றை வைத்தான்:

> அதனிடத்தில் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளையும் தங்கள் கால்களையும் கழுவக்கடவர்கள். அவர்கள் ஆசரிப்புக் கூடாரத்திற்குள் பிரவேசிக்கும்போது............அவர்கள் சாகாதபடிக்குத் தண்ணீரினால் தங்களைக் கழுவக்கடவர்கள். (யாத். 30 : 19-20). அல்லாமலும், பரிசேயர் முதலிய யூதர் அனைவரும் முன்னோர்களின் பாரம்பரியத்தைக் கைக்கொண்டு, அடிக்கடி கை கழுவினாலொழிய சாப்பிடமாட்டார்கள்

என்பதற்குப் பரிசுத்த மாற்கு சாட்சி. (7 : 3). இந்துக்களின் சாஸ்திரங்களிலும் அவர்களுக்குக் கற்பிக்கப்பட்ட ஸ்நானங்கள், அநந்தம்.

2. எனினும், சுத்திகரிப்புக்கென்று பன்முறை கையாளப்படும் ஓர் ஆசாரத்திற்கும், முன் இல்லாத ஓர் நிலைமையில் பிரவேசிக்கும்படியான ஞான தீட்சையாய் ஒரு முறை மாத்திரம் நிறைவேறும் ஆசாரத்திற்கும் உள்ள வேறுபாடு கொஞ்சம் அன்று என்பதை எவரும் அறிவார்கள். கிறிஸ்தவர்கள் கையாளும் ஞானஸ்நானத்துக்கு ஒப்பான சில ஸ்நானங்கள் புறஜாதியாருக்குள் இருப்பினும், அது காணப்படுவது அபூர்வம். கிரேக்க தேசத்தில், அந்தரங்க சத்தியங்களைக் கற்றுக்கொண்டு பூரண ஞானமுள்ளவராய்த் தீர அபேட்சித்தவர்கள் செய்யவேண்டிய ஆயத்த ஆசாரங்களில் ஸ்நானமானது ஒன்றேயாம். முறைப்படி ஸ்நானஞ்செய்தவன் புதுப் பெயரைப் பெற்றுக்கொண்டு புது மனிதனாய் கருதப்படுவான். 'ஸ்நானஞ் செய்தவன் உத்தமன், பக்தன், பரிசுத்தன்' என்பது அந்த சமயத்தில் சொல்லும் ஸ்லோகம். ஆயினும், அந்த ஸ்நானம் தீட்சையானதன்று; செய்ய வேண்டிய ஆயத்தங்களை எல்லாம் செய்து முடித்த அபேட்சகர் ஆலயத்தினுட் சென்று சில தரிசனங்களைக் கண்டு தீட்சைக்குட்படுவான். இந்த ஸ்நானத்தைத் திருச்சபை ஞானஸ்நானத்துக்கு ஒப்பனையாகச் சபைப் பிதாக்கள்பல சந்தர்ப்பங்களில் திருஷ்டாந்தப்படுத்தியபோதிலும், ஒற்றுமை வேற்றுமை பார்க்கின், வேற்றுமை அதிகம், ஒற்றுமை அதிகமன்று என்று தோன்றும்.

3. பழைய ஏற்பாட்டில் கூறியுள்ள ஸ்நானங்கள் தவிர, யூதருக்குள் வழங்கி வந்த இன்னொரு ஸ்நானம் கவனிக்கற்பாலது. புறஜாதியான் ஒருவன் புறஜாதியாரின் அருவருப்புகளை வெறுத்து யூதமார்க்கத்தில் அமைந்து

கொள்ள விரும்பினால், விருத்தசேதனம், ஸ்நானம், யாகம் இம்மூன்றின் வழியாக அவன் அமையவேண்டும் என்பது ரபீமாருடைய ஐதீகம். இம்மூன்றில் சிரேஷ்டமானது யாது என்பதைப்பற்றி சாஸ்திரிகளுக்குள் விவாதங்கள் நடைபெற்றன; விருத்தசேதனம் இன்றியமையாதது என்று சிலர் சாதித்திருக்க, யூதமார்க்கத்தில் அமைந்தவன் விருத்தசேதனம் செய்து கொள்ளாவிடினும், அவன் யூதனாகப் பாவிக்கப்படுவது முறை என்று வேறு சிலர் சாதித்து வந்தனர். ஞானஸ்நானம் கொடுக்கும் இந்தப் பழக்கம் எந்தக்காலத்தில் உண்டானது என்பதற்குப் போந்த அத்தாட்சி இல்லாதிருந்தும், அப்போஸ்தலர் காலத்தில் அது வழங்கி வந்தது என்று நினைப்பதற்கு ஏதுக்கள் உண்டு. இந்த ஸ்நானத்தில் சுத்திகரிப்பும் தீட்சையும் பிரதிஷ்டையும் அடங்கியிருக்கிறது என்பது யூத ஞானிகள் உபதேசம்.

i சுத்திகரிப்பு. ஸ்நானஞ்செய்து கொள்ளுகிறவன் விக்கிரக ஆராதனையையும் புறஜாதியாரின் அருவருப்புகளையும் வெறுத்துவிட்டு, அவற்றில் அவன் சஞ்சரித்த பொழுது உண்டாயிருந்த தீட்டுகள் நீங்க தன்னை கழுவிக் கொள்ளுகிறான்.

ii தீட்சை. ஸ்நானஞ்செய்து கொள்வதற்குமுன் அபேட்சகன் நியாயப்பிரமாணத்தின் முக்கியமான அமசங்களைக் கற்றுக்கொண்டிருக்கவேண்டும். அதன் பின், போந்த அளவில் பயிற்சி பெற்றவனாகக் கருதப்படுவான்.

iii பிரதிஷ்டை. பிரமாணமாகிய நுகத்தை எடுத்துக்கொண்டு அதற்கு அடங்கி நடக்க ஸ்நானம் செய்து கொள்பவன் வாக்கு அளிக்கிறான். அங்ஙனம் செய்யாவிடின், அவன் யூதனாயிராமல், யூதவேஷம் மாத்திரம் பூண்டிருப்பான்.

யூதருக்குள் வழங்கிய இந்த ஸ்நானத்தின் சம்பந்தமாய் கவனிக்க வேண்டியவைகளாவன:

i அதற்குச் சாட்சிகள் இருப்பது அவசியம். அபேட்சகன் ஜலத்தில் நின்று கொண்டிருக்க, நியாயப்பிரமாணத்திலுள்ள சில முக்கியமான வாக்கியங்களைப் போதகர் பாராயணஞ் செய்து கொண்டு நிற்பார்கள்.

ii அபேட்சகன் ஜலத்தில் தனியாய் நின்றுகொண்டு தானே மூழ்கி ஞானஸ்நானம் பெறுவான். யூதருக்குள் ஞானஸ்நானம் பெறுவது என்று இருந்ததைத் தவிர, ஞானஸ்நானம் கொடுப்பது என்பது இருந்ததில்லை.

iii ஓர் சிறு அங்கத்தையும் விடாமல் அபேட்சகன் சர்வாங்கமாக மூழ்கினாலன்றி, ஞானஸ்நானம் நிறைவேறினதாக யூதர்கள் கருத மாட்டார்கள்.

iv அபேட்சகனுக்குச் சிறு பிள்ளைகள் இருந்தால், அவர்களும் அதே விதமாய் ஞானஸ்நானம் பெறுவது முறை. ஆயினும், தந்தை யூதனான பின் அவனுக்குப் பிள்ளைகள் பிறந்தால் அந்தப் பிள்ளைகள் விருத்தசேதனம் செய்யப்படுவதேயன்றி, ஞானஸ்நானம் பெறவேண்டுவதில்லை.

v ஞானஸ்நானம் பெற்றவன் பிரேதக்குழியிலிருந்து மீண்டு வந்தவன் போல்வான் என்பது யூத சாஸ்திரிகளின் சித்தாந்தம்.

vi ஞானஸ்நானம் ஓய்வு நாளிலாவது பண்டிகை நாளிலாவது நடைபெறல் தவறு; மற்ற நாட்களில் அதை அநுசரிப்பது ஒழுங்கு.

4. நமது ஆண்டவர் காலத்தில் மேற்கூறிய ஆச்சாரங்கள் எல்லாம் கையாளப்பட்டனவோ அல்லவோவென்று நாம் அறியமுடியாது; யோவான் ஸ்நானகன் வனாந்தரத்தில் தோன்றி மனந்திரும்புதலைப்பற்றிய செய்தியை அறிவித்து ஞானஸ்நானங் கொடுக்கத் தலைப்பட்டபொழுது, அக்காலத்தவருக்கு அது முன் தெரியாத நூதனமான ஆச்சாரம் அன்று என்று நாம் சந்தேகமின்றி ஊகிக்கலாம். ஞானஸ்நானம் இன்னதென்று அவர்களுக்குத் தெரிந்தது. யூதராக விரும்புவோர் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வதை அவர்களில் பலர் கண்டிருக்கலாம். ஆனால், யோவான் கொடுத்த ஸ்நானத்தைப் பார்த்தால், அதில் நூதனமானது ஒன்று இருந்ததென்று மறுக்க முடியாது. அது யாதெனின், அதுகாறும், யூதராய்ச் சேர விரும்பும் புறஜாதியார் ஞானஸ்நானம் பெற்றார்களே தவிர, யூதராய்ப் பிறந்தவர்கள் அதைப் பெற்றுக்கொண்டதேயில்லை; யோவானோ, வித்தியாசம் பாராட்டாமல், யூதரையும், தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, மனந்திரும்புதலுக்கேதுவான ஞானஸ்நானம் பெறும்படியாக ஏவி வந்தார். மனந் திரும்பின பலர் அதற்கு இணங்கி, யோர்தான் நதியில் இறங்கி மூழ்கி ஞானஸ்நானம் பெற்றார்கள். 'யூதருக்கும் நீர் ஞானஸ்நானம் கொடுப்பதற்கு காரணம் யாது' என்று ஒருவர் அவரிடத்தில் கேட்டிருப்பாரேல், யோவான் பின்வருமாறு சொல்லியிருக்கலாம். "இஸ்ரவேலர் தேவனுக்கு சொந்த ஜனமாக நியமனம் பெற்றவர்கள்; அந்த நியமனத்திற்கு அத்தாட்சியாக விருத்த சேதனம் என்னும் அடையாளத்தைப் பெற்றுக்கொண்டார்கள். ஆனால் தங்களுக்கிருந்த சிலாக்கியத்தை இஸ்ரவேலர் பாவத்தினால் இழந்துவிட்டுப் புறஜாதியாரைப் போலானார்கள். எரேமியா தீர்க்கதரிசி எழுதியபடி: புறஜாதியார் அனைவரும் விருத்தசேதனமில்லாதவர்கள்; ஆனாலும் இஸ்ரவேல் வம்சத்தார் அனைவரும் இருதயத்திலே விருத்தசேதனமில்லாதவர்கள் (9:26). ஆகவே, விக்கிரகாராதனையினால் தீட்டுப்பட்ட புறஜாதியார் ஞானஸ்நானம் பெற்றுச்சுத்தி அடைவது போலவே, பாவத்தினால் அசுசிப்பட்ட யூதர்களும் மனந்திரும்பும்போது அவர்களும் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு ஞானஸ்நானம் பெற்றுத் தேவனோடு ஒப்புரவாதல் தகுதியானது". அவர் செய்துவந்த பிரசங்கத்திற்கு எண்ணிறந்தவர்கள் செவிகொடுத்து அவரால் ஞானஸ்நானம் பெற்றனர். பரிசேயரோ ஆக்ஷேபித்தார்கள். புற

ஜாதியார் ஞானஸ்நானம் பெறுவது பொருத்தமும் சாஸ்திரங்களுக்கு இசைந்ததுமே; யூதர் ஞானஸ்நானம் பெறுவதோ நூதனம்; இதற்கு ஆதாரம் யாது? இங்ஙனம் செய்ய யோவானுக்கு அதிகாரம் கொடுத்தது யார் என்று தங்களுக்குள்ளே விவாதஞ்செய்துகொண்டனர். (யோவான் 1:19-25) தாம் கொடுத்த ஞானஸ்நானம் எத்தன்மையதென்று யோவான் தெளிவாய் எடுத்துரைத்தார். மேசியாவின் காலத்தில் பரிசுத்த ஆவியாகிய வரம் எல்லார் மேலும் விகற்பமின்றி பொழியப்படும் என்பது யூதருக்குள் வழங்கிய ஐதீகம். யோவான் தானு மேசியா என்று அவர்கள் வினவிய பொழுது, யோவான் தாம் மேசியாவல்லரென்றும் தம் ஞானஸ்நானத்துக்கும் ஆவியின் வரத்துக்கும் சம்பந்தமில்லையென்றும் மறுமொழியளித்தார். மேசியாவின் காலம் வருவதற்கு ஆயத்தமாக அந்த ஸ்நானம் நியமிக்கப்பட்டது. இஸ்ரவேலரில் சிலராவது வேண்டிய அளவில் மனந்திரும்பினாலன்றி, மேசியா வர முடியாது; அவர் வரும்பொழுது, அவர் கொடுக்கும் ஞானஸ்நானம் உயிரும் ஆவியும் நிறைந்ததாகும். யோவான் கொடுத்த ஸ்நானம் முன்னடையாளம். கிறிஸ்து கொடுக்க வந்த ஸ்நானமோ அந்த முன்னடையாளத்தினால் குறிக்கப்பட்ட மெய்ப்பொருளே.

5. இயேசு கிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும் ஊழியஞ்செய்யத் தொடங்கியபொழுது, அவர்களோடு சேர்ந்தவர்களும் ஞானஸ்நானம் பெற்று வந்தார்கள் என்று பரிசுத்த யோவான் சுவிசேஷத்தில் எழுதியுள்ளது: யோர்வானைப் பார்க்கிலும் இயேசு அநேகம் பேரை சீஷராக்கி ஞானஸ்நானம் கொடுக்கிறாரென்று பரிசேயர் கேள்விப்பட்டதாக கர்த்தர் அறிந்தபோது, யூதேயாவை விட்டு மறுபடியும் கலிலேயாவுக்குப் போனார். இயேசு தாமே ஞானஸ்நானங்கொடுக்கவில்லை, அவருடைய சீஷர்கள் கொடுத்தார்கள். (4.1-3). இவன் கூறியுள்ளது கிறிஸ்தவ ஞானஸ்நானம் எனக்கருதுவது தவறு. இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை என்றபடி (யோவான் 7.39) கிறிஸ்து உயிர்த்தெழுந்த பிற்பாடு தான் திருச்சபையில் வழங்கி வருகிற பரிசுத்த ஞானஸ்நானம் ஏற்படக்கூடியதாயிருந்தது. கிறிஸ்து பணிவிடை செய்த ஆரம்ப காலத்தில் யோவான் ஸ்நானங்களைப் போலவே மனந்திரும்புங்கள் என்று வற்புறுத்தி பிரசங்கஞ்செய்து வந்தார். அதைக்கேட்டு மனந் திரும்பினவர்களுக்குச் சீஷர்கள்கொடுத்த ஞானஸ்நானம், மனந்திரும்புதலுக்கு ஏதுவாய் யோவான் ஏற்படுத்தின ஞானஸ்நானத்தைத் தவிர வேறல்ல.

பெந்தெகொஸ்தே நாளில் ஆவியானவர் திருச்சபையின்மேல் வல்லமையோடே இறங்கி வந்ததுமுதல், அப்போஸ்தலர் ஞானஸ்நானம் கொடுக்கத் தலைப்பட்டார்கள். அது கிறிஸ்தவ ஞானஸ்நானமாம். அன்று பரிசுத்த பேதுரு செய்த பிரசங்கத்தைக்கேட்ட ஜனங்கள் சகோதரரே நாங்கள்

என்ன செய்யவேண்டும்? என்று கேட்டபோது, பேதுரு அவர்களைப் பார்த்து: நீங்கள் மனந்திரும்பி பாவ மன்னிப்புக்கென்று ஒவ்வொருவரும் இயேசுகிறிஸ்துவின் நாமத்திலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள், என்று சொன்னார். (அப் 2.37-35). அப்பொழுது 3000 பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள். இந்த ஞானஸ்நானத்தைப்பற்றி கவனிக்கவேண்டியவைக ளாவன:

1. கிறிஸ்தவர்கள் எல்லாரும் ஞானஸ்நானம் பெற்றார்கள். புதிய ஏற்பாட்டில் விசுவாசமில்லாத ஞானஸ்நானத்தைப்பற்றியாவது, ஞானஸ்நான மில்லாத விசுவாசத்தைப்பற்றியாவது நாம் வாசிப்பதில்லை. கிறிஸ்தவர்கள் எல்லாரும் துன்பப்படவேண்டிய காலத்தில், விசுவாசமில்லாதவர்கள் ஞானஸ்நானம்பெற விரும்பமாட்டார்கள் என்பது பிரத்தியட்சம். ஒருவன் கிறிஸ்துவை நம்பி ஏற்றுக்கொண்டிருந்தால், அவன் உடனே ஞானஸ்நானம் பெறவேண்டுமென்று அப்போஸ்தலர் எல்லாரும் சந்தேக மின்றி போதித்து வந்தார்கள். தற்காலத்தில் சிலர் ஞானஸ்நானம் பெறு திருந்தும், தங்களை கிறிஸ்துவின் மித்திரர் என்று சொல்லிக்கொள்ளு கிறார்கள்; இவர்கள் சாதிப்பது ஆதித் திருச்சபையின் சித்தாந்தத்திற்கும் செய்கைக்கும் ஒவ்வாததென்று கவனிக்கவும். கொர்நேலியுவும் அவரோ டிருந்தவர்களும் பேதுருவின் மூலமாய்த் திவ்விய செய்தியைக்கேட்டு நம்பி உடனே தேவ செயலாக மானிடக்கிரியையின்றி பரிசுத்த ஆவியாகிய வரத்தைப் பெற்றுக்கொண்டார்கள். இப்படியிருக்க, அவர்கள் ஞான ஸ்நானம் பெறவேண்டுவதில்லை என்று பேதுரு சொன்னாரா? இல்லவேயில்லை: நம்மைப்போல் பரிசுத்த ஆவியைப்பெற்ற இவர்கள் ஞானஸ்நானம் பெறாதபடி எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி; இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளையிட்டான்.(அப். 10: 47). (பேதுரு தாமே ஞானஸ்நானம் கொடுக்க வில்லை என்று கவனிக்கவும். அதுபோலவே, பரிசுத்த பவுல் தாமே ஞான ஸ்நானம் கொடுக்கவில்லை என்பது, என் நாமத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதாக எவனும் சொல்லாதபடி, நான் கிறிஸ்புக்கும் காயுவுக்குமே யன்றி, உங்களில் வேறெவனுக்கும் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை; இதைக் குறித்துங் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன் (கொரி 1. 14-15) என்பதனால் விளங்கும். ஞானஸ்நானம் கொடுத்தவர்கள் யாரென்று புலப்படவில்லை; அந்த ஊழியத்தை நிறைவேற்றுவதற்கு அப்போஸ்தலர் தங்களோடிருந்த உதவிக்காரருக்குக் கட்டளையிட்டிருக்கவேண்டும்.)

ii கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுப்பது அக்காலத்து வழக்கம். (அப். 2:38; 10:47). இது பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திற்குள்ளாக அவர்களுக்கு ஞான ஸ்நானங்கொடுத்து உபதேசியுங்கள் என்பதற்கு முரண்பட்டதாகத்தோன்ற

லாம். ஆனாலும், ஆதிக் கிறிஸ்தவர்கள் பெரும்பாலார் யூதரும், யூதமார்க்கத்தில் சேர்ந்தவர்களும், யூதமார்க்கத்தில் ஆரம்பப் போதனை பெற்றவர்களுமே. அவர்களுக்குப் பிதாவைப் பற்றியும் அவருடைய பரிசுத்த ஆவியைப் பற்றியும் முன் விசுவாசம் இருந்தபடியால், அவர்கள் கிறிஸ்தவர்களாகும் போது, இயேசுகிறிஸ்துவை ஆண்டவராக ஏற்றுக்கொண்டு அறிக்கையிடுவது விசேஷம்; அவர்கள் ஞானஸ்நானம்பெற்ற சமயத்தில் விசேஷமாய்க் கூறப்பட்டது அவருடைய திருநாமமே. என்றபோதிலும், ஆதிச் சபையிலும் திரியேக தேவனுடைய திருநாமத்தைக் கூறி ஞானஸ்நானம் கொடுப்பது வழக்கம் என்பதில் ஐயமில்லை.

iii ஞானஸ்நானம் பெற்றவர்களில் பிள்ளைகளும் இருந்திருக்க வேண்டும். ஏனெனில், அப்போஸ்தலர் 16ல், லீதியாளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்றும், சிறைச்சாலைக்காரனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள் என்றும் நாம் வாசிக்கலாம். அக்காலத்து நடைக்கு இசைவாக வீடு, வீட்டார் அவனுடையவர்கள் என்பவற்றில் வேலைக்காரரும் அடங்கியிருப்பார்கள். லீதியாள் ஓர் ஐசுவரியச் செல்வி: அந்தப் பெரிய வீட்டில் பிள்ளைகளில்லாதிருக்க முடியாது.

iv புதுக் கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானம் பெறும்பொழுது அதன் சம்பந்தமான சடங்காச்சாரங்களைப்பற்றி ஒன்றும் எழுதப்படவில்லை, மூழ்கி ஞானஸ்நானம் பெறுவது அவசியம் என்று சொல்லப்படவுமில்லை. பிலிப்பு எத்தியோப்பிய தேசத்தானை மந்திரிக்கு ஞானஸ்நானம் கொடுத்த பொழுது பிலிப்புவும் அண்ணகனும் தண்ணீரில் இறங்கினார்கள் என்று நாம் வாசிக்கலாம். (அப். 8:35) எனினும் சிறைச்சாலைக்காரனும் அவனுடையவர்களும் நடு இராத்திரியில் வீட்டிலே ஞானஸ்நானம் பெற்றார்கள் என்பதைக் கவனிக்குங்கால், அநேகமாய் அவர்கள் தண்ணீரில் இறங்காமல் வேறு விதமாய் ஞானஸ்நானம் பெற்றிருக்கவேண்டும் என்று நாம் நினைக்கலாம்.

6. ஞானஸ்நானம் பெறுபவனுக்குக் கிடைக்கும் நன்மைகளைப்பற்றி புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் பலவாறு எழுதியிருக்கின்றார்கள்.

i பாவ மன்னிப்பு, சுத்திகரிப்பு. பாவ மன்னிப்புக்கென்று யோவான் ஞானஸ்நானங் கொடுத்து வந்தார். கிறிஸ்துவின் திரு இரத்தம் சிந்தப்பட்டபடியினால் பாவ மன்னிப்பு பூரணமாய் அளிக்கப்பட்டதென்று காண்பிப்பது கிறிஸ்தவ ஞானஸ்நானத்தின் சிரேஷ்டம், தமது இரக்கத்தின்படியே மறு ஜனன முழுக்கினாலும் பரிசுத்த ஆவியின் புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார் (தீத். 3:5). தாம் சபையை திருவசனத்தோடுகூடிய தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து பரிசுத்தமாவதற்கும் அதற்காகத்

தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார். (எபே. 5: 26,27.) இதற்கு இசைய அனனியா என்பவன் கண் தெரியாத சவுலினிடம் வந்தபொழுது நீ தாமதிப்பானேன்? எழுந்து அவர் நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞான ஸ்நானம்பெற்று, உன் பாவங்கள் நீங்கக் கழுவப்படு என்று சொன்னான் (அப். 22:16)

ii கிறிஸ்துவோடு உடன்படிக்கை செய்தல் 1. கொரி. 10. 1-22 காண்க; அந்தப்பாகத்தின் சாராம்சமாவது: இஸ்ரவேலர் எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்திலும் சமுத்திரத்திலும் ஞானஸ்நானம்பெற்று, அவரைப்பின்பற்றவும் அவருக்குக்கீழ்ப்படியவும் உடன்படிக்கைசெய்தார்கள். அதுபோல் நீங்களும் ஞானஸ்நானம் பெற்றபொழுது, கிறிஸ்துவைப் பின்பற்றவும் அவருக்குக் கீழ்படியவும் அவரோடு உடன்படிக்கை செய்தீர்கள். இஸ்ரவேலர் விலகி அழிந்தார்கள்; நீங்களும் விலகி அழியாதபடி ஜாக்கிரதை யாயிருங்கள் என்பது.

iii கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கமாய்ச் சேருதல் எபே. 4:4,5 காண்க. ஒரே சரீரமும் ஒரே ஆவியும் உண்டு; ஒரே ஆண்டவரும், ஒரே விசுவாசமும் ஒரே ஞானஸ்நானமும் உண்டு. 1 கொரி. 12:13ஐயும் காண்க: நாம் யூதராயினும் கிரேக்கராயினும் அடிமைகளாயினும் சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினால் ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றோம். (அந்த அத்தியாயம் முழுவதையும் கவனத்தோடு வாசிக்கவும்.)

iv கிறிஸ்துவின் மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் பங்காளியாதல். கிறிஸ்தவ ஞானஸ்நானம் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு ஒப்பனை, அதிலுள்ள சக்தி கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினால் உண்டானதென்பது இதைப்பற்றிப் புதிய ஏற்பாட்டில் கண்டுள்ள முதன்மையான உபதேசம். அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானம் இப்பொழுது இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினால் உங்களை இரட்சிக்கிறது. (1 பேதுரு 3. 21) பரிசுத்த பவுல் இதைத் தெளிவுற எழுதியுள்ளார்: கிறிஸ்து இயேசுவுக் குள்ளாக ஞானஸ்நானம்பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக் குள்ளாக ஞானஸ்நானம் பெற்றோமென்று அறியீர்களா? ஆகவே பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படி ஞானஸ்நானத்தின் மூலமாய் அவரோடு மரணத்திற்குள்ளாக அடக்கம் பண்ணப்பட்டோம். (ரோமர். 6: 3, 4. 6: 1-14 வாசிக்கவும்) முழுக்கு ஸ்நானத்தை நினைத்து அப்போஸ்தலர் இதை எழுதினார் என்பது துலக்கம். சிலுவையில் அறையப் பட்ட கிறிஸ்து பூமியில் அடக்கம்பண்ணப்பட்டுக் காணாமற்போனது போலவே, ஞானஸ்நானம் பெறுபவன் தண்ணீரில் மூழ்கிப் புதைக்கப்பட்டு காணாமற்போனான்; தண்ணீரைவிட்டு அவன் கரையேறும்பொழுது, பழைய மனுஷனாகிய பாவமுள்ள சுபாவத்தைக் களைந்து நீங்கினவனும் புது மனுஷனாய்ப் பிறந்தவனுமாக எழுந்து, புது ஜீவனுள்ளவனாய் நடக்கும்படி

தன்னை ஒப்புக்கொடுக்கிறான்.

V பரிசுத்த ஆவியைப் பெறுதல். யோவானால் முன் அறிவிக்கப்பட்ட விசேஷம் இதுதான்: நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன்; என்னிலும் வல்லவர் ஒருவர் வருகிறார் அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். (லூக்கா 3:16) ஒரு மனுஷன் ஜலத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் பிறந்திருக்கவேண்டும்: இல்லாவிடின் அவன் தேவனுடைய ராஜ்யத்தைக் காண முடியாது என்று இயேசு தாமே போதித்திருந்தார். ஆகவே, கிறிஸ்தவ ஞானஸ்நானத்துக்கும் ஆவியாகிய வரத்திற்கும் நெருங்கிய சம்பந்தமுண்டென்று நிருபங்களிலுள்ள பற்பல வாக்கியங்களில் போதிக்கப்பட்டிருக்கிறதை நாம் காணலாம். (உதாரணமாக, தீத். 3:5 மறுபடியும் காண்க.) சிலர் ஞானஸ்நானம் பெறுகிற நேரத்தில் ஆவியானவரைப் பெற்றார்கள். சிலர் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன் தேவ ஆதீனமாக அவர்களுக்கு ஆவியாகிய வரம் அருளப்பட்டது. (அப். 10:44-48.) சிலர் ஞானஸ்நானம் பெறுகிற பொழுது அந்த வரத்தை அடையாமல், அப்போஸ்தலர் கைகள் வைக்கப்படுகையில் ஆவியினால் நிரப்பப்பட்டார்கள் (அப். 8:14-17). எப்படியாயினும், இந்த வரம் எல்லாருக்கு முரியதென்பதும், எல்லா கிறிஸ்தவர்களும் அந்த வரத்தைப் பிரத்தியட்சமாய்ப் பெறவேண்டும் என்பதும் ஆதிக்கிறிஸ்தவர்கள் சந்தேகமின்றி பற்றிக்கொண்டிருந்த ஐதீகம். கிறிஸ்தவன் யார்? என்று அக்காலத்தவரிடம் ஒருவன் கேட்டிருந்தால், உடனே: ஞானஸ்நானம் பெற்று பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டவன் கிறிஸ்தவன் என்று மறுமொழியாகச் சொல்லியிருப்பார்கள்.

7. புதிய ஏற்பாட்டுக் காலத்திற்குப் பின், திருச்சபையில் ஞானஸ்நானம் நிரந்தரமாய் ஆசரிக்கப்பட்டு வந்தது என்பதற்கு நமக்குப் போதிய அத்தாட்சிகள் உண்டு.

2-ம் நூற்றாண்டில் ஞானஸ்நானத்தைப் பற்றி எழுதியவரில் நமக்கு முக்கியமான சாட்சிகள் இருவராவர்.

i அப்போஸ்தலருடைய உபதேசம் என்ற நூல் (திதகே). அதில் ஞானஸ்நானத்தைப்பற்றி பின்வருமாறு எழுதியுள்ளது: ஞானஸ்நானத்தைப் பற்றி. ஞானஸ்நானங்கொடுக்க வேண்டிய முறையாவது: முன் கூறியவற்றை எல்லாம் ஓதிய பின், பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஜீவனுள்ள தண்ணீரில் [அதாவது ஆற்று நீர் ஊற்று நீராகிய ஓடும் புனல்] ஞானஸ்நானம் கொடுங்கள். ஜீவனுள்ள தண்ணீர் இல்லாவிடின், மற்ற நீரிலும் ஞானஸ்நானங்கொடுக்கலாம். [தடாகத்துத் தண்ணீர்]. பச்சைத் தண்ணீர் இல்லாவிடின், வெந்நீரிலும் கொடுக்கலாம். [சீரியாவில் வெந்நீர் பொங்கும் தடாகங்கள் பல உண்டு]. இரண்டும் இல்லாவிடின்,

பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அபேட்சகன் சிரசில் மும்முறை தண்ணீரை வார்க்கலாம். ஞானஸ்நான விசேஷத்திற்கு முன், ஞானஸ்நானம் கொடுப்பவனும், பெறுபவனும் இந்த முறைமையைக் கையாளக்கூடிய ஏனையவரும் உபவாசஞ்செய்ய வேண்டும்.

இதில் கவனிக்க வேண்டியவை:

a திரியேகதேவனுடைய நாமத்தில் ஞானஸ்நானங்கொடுத்தல்.

b மும்முறை தண்ணீரை வார்த்தல்.

c முழுக்கு ஸ்நானம் ஒழுங்கு; வசதிக் குறைவு ஏற்பட்டால், வார்த்து ஞானஸ்நானங்கொடுத்தல் வழங்கும்.

d ஞானஸ்நானத்துக்கு ஆயத்தமான உபவாசம். (பருவங்கடந்த ஞானஸ்நான ஆராதனை 1-ம் ரூப்ரிக் காணவும்)

2 இரத்தச் சாட்சியான ஜஸ்ற்றின்.

மெய்மத விளக்கம் என்று அவர் இயற்றிய நூலில், ஞானஸ்நானத்தைப்பற்றி பின் வருமாறு எழுதியிருக்கிறார்:—

நாங்கள் போதிக்கிறவைகள் மெய்யென்று சிலர் நம்பி ஏற்றுக்கொள்ளுகிறதுமல்லாமல், இவற்றின்படி தாங்கள் ஒழுகுவதாக அறிக்கை செய்தால், அவர்கள் உபவாசஞ்செய்துகொண்டு, முன் செய்த அக்கிரமங்களுக்குத் தேவனிடத்தில் மன்னிப்பு கேட்க வேண்டுமென்று அவர்களுக்குப் போதிக்கிறோம். நாங்களும் அவர்களோடு சேர்ந்து உபவாசஞ்செய்வோம். பின்பு, தண்ணீர் இருக்கும் இடத்திற்கு அவர்களைக் கூட்டிக்கொண்டு போய்விடுவோம். நாங்கள் மறு ஜனனம் அடைந்ததற்கு ஒப்பாக அவர்களும் மறு ஜனனம் அடைவார்கள், எப்படியெனில் எல்லாவற்றிற்கும் பிதாவானவருடைய நாமத்தையும் நம் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தையும் பரிசுத்த ஆவியின் நாமத்தையும் கூறி, கிரமப்படி அந்தத் தண்ணீரில் ஸ்நானஞ் செய்துகொள்ளுகிறார்கள். விசுவாசித்து உறுதி கொண்டுள்ளவனை நாங்கள் கழுவிய பின், சகோதரர் என்ற பேர் வழங்கியவர்கள் நிற்கும் இடத்திற்கு நேராக அவனை வழி நடத்துவோம். தங்களுக்காகவும் அப்பொழுது வெளிச்சமடைந்தவனுக்காகவும் மற்றெல்லா மனிதருக்காகவும் ஊக்கமாய் வேண்டுதல்செய்ய ஆயத்தமுள்ளவர்களாய் இவர்கள் நிற்பார்கள். பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றவனுக்கு யூதர்கள் கொடுக்கும் ஸ்நானம் என்னத்துக்குவேண்டியது. இந்த ஸ்நானத்திற்கு வெளிச்சமடைதல் என்று நாமதேயமும் உண்டு. ஏனெனில் இவற்றைக் கற்றுக்கொண்டவர்களின் மனம் இருள் நீங்கி வெளிச்சம் அடைகிறது.

இவற்றில் விசேஷமாய்க் கவனிக்கவேண்டியவை:

a ஞானஸ்நானத்துக்கு முன் ஆயத்தப் போதனை.

b பரிசுத்தமாய் நடப்பதற்கான பிரதிக்கினை.

c உபவாசம்

d சபையார் செய்யும் ஜெபங்கள்.

e திரியேக தேவனுடைய நாமத்தை அழைத்தல்

f ஞானஸ்நானத்துக்கு மறு ஜனனம் வெளிச்சமடைதல் என்ற நாமதேயங்கள்.

8 3-ம் நூற்றுண்டில் வாழ்ந்த இரண்டு முக்கியமான சாட்சிகள் கூறிய சாட்சியத்தை மாத்திரம் கவனிப்போம்.

i ஆப்பிரிக்காவிலுள்ள கார்தேஜ் அத்தியகூரும் இரத்தச் சாட்சியுமான சிப்பிரியன். அவர் தாம் பெற்ற ஞானஸ்நானத்தைப்பற்றியும் அச்சமயத்தில் தமக்கு ஏற்பட்ட அநுபவங்களைப்பற்றியும் எழுதியதாவது: மறு ஜனனத்தை அளிக்கும் தண்ணீரால் முற்காலத்து அக்கிரமங்களும் தீட்டுகளும் கழுவப்பட்டிருக்க, சுத்திசெய்யப்பெற்ற என் உள்ளத்தில் வானத்திலிருந்து வெளிச்சம் பொழியப்பட்டது, என் இருதயம் சாந்தமும் பவித்திரமுமாய் விளங்கிற்று; பரம ஆவியில் நான் பானம் பண்ணினபடியால், இரண்டாம் பிறப்பின் பயனுகப் புதிய மனுஷனுனேன். அப்பொழுது எனக்கு இருந்த சந்தேகங்கள் தீர ஆச்சரியமான பிரகாரமாய் மன நிச்சயம் உண்டாயிற்று; பூட்டப்பட்டிருந்த கதவுகள் திறவுண்டன; இருண்ட இடங்கள் ஒளியினுல் நிறைந்தன; முன் கஷ்டமாயிருந்தது லகுவாயிற்று; அசாத்தியம் என்று நான் எண்ணியிருந்தவை செய்யக்கூடியவைகளாயின. பாவத்தால் கட்டுண்டவனும் மாம்சத்தினுல் பிறந்தவனுமாகிய பழைய நான் என்பவன் உலகத்திற்குரியவன் என்றும், இப்பொழுது பரிசுத்த ஆவி கிரியைசெய்து வருகிற புதிய நான் என்பவன் தேவனுல் உண்டானவன் என்றும் நான் உணராமலிருக்க முடியவில்லை. இதைப்பற்றி வியாக்கியானம் எழுதவேண்டியதில்லை: சிறு குழந்தைகளாய் ஞானஸ்நானம் பெற்றவர்களுக்குப் பரிசுத்த சிப்பிரியன் எழுதியது எளிதில் விளங்காது. தற்காலத்திலும் ஞானஸ்நானம் பெற விரும்பியும் நெடுநாள் தாமதஞ்செய்து, பின் ஞானஸ்நானம் பெறும்படியான நல்ல தீர்மானஞ் செய்த சில பெரியார் தங்கள் அனுபவம் இதுதான் என்று தெளிவுற உரைத்ததுண்டு.

ii தேர்துல்லியான். இவரும் ஆப்பிரிக்கா நாட்டார், நியாயசாஸ்திரி, வைராக்கிய குணத்தவர், சாதுரியப்பிரசங்கி, இவர் கிரீடம் என்ற நூலில் ஞானஸ்நானத்தைப்பற்றி சுருக்கமாய் எழுதியிருக்கிறதாவது:

தண்ணீரில் இறங்கி மூழ்க நாங்கள் மனமாயிருந்தால், சற்று நேரத்துக்கு முன் ஆலயத்தில் நின்று, பிசாசையும் அதன் ஆடம்பரத்தையும் அதன் கணங்களையும் வெறுத்துவிட்டதாகப் பகிரங்கமாய் அறிக்கை செய்வோம். பின்பு சற்று விஸ்தாரமான விசுவாச அறிக்கை செய்தபின் தண்ணீரில் மூழ்கி ஸ்நானம் செய்துகொள்ளுவோம். அதற்குப் பிற்பாடு,

ஐக்கியத்திற்கு அடையாளமாக பாலையும் தேனையும் வாங்கி உண்டு, ஒரு வாரமாக வேறெந்த ஸ்நானத்தையும் செய்யாமலிருப்போம் என்பது. அவர் இயற்றிய மற்ற நூல்களில் இதிலும் விவரமாய் எழுதியிருக்கிறார். அவர் எழுதிய குறிப்புகளைத் தொகுப்பாய்ச் சேர்த்து கவனிக்குங்கால், 3-ம் நூற்றாண்டில் கிறிஸ்தவ ஞானஸ்நானம் கொண்டாடப்பட்ட முறைமை யாதென்று அறிந்துகொள்வது எளிது:

a ஞானஸ்நானத்துக்குச் செய்யவேண்டிய ஆயத்தமாவது: உபவாசம், கண் விழிப்பு, பாவ அறிக்கை.

b சபைத் தலைவருக்கும் சாட்சிகளுக்கும் முன்னின்று, பிசாசை வெறுத்துவிடல்.

c பரிசுத்தமாக்கும் சக்தி தண்ணீருக்கு உண்டாகுமாறு, அதன்மேல் திரியேக தேவனுடைய திருநாமத்தை ஓதுதல்.

d ஞானஸ்நானம் பெறுபவன் தண்ணீரில் மும்முறை மூழ்குதல்.

e கரையேறினவுடன் அவன்மேல் எண்ணெய் பூசுதல்.

f பரிசுத்த ஆவி இறங்கிவரும்படியான ஜெபத்தோடுகூடக் கைகளை வைக்கும் நியமம்.

g ஐக்கியத்துக்கு அடையாளமாக, புதிதாய் ஞானஸ்நானம் பெற்றவன் பாலையும் தேனையும் உண்ணுதல்.

நம் ஆராதனை முறைமையிலுள்ள பல பகுதிகள் 3-ம் நூற்றாண்டு முறைமையிலும் இருந்தனவென்று கவனிக்கவும்.

அக்காலத்தில், சாதாரணமாய் ஞானஸ்நானங் கொடுப்பது அத்தியக்ஷர்தான்; எனினும், அத்தியக்ஷர் உத்தரவு கொடுத்தால், வேண்டியபொழுது குருமாரும் உதவிக் குருமாரும் இந்தத் தீட்சையைக் கொடுத்து வந்தனர்; அவசரம் ஏற்பட்டால், பட்டம்பெறாத சபையாருக்கும் இந்த உரிமையிருந்தது. ஞானஸ்நானங் கொடுக்கவேண்டிய நாட்களைப்பற்றி சட்டதிட்டங்கள் ஏற்படவில்லை: ஆயினும், உயிர்த்தெழுந்த பண்டிகையிலும், பரிசுத்த ஆவியின் திருநாளிலும் ஞானஸ்நானம் கொடுப்பது உசிதம் என்பது சபையில் பரவிய கொள்கை.

குழந்தைகளுக்கு ஞானத்தீட்சையை அளிப்பதைக் குறித்துத் தெர்துல்லியன் காலத்தில் விவாதம் உண்டாக நேரிட்டது. இந்தச் சர்க்கிரமெந்தின் மூலமாய்ப் பாவமன்னிப்பு ஏற்படும், ஆதலால், ஞானஸ்நானம்பெற்றபின் பெரிய பாவத்துக்குட்பட்டால் அவன் மறுபடியும் பாவ மன்னிப்பை அடைய முடியாது என்ற கொள்கையைத் தெர்துல்லியன்

கொண்டமையால், மனத்திடமில்லாத பிள்ளைகளுக்கு இந்தத் தீட்சையைக் கொடுப்பது அரியாயம் என்றும், பாவம் இன்னதென்று தீர அறிந்து நிதானித்துக்கொண்டிருக்கும் பெரியவர்களுக்கு மாத்திரம் அதைக் கொடுப்பது தகுதி என்றும் பலமாய்ச் சாதித்து வந்தார். சபையில் இந்த உபதேசம் பிரபலமான பின், பலர் சிறு பிராயத்தில் ஞானஸ்நானம் பெறாமல், பாவத்தைப்பற்றிய பயத்தினால் நாள் கடத்திக்கொண்டு, மரணத் தருவாயிலிருக்கும்பொழுதே ஞானஸ்நானம்பெற நேரிட்டது.

9 5-ம் நூற்றாண்டில், ஞானஸ்நானத்தின் சம்பந்தமாக கையாளப்பட்ட சடங்காச்சாரங்கள் எவையென்று இப்போலிற்று இயற்றிய அப்போஸ்தலர் பாரம்பரியம் என்ற நூலில் விவரமாய்க் கூறப்பட்டுள்ளன. இப்போலிற்று 3-ம் நூற்றாண்டில் ரோமாபுரியில் வாழ்ந்து வந்தவர். ஆனாலும் அவர் அந்த நூலை இயற்றியபடியே அது நமக்குக் கிடைக்கவில்லை: பிற்காலத்தவர் சேர்த்த அநுபந்தங்களும் குறிப்புகளும் அதில் அமைந்திருப்பதால், 3-ம் நூற்றாண்டு வழக்கங்களை அது காட்டாமல், 5-ம் நூற்றாண்டு வழக்கங்களை காட்டுகிறதென்று நினைக்கவேண்டியதா யிருக்கிறது. அதில் கூறியுள்ளனவற்றைச் சுருங்க எழுதுவோம்.

a ஞானஸ்நானம்பெற விரும்புவோருடைய நடக்கையைப்பற்றி விசாரணை செய்யப்படும். அது மாசற்றதென்று தெரியவந்தால், அதற்குப் பின் தினந்தோறும் அவர்கள் கேட்கச் சுவிசேஷம் வாசிக்கப்படும். உபதேசத்தைக் கேட்பவர்கள் தினந்தோறும் கைகளை வைக்கும் நியமத்தோடு கூடிய ஆசீர்வாதம் பெறுவார்கள்.

b அவர்கள் புனிதரோ இல்லையோ என்று அறிவதற்கு அத்தியக்ஷர் ஆணையின்பேரில் அவர்களைப் பரிசோதனை செய்வார்.

c வெள்ளிக்கிழமையில், அத்தியக்ஷர் அவர்களை அழைத்து அவர்களை ஜெபம் பண்ணச்சொல்லுவார். பின்பு ஒவ்வொருவர் மேலும் கைகளை வைத்து, சகல அசுத்த ஆவிகளையும் நீக்கித் துரத்திவிடுவார்; பின்பு அவர்கள் மேல் ஊதுவார்; ஜெபம் செய்யவும் சுவிசேஷத்தை வாசிக்கவும் மறுபடியும் அவர்களுக்குக் கட்டளையிடுவார்.

d சனிக்கிழமை கோழி கூவும் நேரத்தில் ஓடும் தண்ணீரில் ஜெபங்கள் சொல்லப்படும்.

e ஞானஸ்நானம் பெறவேண்டியவர்கள் தங்கள் ஆடையைக் கழற்றிபோடுவார்கள்.

f அத்தியக்ஷர் எண்ணெயை ஆசீர்வதித்துப் பரிசுத்தஞ்செய்து, உதவிக் குருமார் கையில் அதை ஒப்புவிப்பார்.

g குருவானவர் ஒவ்வொருவரையும் அழைத்து "சாத்தானே உன்னை வெறுத்து விடுகிறேன்" என்று சொல்லும்படியாகச் சொல்லுவார்.

h அவனவன் மேல் எண்ணெயைப்பூசி, அவனவனை அத்தியக்ஷரிடம் ஒப்புவிப்பார். (இது "வெறுப்பின் தைலம்" ஆம்)

i ஞானத்தீட்சை பெறுபவனோடு கூட உதவிக் குரு ஒருவர் தண்ணீரில் இறங்கி, அவன் சொல்லவேண்டிய விசுவாச அறிக்கையை அவனுக்குப் போதிப்பார்.

j அத்தியக்ஷர் அல்லது குரு, அவன் சிரசின் மேல் கையை வைத்து விசுவாசிக்கிறாயா? விசுவாசிக்கிறாயா? விசுவாசிக்கிறாயா? என்று மும்முறை வினவி அவன் வேண்டியபடி விடைசெய்தால், அவனுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்.

k அவன் கரையேறின உடனே, குருவானவர் அவன் மேல் எண்ணெயைப் பூசுவார் (இது "ஸ்தோத்திரத்தின் தைலம்" ஆம்)

l ஞானஸ்நானம் பெற்றவன் மீண்டும் தன் ஆடையை உடுத்திக்கொள்ளுவான்.

யூதருக்குள் வழங்கிவந்த பல சடங்காச்சாரங்களைத் திருச்சபை ஒப்புக்கொண்டு கையாண்டு வந்ததென்று இதிலிருந்து தெளிவுற விளங்கும். அக்காலத்து ஞானஸ்நான விசேஷத்தின் பகுதிகளாவன:

உபதேசம்
வெறுத்துவிடல்
விசுவாச அறிக்கை
எண்ணெய் பூசுதல்
ஸ்நானம்

எண்ணெய் பூசுதலாகிய ஒன்றைத் தவிர மற்ற நான்கும் இந்நாள் மட்டும் நம் சபையில் வழங்கிவருவதைக் கவனிக்கவும்.

10 5-ம் நூற்றாண்டில், ஆகுஸ்தீன் என்பவருக்கும் பெலேஜியு என்பவருக்கும், கிருபையைப்பற்றியும் ஜன்ம பாவத்தைப்பற்றியும் தர்க்கம் உண்டாயிற்று. ஜன்ம பாவம் இயற்கையாய் நம்மிடத்திலுள்ள ஓர் பலவீனம் என்றும், தேவ கிருபையை முன்னிட்டு மனிதன் தன் சுய பிரயாசத்தினால் நீதிமானாகி இரட்சிப்புச் சம்பாதித்துக்கொள்ளலாமென்றும் பெலேஜியு போதித்திருக்க, ஆகுஸ்தீன் அதை மறுத்து, ஜன்ம பாவம் ஓர் பலவீனம் மாத்திரமல்ல, அது பாரம்பரியமாய் ஆதாமினின்று நம்மிடம் உண்டாயிருக்கும் ஓர் பாவத்தன்மையென்றும், அது தேவகோபாக்கினைக்கு ஏதுகரமாயிருக்குமென்றும், தேவ கிருபை கிடைக்காவிட்டால், மனிதன் எவனுக்கும் இரட்சிப்பு இல்லையென்றும் சாதித்தார். தேவ கிருபை

கிடைப்பது எங்ஙனம் என்றால், பிரதானமாய் அது ஞானஸ்நானத்தின் மூலமாய்க் கிடைக்கும் என்று இரு கட்சியினரும் சம்மதித்தார்கள். குழந்தைகளுக்கு ஞானஸ்நானங் கொடுப்பது அவசியமென்றும் இருவரும் ஒப்புக்கொண்டனர். ஆயினும், பாவம் யாதொன்றும் செய்யாத பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதன் நோக்கம் யாது என்று கேட்டால், இரு கட்சியினருக்கு இருந்த வேறுபாடு துலங்கும். பிள்ளைகள்பெறும் ஞானஸ்நானம் பாவ மன்னிப்புக்கென்றல்ல. பரலோக ராஜ்யத்தின் வாசல் அவர்களுக்குத் திறக்கப்படுவதற்கே என்பது பெலேஜியரின் துணிபு. ஆகுஸ்தீனே; ஞானஸ்நானம் ஒன்றேயாம்: யாருக்குக் கொடுக்கப்பட்டாலும் சரி, பாவ மன்னிப்பு அருளப்படுவது அதன் நோக்கம்; குழந்தைகள் ஒரு பாவத்தைச் செய்யாதிருந்தும், அவர்கள் பிறக்கும் நிமிஷத்தில் ஜன்ம பாவத்தால் அவர்கள் தேவ கோபாக்கினைக்கு உட்பட்டவர்கள்: ஞானஸ்நானம் பெற்றாலன்றி, அவர்கள் அந்தக் கோபாக்கினைக்குத் தப்பவும் இரட்சிப்பை அடையவும் முடியாது என்று போதித்து வந்தார். பெலேஜியர் கொள்கைகளை வேதப்புரட்டு என்று சபையானது கண்டனம்பண்ணி, ஆகுஸ்தீன் உபதேசத்தை மெய்யென்று ஒப்புக்கொண்டு, குழந்தைகள் ஞானஸ்நானத்தில் தேவனிடத்தில் கோரப்படுவது ஜன்ம பாவம் நீங்குதல் என்று அறிக்கையிட்டது.

ரோமான் சபை இதுகாறும் அந்த உபதேசத்தைப் பற்றிக்கொண்டே வருகிறது. 16-ம் நூற்றாண்டிலே, திரென்ற் நகரில் கூடிய சபைச் சங்கத்தில் இதைப்பற்றிய கோட்பாடுகள் திட்டம்பண்ணப்பட்டன: அங்கு செய்யப்பட்ட தீர்மானங்களின் சாராம்சமானது:

ஆதாம் பாவஞ்செய்தபொழுது, தனக்கு இருந்த நீதியை இழந்துவிட்டு, தேவ கோபாக்கினைக்கும் மரணத்திற்கும் சாத்தானின் ஆதீனத்திற்கும் ஆளாகிவிட்டான். ஆதாம் சந்ததியில் பிறந்த ஒவ்வொருவனும் அந்த நிலைமையிலிருக்கிறான். கிறிஸ்துவின் புண்ணியத்தினாலன்றி வேறு எதினாலும் அவன் ஈடேறமுடியாது. ஞானஸ்நானத்தில் பெரியோருக்கும் சிறியோருக்கும் விகற்பமின்றி அந்தப் புண்ணியம் உரித்தாகும். ஆகவே ஞானதீக்ஷை பெற்றவன் அந்த நிமிஷத்தில் பூரண சுத்தியை அடைவான்; தேவ கோபாக்கினை நீங்கியிருக்க, தேவ தயவு அவன்மேல் அமர்ந்திருக்கிறது. ஜன்ம பாவத்தின் பழியும் அசுத்தமும் நீங்கி யிருந்தபோதிலும், பாவத்துக்கு ஏதுகரமாயிருக்கக்கூடிய துர்ஆசை ஞானஸ்நானம் பெற்றவனிடத்திலும் குடிகொண்டிருக்கிறது. ஆயினும் அது பாவக்கிரியையாக முற்றுப் பெற்றாலொழிய, தன்னில் அது தேவ உக்கிர கோபத்திற்கு ஏதுவாயிராது. பிள்ளைகள் ஏன் ஞானஸ்நானம் பெறவேண்டுமென்று கேட்டால் அவர்கள் ஏதோ ஓர் பாவஞ் செய்திருக்கிறதினாலே அல்ல, ஜன்மத்தினால் அவர்களுக்கு ஏற்பட்ட தீட்டு மறு ஜன்மத்தால் நிவிர்த்தியாவதற்கே அவர்கள் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்பதே.

11 ரோமான் சபையில் ஞானஸ்நானம் கொடுக்கும் முறைமை எவ்விதமாய் ஆசரிக்கப்படுமென்று இவ்விடத்தில் சுருக்கமாய் எடுத்துக் காட்டுவோம். இந்த ஆராதனையில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. முதலாம் பகுதி ஞானஸ்நான அபேட்சகனைச் சேர்த்துக்கொள்ளலும், இரண்டாம் பகுதி ஞானஸ்நானங் கொடுத்தலுமேயாகும். பெரியவர் பலர் கிறிஸ்தவர்களாகவேண்டுமென்று முன் வந்துகொண்டிருந்த காலங்களில், அபேட்சனைச் சேர்த்துக்கொள்ளும் ஆராதனை ஞானஸ்நான ஆயத்தத்துக்கு ஆரம்பமாகக் கையாளப்பட்டது. பின்பு மேல்நாடுகளிலுள்ள எல்லாரும் கிறிஸ்தவர்களாய்ச் சேர்க்கப்பட்டபின், எல்லாரும் சிறுவராய் ஞானஸ்நானம் பெற நேரிட்டபோதிலும், அந்த ஆயத்த ஆராதனை நடத்தாமல் விடப்படவில்லை; அது ஞானஸ்நான ஆராதனையோடே சேர்ந்து அதன் முதல் பகுதியாகக் கையாளப்படும். ஆகவே, பின் கூறப்படும் ஆராதனையில் இரண்டு ஆராதனைகள் கலந்திருக்கின்றனவென்று வாசிப்பவர் கவனித்தல்வேண்டும்.

i 1-ம் பகுதி: ஆயத்த ஆராதனை.

(இது ஆலயத்தின் வாசலண்டையில் நடத்தல்வேண்டும்.)

a திருச்சபையினிடம் நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறதென்ன என்று குரு கேட்டபின், அசுத்த ஆவியைத் துரத்திவிடும்படி பிள்ளையின் மேல் ஊதுவார்.

b பிள்ளையுடைய நெற்றியிலும் நெஞ்சிலும் சிலுவை அடையாளத்தை வரைவார்.

c இரண்டு ஜெபங்கள் சொல்லியபின், ஞானத்துக்கு அடையாளமாகிய உப்பு உண்பதற்கு பிள்ளைக்குக் கொடுக்கப்படும்.

ii 2-ம் பகுதி: ஞானஸ்நான ஆராதனை.

a குரு ஆலயத்தில் பிரவேசித்துக் கர்த்தருடைய ஜெபத்தை சொல்லிக்கொண்டே தொட்டியண்டையில் செல்லுவார்.

b உமிழ் நீரால் தம் விரலை நனைத்துக்கொண்டு, பிள்ளையின் காதுகளையும் நாசிகளையும் தொட்டு, 'திறக்கப்படுவாயாக' என்று சொல்லுவார்.

c பிள்ளையின்பேரால் ஞானத்தாய் தகப்பன்மார் பிசாசையும் அதன் ஆடம்பரத்தையும் கிரியைகளையும் வெறுத்துவிடுவார்கள்.

d குரு எண்ணெயைக்கொண்டு பிள்ளையின் நெஞ்சில் சிலுவை அடையாளத்தை வரைவார்.

e ஞானத்தாய் தகப்பன்மார் விசுவாசப் பிரமாணத்தைச் சொல்லுவார்கள்.

f மும்முறை தண்ணீரை வார்த்துக் குரு ஞானஸ்நானங்கொடுப்பார்.

g பிள்ளையின் உச்சந்தலைமேல் குரு எண்ணெய் பூசுவார்.

h பிள்ளையின் தலைமேல் வெண் வஸ்திரம் ஒன்று வைக்கப்படும்.

i பிள்ளையின் கையிலாவது ஞானத்தகப்பன் கையிலாவது பொருத்தியிருக்கிற வர்த்தி ஒன்று கொடுக்கப்படும்.

j குரு ஆசீர்வாதம் கூறுவார்.

இப்போலிற்றுக் காலத்தில் வழங்கிவந்த ஆராதனையையும் இதையும் ஒப்பிட்டுப்பார்த்தால், பூர்வீக காலத்துப்பல சடங்காச்சாரங்கள் இதில் அடங்கி யிருக்கிறதுமல்லாமல், பூர்வ காலத்தில் இல்லாத பலவும் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்று விளங்கும்.

2-ம் அத்தியாயம், ஆங்கில சபை முறைமைகள்

i சீர்திருத்தக்காரரின் நோக்கம்

1 சபைச்சீர்திருத்தத்தைச் செய்வதற்கு இரண்டு முறைகள் உண்டு. இருக்கிறதெல்லாவற்றையும் இடித்து அகற்றி, வேதத்தை மாத்திரம் அஸ்திபாரமாகக்கொண்டு சகலத்தையும் புதிதாய்க் கட்டலாம். ஸ்கொத்லாந்திலுள்ளோர் கையாண்ட முறை இதுதான். இல்லாவிடில், வேதத்தை தூக்கு நூலாகக்கொண்டு, இருக்கிறதையெல்லாம் பரிசோதித்து, கோணலானதை நேர்மையாக்கி, அனுவசியமானதை நீக்கி, இல்லாததைச் சேர்த்து, சபையின் வனப்புக்கேதின்றி விளங்கச்செய்யலாம். இங்கிலாந்தில் சபைச் சீர்திருத்தஞ் செய்தோர் கொண்டுள்ள நோக்கம் இதுதான். ஜெப புஸ்தக முகவுரையில் அவர்கள் இதை மிகவும் துலாம்பரமாய் விளக்கிக் காட்டியிருக்கின்றனர்.

இங்கிலாந்து திருச்சபையானது தன் ஆராதனை முறைமையை முதல் முதல் ஏற்படுத்தின காலமுதற்கொண்டு அம்முறைமையை மாற்றும் விஷயத்தில் ஞானமாயிருந்து வந்திருக்கிறது. அதில் எதையாகிலும் மாற்றுவதற்கு எளிதாய்ச் சம்மதியாமலும் மாற்றக்கூடாதென்று பிடிவாதமாய்ச் சாதிக்காமலும், இரண்டிற்கும் மத்தியில் நிதானமாயிருந்துவந்திருக்கிறது. ...வழங்கும்படி குறித்திருக்கிற தேவாராதனைக்குரிய விசேஷித்த முறைமைகளும் சடங்காச்சாரங்களும் தங்களில் தாமே இன்றியமையாதவைகளல்லவென்றும் மாற்றக்கூடியவைகளென்றும் ஒப்புக்கொள்ளப்படுவதால், தகுந்த முகாந்திரங்களிருந்தால் அந்தந்தக்

காலத்துக்கும் சமயத்துக்கும் தக்கபடி எவ்விதமாய் மாற்றுவது அவசியம் அல்லது தகுதியென்று அதிகாரிகளுக்குக் காணப்படுமோ, அவ்விதமாய் அவைகளை அப்போதைக்கப்போது மாற்றுவது நியாயமே.

இங்கிலாந்து சபை இந்த நிலையின் நின்றுகொண்டிருக்கிறபடியால், அதன் ஆராதனை முறைமைகளை ஆராய்ந்து படிக்க விரும்புவோர் எப்பொழுதும் சரித்திரப்போங்காய் அவற்றை ஆராய்வது அவசியம். திருச்சபையில் முன் நடந்தவையென்று அறிந்து, அவற்றில் ஆங்கில சபை பற்றிக்கொண்டவை யாவையென்றும், மாற்றினவை யாவையென்றும் கவனிக்கின், அச்சபை கொண்டுள்ள நோக்கமும், அதன் ஆராதனை முறைமைகளின் சிறப்பும் ஆராய்வோருக்கு விளங்கும்.

2. நம் ஜெப புஸ்தகத்தில் அடங்கியுள்ள முதலாம் ஞானஸ்நான ஆராதனை:

தேவாலயத்தில் குழந்தைகளுக்கு வெளியரங்கமாகக் கொடுக்கும் ஞானஸ்நான முறைமை.
அதினாலே, ஆங்கில சபையானது குழந்தைகள் ஞானஸ்நானம் மாற்றக் கூடாத நியமங்களில் ஒன்றாக ஏற்றுக்கொண்டிருக்கிறதென்று நாம் அறிந்துகொள்ளலாம். இதற்கு இசைவாய், 27-ம் வேத சித்தாந்தப் பிரமாணத்தில் கூறியதாவது:

குழந்தைகளுக்கும் ஞானஸ்நானங் கொடுக்கிறது கிறிஸ்துவின் நியமத்திற்கு ஏற்றதென்று திருச்சபையிலே எப்பொழுதும்போல அதை அநுசரித்து வரவேண்டும்.

5-ம் நூற்றாண்டு முதல் 16-ம் நூற்றாண்டு வரையிலும் குழந்தைகளுக்கு ஞானஸ்நானங் கொடுப்பது அவசியமென்று, எல்லாக் கிறிஸ்தவர்களும் சம்மதித்தபடியினால், திருச்சபையில் அந்த விஷயத்தைப்பற்றி எவ்விதமான தர்க்கமாவது விவாதமாவது உண்டாகவில்லை. 16-ம் நூற்றாண்டிலே, விசுவாசத்தினால் மாத்திரம் இரட்சிப்புப் பெறப்படுமென்று லுத்தர் உபதேசிக்கத் தொடங்கியபின், குழந்தைகள் ஞானஸ்நானம் அவசியமோ தகுதியோ, என்று சிலர் ஐயப்பட நேரிட்டது. குழந்தைகளிடத்தில் விசுவாசமில்லை, ஆகவே, அவர்கள் பெறும் ஞானஸ்நானத்தினால் பலிக்கும் நன்மை யாது. ஒருவன் தானே கிறிஸ்துவை விசுவாசித்து அந்த விசுவாசத்தை அறிக்கையிட்டு ஞானஸ்நானம் பெற்றால், அது பிரயோஜனமாயிருக்கும் என்பது அவர்கள் கோட்பாடு. இவர்கள் சொன்ன முகாந்தரங்கள் யாவற்றையும் நம் ஜெப புஸ்தகத்தை இயற்றினவர்கள் கவனித்துத் தீர ஆலோசித்து, திருச்சபையிலே எப்பொழுதும்போல குழந்தைகள் ஞானஸ்நானத்தை ஆசரிக்கவேண்டுமென்று தீர்மானித்தார்கள். இதற்கு அவர்கள் சொல்லும் நியாயம் யாது?

நம் திருச்சபையில் செய்வதெல்லாவற்றிற்கும் வேதமே ஆதார மென்றும், வேத சத்தியத்திற்கு முரண்பட்ட யாதொன்றையும் நாம் செய்யலாகாதென்றும், எல்லாரும் உடன்படுவார்கள். ஆகவே, குழந்தைகளுக்கு ஞானஸ்நானங் கொடுக்கக்கூடாதென்று ஒரு சந்தர்ப்பத்தி லாகிலும் குறித்திருந்தால், நாம் இந்த முறைமையைக் கையாளக்கூடாது என்று உடனே விளங்கும். இவ்விஷயத்தைப்பற்றி வேதத்தில் சொல்லப்பட்டதென்ன? அதைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை; குழந்தைகளுக்கு ஞானஸ்நானங் கொடுக்கலாம் என்பது இல்லை: குழந்தைகளுக்கு ஞானஸ்நானங் கொடுக்கக்கூடாதென்பதும் இல்லை. இப்படியிருக்க நாம் செய்யவேண்டுவதென்ன? தேவ சித்தம் இன்னதென்று அறிந்துகொள்ளத் திருச்சபையானது தேவகிருபையை முன்னிட்டு அறிந்துகொள்ள முயலல் வேண்டும். இந்த விஷயத்தைப்பற்றி திட்டமான உபதேசம் இல்லாவிடினும், கவனிக்கத்தக்க சில குறிப்புகள் இருக்கின்றன.

a. கிறிஸ்து மார்க்கம் ஓர் புதிய உடன்படிக்கை. பழைய உடன்படிக்கை யாகிய யூத மார்க்கத்திற்குரிய ஓர் தீட்சை இருந்தது: அது விருத்தசேதனம். புதிய உடன்படிக்கைக்குரிய ஓர் தீட்சை உண்டு; அது ஞானஸ்நானம். இவ்விரண்டையும் ஒப்பிட்டு, பரிசுத்த பவுல் பின்வருமாறு எழுதியுள்ளார்: கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை நீங்கள் அவருக்குள் பெற்றீர்கள்: அது கிறிஸ்துவுக்குரிய விருத்தசேதனம்: அது மாம்ச சரீரத்தைக் களைந்து விடுவதே. ஞானஸ்நானத்தில் அவரோடு அடக்கம் பண்ணப்பட்டிருக்கிறீர்கள்... உங்கள் மீறுதல்களினாலும் மாம்சத்தின் விருத்தசேதனமில்லாமையினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடு உயிர்ப்பித்து...... வெற்றி சிறந்தார். (கொலெ. 2: 11-15)

யூதர் எல்லாரும் தேவனுடைய உடன்படிக்கையைக் கைக்கொள்ளவும் அதன்படி நடக்கவும் அழைக்கப்பட்டார்கள். ஆயினும், ஒன்றும் அறியாத குழந்தைகள் எட்டாம் நாளில் விருத்தசேதனம் பண்ணப்படுவார்கள். பிள்ளைகளின் விசுவாசத்திற்கும் கீழ்படிதலுக்கும் முன் வருவது தேவ அழைப்பும் தேவனுடைய கிருபையுமே. பழைய நியமத்திற்கும் புதிய நியமத்திற்கும் இருக்கும் சம்பந்தத்தைக் கவனித்துத் திருச்சபையானது குழந்தைகளுக்கும் ஞானஸ்நானத்தைக் கொடுக்கும் வழக்கத்தை ஏற்படுத்தினதென்று தோன்றுகிறது. யாம் முன் கூறியபடி, யூதருக்குள்ளும் பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்தல் வழங்கி வந்தது; இது ஆதிக் கிறிஸ்தவர்களுக்கு தெரியாத காரியமன்று.

b யாம் முன் குறித்தபடி, லீதியாளும் அவள் வீட்டாரும், சிறைச்சாலைக்காரனும், அவனுடையவர்கள் அனைவரும் ஞானஸ்நானம் பெற்றபொழுது, அவர்களுக்குள் இருந்த பிள்ளைகளும் ஞானஸ்நானம் பெற்றிருக்கவேண்டும்.

c பிள்ளைகளும் கிருபையின் உடன்படிக்கைக்குப் பங்காளிகள் என்பதற்கு நம்முடைய இரட்சகருடைய திருமொழிகளும், மற்ற வேத வாக்கியங்களும் அத்தாட்சி. நம்முடைய இரட்சகர் குழந்தைகளைத் தம் கைகளில் ஏந்தி ஆசீர்வதித்தபொழுது, தாம் இதைச் செய்ததற்குக் காரணம் இன்னதென்று தெளிவுற உரைத்தார்; இது சாமானியமான ஓர் மனுஷீகப் பட்சத்தினால் செய்யாமல், பரலோக இராஜ்யம் இப்படிப்பட்டவர்களுடையது என்பதினாலேதான் செய்தார். பரலோக ராஜ்யம் சபையிலும் சிரேஷ்டமானது. பரலோக ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களைக் கர்த்தர் பிள்ளைகளுக்குக் கொடுக்க பிரியமாயிருக்க, திருச்சபையின் மூலமாய்க் கிடைக்கும் ஆசீர்வாதங்களை அவர் கொடுக்காமலிருப்பது எப்படி. அல்லாமலும், பரிசுத்த பேதுரு முதன் முதல் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தபொழுது:

> வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் நம்முடைய கடவுளாகிய ஆண்டவர் வரவழைக்கும் யாவருக்கும் உரியது. என்று சொன்னான் (அப். 2:39)

d மேலும், பரிசுத்த பவுல் கொரிந்தியருக்குப் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:

> அவிசுவாசியான புருஷன் தன் மனைவியால் பரிசுத்தமாக்கப்படுகிறான். அவிசுவாசியான மனைவியும் அந்தச் சகோதரனால் பரிசுத்தமாக்கப் படுகிறாள். மற்றப்படி உங்கள் பிள்ளைகள் அசுத்தமாயிருப்பார்கள்; இப்பொழுதோ அவர்கள் பரிசுத்தமாயிருக்கிறார்கள். (1 கொரி. 7:14)

இதில், பிள்ளைகள் பரிசுத்த நிலைமையை எல்லாருக்கும் தெரிந்த விஷயமாகக்கொண்டு, கிறிஸ்தவர்களல்லாத பெற்றோருடைய பரிசுத்தத்தை அநுமானமாக எடுத்துக் காட்டுகிறார். இந்த வாக்கியத்தில் பரிசுத்தம் எனபதின் கருத்து யாது? அது உள்ளான தூய்மையைக் குறிக்க முடியாது: அது குழந்தைகளுக்கும் விசுவாசமில்லாத பெற்றோருக்கும் பொருத்தமானதன்று. மற்றநேக சந்தர்ப்பங்களில் கண்டிருக்கிறபடி, பரிசுத்தம் என்பது தேவனுக்குப் படைக்கப்பட்டது என்று அல்லது தேவனால் அங்கீகரிக்கப்பட்டது என்று பொருள்படும். கிறிஸ்தவர்களுடைய பிள்ளைகள் தேவனால் அங்கீகரிக்கப்பட்டவர்களென்று என்னத்தினால் விளங்கும்? அந்தப் பிள்ளைகள் ஞானஸ்நானம் பெற்றவர்கள் என்று இதனால் திட்டமாய் ரூபகாரப்படுத்த முடியாது. எனினும், பெற்றோரில் ஒருவர் அவிசுவாசியாயிருந்தபோதிலும் அந்தப் பெற்றோருடைய பிள்ளைகளுக்கு ஞானஸ்நானங் கொடுக்கும் பழக்கம் கொரிந்து சபையில் ஏற்பட்டிருக்குமேயாயின், பரிசுத்த பவுல் இவ்வாறு எழுதியது எளிதில் விளங்கும். மற்றப்படி அதைத் தாற்பரியப்படுத்துவது மிகவும் அரிது.

e இதற்கு தொடர்பாக, எந்தப் பிள்ளைகளுக்கு ஞானஸ்நானங் கொடுக்கப்படுமென்று கவனிப்பது அவசியம். இந்து பெற்றோரின் பிள்ளைகளுக்கு நாம் ஞானஸ்நானங் கொடுப்பதுண்டோ. அது ஓர் இடத்திலும் செய்யப்படுவதேயில்லை. கிறிஸ்தவ பெற்றோரின் பிள்ளைகளுக்கு நாம் ஞானஸ்நானங் கொடுக்கும்பொழுது, கர்த்தர் தாமே வித்தியாசம் பாராட்டியிருக்கிறாரென்று கவனித்து அதைச் செய்கிறோம். இந்தப் பிள்ளை இந்து குடும்பத்தில் பிறவாமல் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறக்கச் செய்தது யார்? அது கடவுள் செயல். இப்படியிருப்பதினால், அந்தப் பிள்ளை பிறக்கிறதற்கு முன், ஆண்டவர் அதன்மேல் தமது விசேஷித்த தயவை வைத்து, தமக்கென்று ஊழியஞ் செய்யும்படி அந்தப் பிள்ளையை விசேஷமாய் அழைத்திருக்கிறார். அந்தத் தயவையும் அந்த அழைப்பையும் ஞானஸ்நானமானது பிரத்தியட்சமாய் விளக்கிக்காட்டுகிறது.

f இதுவும் வேதத்துக்கு அநுசரணையாயிருக்கிறது. பெற்றோர் முதலாயினோர் விசுவாசம் பிள்ளைகளுக்குப் பயன்படும் என்பது சுவிசேஷ போதனை. உதாரணமாய், கானானிய ஸ்திரீ அவரிடம் வந்து தன் மகளைச் சொஸ்தமாக்கக் கேட்டபொழுது, அவர் அவளைப் பார்த்து:

அம்மா, உன் விசுவாசம் பெரிது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமானாள். (மத். 15. 25)

அந்த மகளிடம் விசுவாசம் இருந்ததென்று இங்கே சொல்லப்படவில்லை; தாயின் விசுவாசம் அங்கிகரிக்கப்பட்டது. அவள் மகள் ஆரோக்கியமானால் ஒருவனுடைய விசுவாசம் இன்னொருவனுக்கு பிரயோஜனமாயிருக்கலாமென்று இதனால் அறிந்துகொள்ளுவோம். திருச்சபை கண்ட மட்டும் பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறதில்லை. பெற்றோரும் ஞானப் பெற்றோரும், தங்கள் விசுவாசத்தை அறிக்கையிடுவதுமல்லாமல் ஏற்ற காலத்தில் பிள்ளையின் மனதில் விசுவாசம் தோன்றும்படி அதை வளர்க்கும்படியாக வாக்குக்கொடுக்கவேண்டும். அந்த நிபந்தனையின் பேரிலேயே திருச்சபையில் பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்படும். சிலர் அசதியாயிருந்து தங்கள் வாக்கை மீறி நிறைவேற்றாமலிருப்பார்கள். அப்படியானால், சபையின் நோக்கம் நிறைவேறாது; அந்த நோக்கம் இன்னதென்று ஜெப புஸ்தக முறைமையில் துலக்கமாய் விளங்கும்.

g பிள்ளைகளுக்கு ஞானஸ்நானங் கொடுக்கப்படாவிடில், அவை யாருடைய பிள்ளைகள் என்று சொல்லவேண்டும்? அவைகள் தேவாதீனமாய்த் திருச்சபையின் மத்தியில் ஓர் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்திருக்கிறதினால், அவைகளைப் பிசாசின் பிள்ளைகளென்று சொல்வது தேவ தூஷணம் போலாகும். ஞானஸ்நானத்தின் மூலமாய் அவைகள்

உடன்படிக்கையின் பிள்ளைகளாய்ச் சேர்க்கப்படாவிடில், அவைகளைத் தேவனுடைய பிள்ளைகள் என்று சொல்வதைப்பற்றி சந்தேகங்கள் உண்டாகும்.

h புதிய ஏற்பாட்டுக் காலத்தில் குழந்தைகள் ஞானஸ்நானம் திருச்சபையில் கையாளப்பட்டதென்பதற்கு போதிய அத்தாட்சிகள் இல்லை என்ற போதிலும், தொன்றுதொட்டு அது சபையில் வழங்கி வந்ததென்பது நிச்சயம். 3-ம் நூற்றுண்டில் கல்விக் களஞ்சியமாக விளங்கா நின்ற ஓரிஜன் என்பவர் இதைப்பற்றி எழுதியதாவது:

> குழந்தைகளுக்கு ஞானஸ்நானங் கொடுக்கவேண்டும் என்கிற பாரம்பரியத்தை அப்போஸ்தலரிடத்தினின்று திருச்சபையானது பெற்றுக்கொண்டது, என்பதே.

i மார்க்கு 16. 16ல்

> விசுவாசமுடையவனுய் ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்

என்று எழுதியுள்ளதை நாம் கவனிக்கவேண்டும். இதை ஆதாரமாகக் கொண்டு, பிள்ளைகளுக்கு நாம் ஞானஸ்நானங் கொடுக்கக்கூடாதென்றும், பிள்ளைகளாய் ஞானஸ்நானம் பெற்றவர்கள் யாவரும் மறுபடியும் ஞானஸ்நானம் பெறவேண்டுமென்றும், சிலர் தற்காலத்தில் போதித்துச் சபையில் குழப்பங்களை உண்டாக்குவதுண்டு. முதலாவது, இந்த வார்த்தைகள் பேசப்பட்ட சமயம் இன்னதென்று கவனித்தல்வேண்டும். நமது ஆண்டவர் தம் சிஷரைச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி அனுப்பும்பொழுது இந்தக் கட்டளையைக் கொடுத்தார். கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு அவரை அறிவிப்பதைப்பற்றி கூறியிருக்கிறது. பின்பு அந்தப் பிரசங்கத்தின் பயனுகச் சபை உண்டாக நேரிட்டால், அந்தச் சபையில் செய்யவேண்டியதைப்பற்றி யாதொன்றும் சொல்லப்படவில்லை. விசுவாசிகளுக்குப் பிள்ளைகள் பிறந்தால், அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கவேண்டுமோ வேண்டாமோ என்பதைக் குறித்து நமது ஆண்டவர் ஒன்றும் வெளிப்படுத்தவில்லை. பின்பு, விசுவாசமில்லாமல் பெரிய ஆள் ஒருவன் ஞானஸ்நானம் பெற நேரிட்டால், என்ன செய்வோம். ஒருவன் இளமைப் பிராயம் கடந்தவனுய் ஞானஸ்நானம் பெற்றிருக்கிருனென்று வைத்துக்கொள்ளுவோம். பின்பு அவன் நம்மிடத்தில் வந்து நான் ஞானஸ்நானம் பெற்றபொழுது என்னிடத்தில் மெய்யான விசுவாசமில்லை, இப்பொழுது விசுவாசமுண்டு என்று சொன்னுல், மறுபடியும் அவனுக்கு ஞானஸ்நானங் கொடுப்போமோ? மீண்டும் அவன் நம்மிடத்தில் வந்து, இரண்டாம் தரமும், என் விசுவாசம் பூரணப்படவில்லை, இப்பொழுதோ பூரணப்பட்டது என்று சொல்ல நேரிட்டால் மூன்றும்தரம் ஞானஸ்நானங் கொடுப்போமோ? அப்படிச் செய்யலாமென்று ஒருவரும்

சொல்லமாட்டார்கள். இதனால் நாம் அறிந்துகொள்வது என்ன? ஞானஸ்நானத்தில், ஞானஸ்நானம் பெறுபவனிடத்தில் விசுவாசமிருக்க வேண்டும். எனினும், அந்த விசுவாசத்திலும் தேவ அழைப்பும் அவனை ஏற்றுக்கொள்ளும் சபையின் விசுவாசமும் சிரேஷ்டமானவையென்று அறிந்துகொள்ளுவோம்.

j நம் விசுவாசத்தைப்பற்றி வற்புறுத்திப் பேசுவதால் ஏற்படக்கூடிய ஓர் இடையூறு நாம் கவனியாமலிருக்கக்கூடாது. விசுவாசத்தினால் மாத்திரம் இரட்சிக்கப்படுவோமென்று நாம் சொல்லுகிறோம். ஆனாலும், இந்த ஒரே சத்தியத்தைப் பற்றிக்கொண்டு மற்ற சத்தியங்களை மறந்துவிட்டால் தவறுதலான கொள்கைகள் நம் மனதில் உண்டாகக்கூடும். விசுவாசத்தினால் மாத்திரம் இரட்சிக்கப்படுவேன் என்று சொன்னால், இரட்சிப்பு அடைவது என் விசுவாசம் காரணமென்று நினைக்கநேரிடலாம். இது தப்பு. நான் இரட்சிப்பு அடைவதற்கு, தேவனுடைய கிருபையைத் தவிர வேறு எதும் இல்லை. கிறிஸ்துவின் புண்ணியங்கள் அதற்குக் காரணம். எல்லாம் அவருடைய ஈவாகவே இருக்கிறது. நான் தேவனைத் தேடு முன், அவர் என்னைத் தேடிப் பற்பல விதமாய் என்னைத் தம்மிடத்தில் இழுத்துக்கொள்ளப் பிரயாசப்பட்டிருக்கிறார். நான் நன்றிகெட்டவனு யிருக்கையில், அவர் என்னைப் பராமரித்து எண்ணிறந்த நன்மைகளை எனக்கு அருளிச்செய்திருக்கிறார். குழந்தைகள் ஞானஸ்நானம் இந்தச் சத்தியத்தைக் காத்துக்கொண்டு தெளிவாய்க் காண்பிக்கிறது. முதலாவது தேவனுடைய கிருபை, பின்பு மானிட விசுவாசம். சிசுக்கள் ஒன்றையும் அறியாத காலத்தில், பரம பிதா தமது கிருபையினால் அவர்களை அழைத்து, தம் சொந்த பிள்ளைகளாய்க் குறிப்பிட்டு, அவர்கள் உள்ளத்தில் கிரியைசெய்ய தொடங்கியிருக்கிறார். நம் கிறிஸ்தவ ஜீவியத்துக்கு அடிப்படையானது நம் விசுவாசமன்று. அடிப்படையானது தேவ அருளே. நம்மிடத்தில் விசுவாசம் உண்டாகவேண்டும். ஞானஸ்நானம்பெற்ற பிள்ளைகள் தெளிந்த புத்தியடைந்தபின், திடப்படுத்தலைப் பெறும்நேரத்தில் பகிரங்கமாய் அந்த விசுவாசத்தை அறிக்கையிடவேண்டும். ஆயினும், தாங்கள் அவரை விசுவாசித்துப் பரம தந்தையாக ஏற்றுக்கொள்ளுமுன், அவர் தங்களை நேசித்துத் தேடிவந்து சொந்தமாக்கிக்கொள்ள விரும்பினாரென்று அந்தப் பிள்ளைகள் ஒருநாளும் மறக்கலாகாது. அவர் அன்பு சிரவியைப் போன்றது; நம் விசுவாசம் அதன் பிரகாசத்தைப் பிரதிபிம்பிக்கும். எல்லாம் அவராலே உண்டானது என்பது நாம் எப்பொழுதும் கைக்கொள்ளவேண்டிய சத்தியம்.

3 பரிசுத்த ஞானஸ்நானத்தைச் சுவிசேஷத்திற்கு அடுத்த இரண்டு சாக்கிரமெந்துக்களில் ஒன்றாக நம் சபை அநுசரிக்கிறது என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ஆகவே, சாக்கிரமெந்துக்களைக் குறித்து நம் சபையில் வழங்கும் உபதேசம் இன்னதென்று சற்றுக் கவனிப்பது நலம். ரோமான் சபை கொள்கையாவது: சாக்கிரமெந்து தன்னில் தானே திவ்விய

சக்தியுடைத்தாயிற்று. செய்யவேண்டிய கிரியையோடுகூட அதற்கு பொருத்தமான மொழிகளை அதிகாரம் பெற்றவர் பாராயணஞ் செய்தவுடன், சாக்கிரமெந்தின் பயன் பிறந்துவிட்டது; அது வெளிப்படுவதற்குப் பாவம் தடையாயிருக்கலாம்; பயன் உண்டானதைப்பற்றி சந்தேகமில்லை என்பதே. சுயாதீன சபையாரில் சிலர் கொண்டுள்ள சித்தாந்தம் அதற்கு நேர் எதிரிடையாயிருக்கிறது: அதாவது, சாக்கிரமெந்து ஒரு கிரியையையும் செய்கிறதில்லை; கிறிஸ்தவர்கள் யாரென்று வெளிப்படையாய்க் காட்டும் ஓர் அடையாளமாகவும், கிறிஸ்தவர்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்தக் கூடிய ஓர் ஆசரிப்பாகவும் இருக்கிறதேயல்லாமல் அது தேவ சக்தியுடையதன்று என்பது. நம் சபை உபதேசம் இவ்விரண்டிற்கும் நடுமத்தியில் இருக்கிறது. அது சாக்கிரமெந்துக்களை மாய வித்தைக்காரன் ஓதும் மந்திரங்களைப்போல் பாவிக்காமலும், அவற்றிலுள்ள தேவ கிருபையை மறுத்துவிடாமலும், தேவ கிரியை மானிடவிசுவாசம் ஆகிய இரண்டுக்கும் இடங்கொடுக்கிறது. இந்த உபதேசம் 25-ம், 27-ம் வேத சித்தாந்தப் பிரமாணங்களில் அடங்கியுள்ளது.

25 கிறிஸ்துவினால் ஏற்படுத்தப்பட்ட சாக்கிரமெந்துகள் கிறிஸ்து மார்க்கத்தை அனுசரிக்கிறதற்குக் குறிப்படையாளங்களாக மாத்திரம் அல்ல, தேவ பக்திக்கும் தேவன் நம்மிடத்தில் வைத்திருக்கிற பிரியத்துக்கும் நிச்சயமான சாட்சிகளாகவும், பலன்செய்யும் அடையாளங்களாகவும், அவர்மேல் நாம் வைக்கிற விசுவாசத்தை எழுப்பிப் பலப்படுத்துவதற்கு அவர் நமக்குள்ளே அந்தரங்கமாய்க் கிரியை செய்கிற யத்தனங்களாகவும் இருக்கிறது.

பாத்திரமாய்ப் பெற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு மாத்திரம் அவைகள் சுகிர்தப் பிரயோஜனமாய்ப் பலிக்கும்; அவைகளை அபாத்திரமாய்ப் பெறுகிறவர்கள் பரிசுத்த பவுல் சொல்லியிருக்கிறபடி தங்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பை வருவித்துக் கொள்ளுகிறார்கள்.

26 ஞானஸ்நானம் கிறிஸ்து மார்க்கத்தை அனுசரித்துக்கொள்வதற்கு அடையாளமாகவும், கிறிஸ்தவர்களும் கிறிஸ்தவர்களல்லாதவர்களும் இன்னாரென்று காண்பிக்கத்தக்க வேற்றுமைக் குறிப்பாகவும் மாத்திரம் அல்ல, மறுபிறப்புக்கு அடையாளமாகவும் இருக்கிறது. ஞானஸ்நானத்தைப் பெறுகிறவர்களைத் திருச்சபையிலே சேர்த்துக்கொள்ளுகிறதற்கு அது ஒரு யத்தனமாயிருக்கிறது. அதினாலே பாவ மன்னிப்பையும், பரிசுத்த ஆவியினாலே தேவனுக்குப் பிள்ளைகளாவதற்கு ஏற்ற புத்திர சுவிகாரத்தையும் பற்றிய வாக்குத்தத்தங்கள் பிரத்தியட்சமாய்க் கையொப்பமும், முத்திரையும் இட்டதுபோல உறுதியாக்கப்படுகிறது. விசுவாசமும் பலப்படுகிறது. தேவனை நோக்கிச்செய்யும் ஜெபத்தின் மூலமாய்க் கிருபையும் அதிகரிக்கிறது. குழந்தைகளுக்கும் ஞானஸ்நானங்

கொடுக்கிறது கிறிஸ்துவின் நியமத்துக்கு ஏற்றதென்று திருச்சபையிலே எப்பொழுதும்போல அதை அநுசரித்துவரவேண்டும்.

இவற்ருல் விலக்கப்பட்ட தவறுதலான கொள்கைகளாவன:

1 சாக்கிரமெந்துக்கள் வெறும் அடையாளங்கள் (ஸ்விங்லியர்)

2 சாக்கிரமெந்துக்கள் மந்திரம்போல் கிரியைசெய்யும் (ரோமானித்தர்)

3 குழந்தைகளுக்கு ஞானஸ்நானங் கொடுக்கக்கூடாது (பப்திஸ்த முதலானேர்)

ஞானஸ்நானத்தைப்பற்றி கூறியுள்ள சித்தாந்தங்களாவன:

1 அது கிரியைசெய்யும் ஓர் அடையாளம்.

2 அது தேவனுடைய அன்புக்கு அத்தாட்சி.

3 அது மறுபிறப்புக்கு அடையாளம்.

4 அது சபையில் சேர்த்துக்கொள்ளும் யத்தனம்.

5 அது வாக்குத்தத்தங்களுக்கு முத்திரை.

ஆனுலும்,

1 விசுவாசத்தின் மூலமாய் அது பலிக்கும்.

2 அதனுல் கிடைக்கும் கிருபை ஜெபத்தின் மூலமாய் அதிகரிக்கவேண்டும்.

இது வேத சத்தியங்களைத் தழுவியதென்றும், தேவனுக்கு மாத்திரம் மகிமை செலுத்துவதோடுகூட, கிறிஸ்தவன் நிறைவேற்றவேண்டிய கடமையை காட்டுகிறதென்றும் கவனிக்க.

ii 1549-ல் வெளியிட்ட ஞானஸ்நான ஆராதனை முறைமை.

மேற்கூறிய சித்தாந்தங்களை ஆதாரமாகக்கொண்டு, 1549-ல் கிரான்மர் என்பவர் முதல் ஆங்கில ஞானஸ்நான முறைமையை வெளியிட்டார். பல விஷயங்களில் ரோமான் சபையின் முறைமை அநுசரித்து, அனுவசியமான சடங்காசாரங்களைவிட்டு விட்டு, தேவ வசனத்திற்கு இணக்கமாக அதை அமைக்க முயன்றிருந்தாரென்பது பிரத்தியட்சம்.

அந்த முறைமையின் அமைப்பாவது:

1 நுப்ரிக் சட்டம். பழைய காலத்தில் உயிர்த்தெழுந்த பண்டிகையிலும் பரிசுத்த ஆவியின் திருநாளிலும் ஞானஸ்நானங் கொடுப்பது வழக்கம். இந்த வழக்கத்தை மீண்டும் ஏற்படுத்துவதற்குத் தடைகள் இருப்பினும், அதற்கு அனுசாரமாக ஞாயிற்றுக்கிழமைகளிலும் திருநாட்களிலும் ஞானஸ்நானங் கொடுப்பது தகுதி. ஆலயத்தின் வாசலண்டையில் குருவானவர் நின்று இம்முறைமையை வாசிக்கத் தொடங்கவேண்டும்.

2 முகவுரையும் 3 முதல் ஜெபமும்: அதிக விகற்பமின்றி நம் முறைமையில் இருக்கிறபடியே.

4 சிலுவையடையாளம் வரைதல்.

ரோமான் சபை முறைமையை ஒப்பிட்டுக்காண்க. ஆதி காலத்தில், இது ஒருவனை ஞானஸ்நான ஆயத்தக்காரனாக ஏற்றுக்கொள்ளும் அடையாளமென்று கவனிக்கவும். இங்கே, இன்னானே, உன் நெற்றியிலும் உன் நெஞ்சிலும் பரிசுத்த சிலுவையடையாளத்தைப் பெற்றுக்கொள் என்று எழுதியிருக்கிறது.

5 இரண்டாம் சுருக்க ஜெபம். நம் முறைமையிலிருக்கிறபடியே.

6 அசுத்த ஆவியைத் துரத்திவிடுதல். குருவானவர் சொல்லவேண்டியதாவது:

அசுத்த ஆவியே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சரீரத்திற்கும் அவர் திருச்சபைக்கும் அங்கங்களாவதற்கு ஞானஸ்நானம் பெறும்படி அவர் அழைத்தருளிய இந்தப் பிள்ளைகளை நீ விட்டு வெளியேற வேண்டுமென்று பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே நான் உனக்கு கட்டளையிடுகிறேன். ஆதலால், சபிக்கப்பட்ட ஆவியே, உன்மேல் வந்த ஆக்கினையையும் நியாயத்தீர்ப்பையும் நினைத்துக்கொள். உனக்கென்றும் உன் தூதருக்கென்றும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியில் நீ சுட்டெரிக்கப்படும் நாள் சமீபித்தது என்றும் நினைவுகூர். கிறிஸ்து தமது இரத்தத்தினால் மீட்டு ஞானஸ்நானத்தின் மூலமாய்த் தம் சபையில் சேர்த்தருளிய இந்தப் பிள்ளைகள் மேல் வருங்காலத்தில் எவ்வித ஆட்சியையும் செய்யத் துணியாதபடி ஜாக்கிரதையாயிரு.

7 பரிசுத்த சுவிசேஷ வாக்கியமும், 8 அதைப்பற்றிய போதனையும். நம் முறைமையில் இருக்கிறபடியே. ஆனாலும் போதனையின் கடைசி வாக்கியமாவது:

அவருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துவதோடுகூட, கர்த்தர் தாமே அருளிய ஜெபத்தைச் சொல்வோமாக. மேலும், நம் விசுவாசத்திற்கு அறிக்கையாக; விசுவாசப்பிரமாணத்தையும் பாராயணஞ் செய்வோமாக.

9 கர்த்தருடைய ஜெபம் 10 விசுவாசப் பிரமாணம்.

11 பிள்ளைகளை அழைத்தல் குருவானவர் பிள்ளைகளைத் தம்முடன் அழைத்துக்கொண்டு, ஆலயத்தில் பிரவேசித்து, தொட்டிக்கு நேராகச் செல்லுகையில் சொல்லவேண்டியதாவது:

கர்த்தர் தம் திருவீடாகிய திருச்சபையில் உங்களைத் தயவாக ஏற்றுக்கொண்டு, நீங்கள் நித்திய ஜீவனைப்பெறும்படியாக எப்பொழுதும் அதில் உங்களை ஆண்டுகொண்டு காத்தருள்வாராக. ஆமென்.

12 ஞானத் தாய் தகப்பன்மாருக்குப் போதனே. சில விகற்பங்கள் இருப்பினும், பெரும்பான்மையாய் நம் முறைமையில் இருக்கிறபடியே.

13 கேள்விகள். எட்டுக் கேள்விகளும் விடைகளும் இருந்தன: எப்படியெனில், நம் முறைமையிலுள்ள முதலாம் இரண்டாம் கேள்விகள் மும்மூன்று கேள்விகளாய்ப் பிரிந்து குறித்திருந்தன.

7-ம் கேள்வி: உனக்கு வேண்டியதென்ன?

மறுமொழி: ஞானஸ்நானம்வேண்டும்.

8-ம் கேள்வி: ஞானஸ்நானம் பெற விரும்புகிருயா?

மறுமொழி: அதையே விரும்புகிறேன்.

நம் முறைமையிலுள்ள 4-ம் கேள்வி இல்லா திருந்ததைக் கவனிக்கவும். அது 1662ல் வெளியிட்ட ஜெப புஸ்தகத்தில் சேர்க்கப்பட்டது; அதற்கு முன் பரிசுத்த நடக்கையைப்பற்றிய கேள்வி ஞானஸ்நான சம்பந்தமாய்க் கேட்கப்படவேயில்லே.

14 தண்ணீரைப் பிரதிஷ்டை செய்தல்

ரூப்ரிக்: தொட்டியிலுள்ள தண்ணீரைக் குறையாமல் மாதத்துக்கு ஒரு தடவை மாற்றவேண்டும்; புதிதாய் வார்க்கப்பட்ட தண்ணீரில் ஒரு பிள்ளையாவது ஞானஸ்நானம் பெறுவதற்கு முன், பின் வரும் ஜெபங்களைச் சொல்லவேண்டும்:

இரக்கமுள்ள தேவனே, எங்கள் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவே, உமது விசுவாசமுள்ள ஜனங்கள் மறு ஜனனமடைவதற்குத் தண்ணீரைச் சாதனமாக ஏற்படுத்தினவரே, நீர் யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெற்றபொழுது, பரிசுத்த ஆவி புருவைப்போல் உம்மேல் இறங்கி வந்தாரே: நாங்கள் உமது திருநாமத்தைச் சொல்லி அழைக்கும்பொழுது, எங்களுக்குச் சகாயஞ்செய்யும்படி உமது பரிசுத்த ஆவியை அனுப்பியருளும். எல்லாவற்றையும் பரிசுத்தஞ் செய்கிறவரே, இந்த ஞானஸ்நான ஜலத்தைப் பிரதிஷ்டைசெய்து, இதில் ஞானஸ்நானம் பெறுபவர் எல்லாரும் உமது வசனத்தின் வல்லமையினுல் ஆவிக்குரிய மறு ஜனனமடைந்து நித்திய புத்திர சுவிகாரத்தின் பிள்ளைகளாகும்படிக்கு கிருபை செய்தருளும்.

15 சுருக்க ஜெபங்கள்

எட்டுச் சுருக்க ஜெபங்கள் இருந்தன; இவற்றில் 1-ம், 2-ம், 3-ம், 8-ம் சுருக்க ஜெபங்கள் நம் ஜெப புஸ்தக முறைமையிலிருக்கின்றன; ஏனையவைகளை இங்கே எழுதிக்காட்டுவோம்.

iv கர்த்தாவே, உம்மை அறிக்கைசெய்கிற எவரையும் தேவரீர் உமது பரம ராஜ்ஜியத்தில் அறிக்கைசெய்து ஏற்றுக்கொண்டருளும். ஆமென்.

v பாவமும் அக்கிரமும் உம்முடைய தாசரில் ஆட்சிசெய்யாதபடி, இங்கே அவைகளை நிர்மூலமாக்கியருளும். ஆமென்.

vi இதை ஆரம்பமாகக்கொண்டு உமது மந்தையில் சேர்க்கப்படும் யாவரும் எப்பொழுதும் அதில் நிலைத்திருக்கும்படி செய்தருளும். ஆமென்.

vii இம்மையில் உமது நிமித்தம் தங்களை வெறுத்துத்துறந்துவிடும் யாவரும் மறுமையில் நித்திய பொக்கிஷமாகிய உம்மை அடைந்து பெற்றுக்கொள்ளும்படி அநுக்கிரகஞ்செய்யும். ஆமென்

16 ஞானஸ்நானத்துக்கு ஆயத்த ஜெபம். இது நம் முறைமையில் நித்திய ஜீவியாகிய சர்வவல்லமையுள்ள தேவனே என்று தொடங்கும் ஜெபம்; ஆனால் தண்ணீர் முன் பிரதிஷ்டை பண்ணினபடியால், இந்த ஜலத்தைப் பிரதிஷ்டைபண்ணி, முதலானவைகள் 1549 வருடத்து ஜெபத்தில் அடங்கவில்லை.

17 ஞானஸ்நானம். இப்பொழுது இருக்கிறபடியே. ஆனால் ரூப்ரிக் சட்டத்திலுள்ள ஒரு வித்தியாசம் கவனிக்கற்பாலது:

அவர் பிள்ளையை மும்முறை ஜலத்தில் முழுக்காட்டவேண்டும். முதலாவது வலதுபுறமாக, பின்பு இடதுபுறமாக, இறுதியில் முகங்குப்புற அதை முழுக்காட்டவேண்டும்.

சிலுவை அடையாளம் முன் வரையப்பட்டதால், இங்கே வரையும்படி 1549 முறைமையில் எழுதப்படவில்லை.

18 வெண் வஸ்திரம் தரிப்பித்தல்

ரூப்ரிக்: பின்பு ஞானத்தாய் தகப்பன்மார் பிள்ளையின்மேல் தங்கள் கைகளை வைப்பார்கள்: அப்பொழுது குரு அந்தப் பிள்ளைக்கு கிறிஸம் என்று பெயர் வழங்கும் வெண்வஸ்திரத்தைத் தரிப்பித்துச் சொல்லவேண்டியதாவது:

ஞானஸ்நானமாகிய இந்தச் சாக்கிரமேந்தின் மூலமாய் தேவ தயவினால் உனக்கு அருளப்படும் தூய்மைக்கு அடையாளமாக இந்த வெண் வஸ்திரத்தைப் பெற்றுக்கொள். நிலையில்லாத இந்த ஜீவன் ஒழிந்தபின் நித்திய ஜீவனுக்கு நீ பங்காளியாயிருக்கும்பொருட்டு, உன் வாழ்நாளெல்லாம் நீ தூய்மையாய் நடக்கவேண்டுமென்பதற்கு எச்சரிக்கையாக இது உனக்குக் கொடுக்கப்படுகிறது.

19 எண்ணெய் பூசுதல்

ரூப்ரிக்: குரு பிள்ளையின் தலைமேல் எண்ணெய் பூசிச்சொல்ல வேண்டியதாவது:

பரிசுத்த ஆவியினாலும், ஜலத்தினாலும் உனக்கு மறு ஜனனத்தை அருளி உன் பாவங்களெல்லாவற்றையும் மன்னித்திருக்கிற நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய சர்வவல்லமையுள்ள தேவன், தமது பரிசுத்த ஆவியாகிய தைலத்தினால் உன்னை அபிஷேகஞ்செய்து நித்திய ஜீவனாகிய சுதந்தரத்தை உனக்குத்தந்தருள்வாராக. ஆமென்.

20 ஞானத் தாய் தகப்பன்மாருக்குப் போதனை. நம் ஜெப புஸ்தக முறைமையிலிருக்கிறபடியே. ஆனால் திடப்படுத்தலைக் குறிப்பு போதனையாக எழுதப்படாமல், ரூப்ரிக் சட்டமாக எழுதியுள்ளது.

21 முடிவு: இவ்விதமாய்க் கர்த்தருடைய நாமத்தினாலே சபையாரைப் போகவிடுவார்.

iii குழந்தைகளுக்கு ஞானஸ்நானங்கொடுக்கும் முறைமை.

முதல் ஆங்கில ஜெப புஸ்தகத்திலிருந்த முறைமைக்கும் தற்காலத்தில் நம் சபையில் வழங்கி வருகிற முறைமைக்கும் அதிகமான வேறுபாடு இல்லையென்று மேல் எழுதியவைகளை வாசிப்பவருக்கு எளிதில் விளங்கும். அந்த முதல் முறைமை வெளியிட்ட பின், அனாவசியமான சடங்காசாரங்கள் அதில் விடப்பட்டிருக்கின்றனவென்றும் வருங்காலத்துக்கு வேதத்தையே ஆதாரமாகக் கொண்டு, அதில் கற்பிக்கப்பட்டவைகளை மாத்திரம் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றும் பலர் ஆக்ஷேபஞ்செய்து கொண்டிருந்தனர். கிரான்மர் இதைக் கவனித்து, நல்லதென்று ஒப்புக்கொண்டு ,முன்னெழுதிய முறைமையைப் புதிப்பித்து, 1552ல் திருத்திய முறைமையாக வெளியிட்டார். அதன்பின் 1559லும், 1604லும், 1662லும் சில மாற்றங்கள் செய்யப் பட்டிருந்தும், 1552ல் கிரான்மர் வெளியிட்ட முறைமையின்படியே நம் ஆலயங்களில் இந்நாள் மட்டும் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டு வருகிறதென்று சொல்லலாம்.

1552ல் கிரான்மர் செய்த முக்கியமான திருத்தங்களாவன:

i சிலுவை அடையாளம் வரைதல். ஞானஸ்நானத்துக்கு ஆயத்தமாக வழங்காமல், ஞானஸ்நானம் பெற்றவனைத் திருச்சபையில் சேர்த்துக் கொள்ளுவதற்கு அடையாளமாகக் கையாளப்பட்டது.

ii தொட்டியில் ஜலத்தை விடாமல், ஒவ்வொரு ஆராதனை சமயத்திலும் அதைப் பிரதிஷ்டை செய்யும்படி கற்பிக்கப்பட்டது; பிரதிஷ்டை ஜெபஞ் சொன்னவுடன் வேறு எந்த ஜெபத்தையும் இடையில் நுழைவிக்காமல் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும்.

iii கர்த்தருடைய ஜெபம் ஞானஸ்நானங்கொடுத்த பின் சொல்லல் வேண்டும்.

iv வேதத்தில் கற்பிக்கப்படாத சடங்காசாரங்களாகிய வெண்வஸ்திரம்

தரிப்பித்தலும் எண்ணெய் பூசுதலும் விடப்பட்டன.

v ஆராதனை முறைமையெல்லாம் தொட்டியின் அண்டை நின்று நடத்தப்பட வேண்டும்.

இப்பொழுது நம் ஜெப புஸ்தக முறைமைக்குச் சுருக்கமான உரையை எழுதுவோம்:

i 1-ம் ருப்ரிக். ஞானஸ்நானம் ஞாயிற்றுக்கிழமையில் ஆசரிக்கப்படுவது நலம். இதற்கு இரண்டு முகாந்தரங்கள்: முதலாவது, கூடிவரும் சபையார் யாவரும் ஞானஸ்நான விசேஷத்திற்குச் சாட்சிகளாயிருக்கிறார்கள்; இரண்டாவது, பிள்ளைகள் ஞானஸ்நானம் பெறுவதைக் காண்கிறவன் தான் பெற்ற ஞானஸ்நானத்தை நினைத்துக்கொண்டு அப்பொழுது செய்யப்பட்ட வாக்குத்தத்தங்களை நிறைவேற்ற ஏவப்படுவான்.

ii 2-ம் ருப்ரிக். ஞானத் தாய் தகப்பன்மார்: வேறு சில சபைகளில், ஞானத் தாய் தகப்பன்மாரை ஏற்படுத்தும் வழக்கம் இராது. இது அவசியமா? செய்யவேண்டியதெல்லாவற்றையும் பெற்றோர் செய்யக் கூடாதா என்று நம் சபையில் ஆட்சேபிப்பார் உண்டு. நம் சபை இந்தப் பழக்கத்தைக் கைக்கொண்ட பழக்கத்திற்கு இரண்டு முகாந்தரங்கள் உண்டு; முதலாவது, திருச்சபையில் பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்வது சபைக்கு அடுத்த காரியம்: ஆதலால், குருவானவரேயல்லாமல், சபைக்குப் பிரதிநிதிகளாகச் சிலர் அந்த விசேஷத்திற்குச் சாட்சிகளாக ஆஜராயிருப்பது அவசியம்; இரண்டாவது, பெற்றோர் இறந்து போக நேரிட்டால், அல்லது பெற்றோர் கவலையீனமாயிருந்தால், பிள்ளைகளின் ஆவிக்குரிய நலத்தைப் பற்றி சிரத்தை எடுக்கக்கூடிய சிலர் இருப்பது அவசியம்.

தற்காலத்திலுள்ள நம் சபையில், பலர் இந்தப் பொறுப்பு இன்னதென்று உணராமல் பேருக்குமட்டும் ஞானத்தாய் தகப்பன்மாராக முன் வருவதுண்டு. இது நல்லதன்று. ஞானத்தாய் தகப்பன்மார் நிறைவேற்றவேண்டிய கடமைகளாவன:

பிள்ளைக்காக ஒழுங்காய் ஜெபஞ் செய்தல்.

வேண்டியபொழுது ஆவிக்குரிய ஆலோசனை சொல்வது.

பிள்ளை திடப்படுத்தலைப் பெறும்பொழுது, அந்த விசேஷத்துக்கும் சாட்சியாய் வருவது.

இம் மூன்றையும் கவனித்து, இக் கடமைகளை நிறைவேற்றத் தக்கவரை மாத்திரம் ஞானத்தாய் தகப்பன்மாராகப் பெற்றோர் தெரிந்துகொள்வது உசிதம்.

ஞானத்தாய் தகப்பன்மாராக முன்வர லாயக்குள்ளவர் யார் ? இதைப் பற்றி, இந்திய மாகாணத்து அத்தியக்ஷர்மார் 1942 பெப்ருவரி 12ல் பிறப்பித்த 15-ம் தீர்மானத்தைக் காண்க.

ஞானத்தாய் தகப்பன்மாரைப் பற்றி இந்தத் திருச்சபையானது கைக் கொள்ளும் முறைமையாவது:

இந்த மாகாணத்தில் ஞானத் தாய் தகப்பன்மாராக முன்வர லாயக்குள்ளவர்கள் யாரென்று கேட்டால், "1603ல் வெளியிடப்பட்ட 29-ம் கனேனில் அடங்கியுள்ள சட்டத்தை இந்த மகாணத்துத் திருச்சபை அங்கீகரிக்கிறது: பரிசுத்த நற்கருணையாகிய திருப்பந்தியில் சேராத எவரும் ஞானஸ்நானங்கொடுக்கும் சமயத்திலாவது திடப்படுத்தல் கொடுக்கும் சமயத்திலாவது ஞானத்தாய் தகப்பன்மாராக முன் வரலாகாது." ஞானத்தாய் தகப்பன்மார் ஒப்புக்கொள்ளும் உத்திரவாதம் மகா விசேஷமானதென்று சேகரக்குருமார் வற்புறுத்திப் போதிக்கவேண்டும். முன் வருகிற சிலர்அந்த உத்திரவாதத்தை உணராதவர்களாயிருக்கிறார் களென்று அவருக்குத்தோன்றினல். அவர்களை ஞானத்தாய்தகப்பன்மாராக ஏற்றுக்கொள்ளாமலிருப்பதற்கு அவருக்கு அதிகாரமுண்டு.

iii 3-ம் ரூப்ரிக்: ஞானஸ்நானம் எப்பொழுது கொடுக்கப்பட வேண்டுமென்று குறிக்கிறது. காலை ஜெபத்திலாவது, மாலைஜெபத்திலாவது, 2-ம் பாடம் வாசித்தவுடன் ஞானஸ்நான ஆராதனை தொடங்க வேண்டும். இதனுலே தான் இம்முறைமை இறுதியில் ஆசீர்வாத ஜெபம் இராது: இது முடிந்தவுடன், கீர்த்தனம் தொடங்கிக் காலை மாலை ஜெபத்தின் மீதியான பாகம் வழங்க வேண்டும்; அதற்குப் பின் எப்போதும் போல ஆசீர்வாதம் கூறப்படும். இந்த ரூப்ரிக் சட்டம் கையாளப்படுவது நல்லது; பல இடங்களில், பலர் கூடி வரமுடியாத நேரத்தில் இது தனி ஆராதனையாக நடைபெறுவதுண்டு; இது உசிதமன்று; இப்படிச் செய்வதனுல், 1-ம் ரூப்ரிக் சட்டத்தில் குறித்திருக்கிற நோக்கம் நிறைவேறாமற்போகும்.

iv முதலாம் கேள்வி. ஒருவருக்கும் இரண்டு தரம் ஞானஸ்நானம் கொடுக்கப்படுவதில்லை. ஒரு பிள்ளை அவசரத்தினுல் வீட்டில் ஞானஸ்நானம் பெற்றிருந்தால், ஞானஸ்நான முறைமை வழங்காமல், அந்தப் பிள்ளைத் திருச்சபையில் சேர்த்துக் கொள்ளும் முறைமை மாத்திரம் வழங்கும்.

v ஞானஸ்நானத்தைப் பற்றிய ஆரம்பமான போதனை.

ஞானஸ்நானம் பெறுவது அவசியம் என்று இது காட்டுகிறது:

a எல்லாரிடத்திலும் ஜன்ம பாவம் இருக்கிறதினுல்: சங்கீதம் 51:5. இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்: என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள் என்பதை ஒப்பிட்டுப் பார்க்க.

b ஒருவன் ஜலத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராட்சயத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று நம் அருள்நாதர் நீக்கொதேமு என்பவனைப் பார்த்துச் சொல்லியிருக்கிறார். (யோவான் 3:5)

பின்பு ஞானஸ்நானத்தினால் கிடைக்கப் போகிற நன்மைகள் எவை என்று குறிக்கிறது:

a பரிசுத்த ஆவியினால் உண்டாகும் ஞானஸ்நானம். பிள்ளைகள் திடப்படுத்தலைப் பெறும்பொழுது, ஆவியின் வரம் அவர்களுக்கு அருளப்பட வேண்டுமென்று வேண்டுதல் செய்யப்படும். ஆயினும் அதற்கு முன்னதாகவே, ஆவியானவர் அவர்களிடத்தில் கிரியை செய்யத் தொடங்கியிருப்பது அவசியம். அவருடைய செய்யலின்றி, நம்மிடத்தில் சற்றென்கிலும் ஆவிக்குரிய உயிர் உண்டாக முடியாது; மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். (யோவான் 3:6). பரிசுத்த ஆவியின் உடன் கிரியை இல்லாவிடின், ஞானஸ்நானம் வெறும் சடங்காசாரமாய்த் தீரும்.

b திருச்சபையில் சேருதல். திருச்சபை கிறிஸ்துவின் சரீரமாயிருப்பதினால், திருச்சபையில் சேர்க்கப்படுபவன் கிறிஸ்துவில் நிலைத்திருப்பான். இதற்கு இசைய, ஞானோபதேச வினாவிடையில் கிறிஸ்துவின் அவயவமானபொழுது என்று எழுதியுள்ளது.

c ஜீவனுள்ள அவயவமாதல். என்னையல்லாமல் நீங்கள் ஒன்றும் செய்யமுடியாது. ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், கொடியைப்போல வெளியே எறியுண்டு உலர்ந்து போவான் என்று நம் அருள்நாதர் (யோவான் 15 : 5, 6) மொழிந்ததைக் கவனிக்கவும்.

vi முதலாம் ஜெபம். முன் கூறிய நன்மைகள் அருளப்படும்படி இதில் ஜெபஞ் செய்யப்படுகிறது. வேத அத்தாட்சிகள் மூன்று கூறப்படுகின்றன:

a பேழை. எட்டுப் பேர் மாத்திரம் பேழையில் பிரவேசித்து ஜலத்தின் வழியாய்க் காக்கப்பட்டார்கள் என்று 1 பேதுரு 3 : 20 ல் எழுதியுள்ளதைக் காண்க.

b சிவந்த சமுத்திரம். யாத். 14 ஐயும், எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்திலும் சமுத்திரத்திலும் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று 1 கொரி. 10 : 3 ல் எழுதியுள்ளதையும் காண்க.

c நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பெற்ற ஞானஸ்நானம். மத். 3 : 13–17 காண்க.

பின்பு, ஞானஸ்நானத்தினாலாகும் நன்மைகளை அருளிச்செய்யவேண்டுமென்று கர்த்தரை நோக்கி மன்றாடுவோம்:

a. பரிசுத்த ஆவியினுல் ஆகும் சுத்திகரிப்பும், அவருடைய நல்ல ஈவுகளாகிய விசுவாசமும் நன்னம்பிக்கையும் அன்புமே: 1 கொரி. 13:13 காண்க.

b. சுகமாய்க் காக்கப்படுதல்.

c. இறுதி பரியந்தம் நிலைத்திருத்தல். முடிவு பரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான் என்பதையும் காண்க. (மத். 23:13)

vii. இரண்டாம் ஜெபம்: இதில் கர்த்தருடைய நித்தியத்துவத்தை ஆதாரமாகக் கொண்டு, ஞானஸ்நானம் பெறுபவருக்கு அவர் நித்திய ஆசீர்வாதங்களை அருளவேண்டுமென்று வேண்டுதல் செய்வோம். அழிவில்லாத, நித்திய, நித்திய, என்பவற்றைக் கவனிக்கவும். விசுவாச உறுதிக்கென்று, நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அருளிய வாக்குத்தத்தம் (மத். 7:7) கூறப்படுகிறது.

பாவமன்னிப்படையும்படி: ஆங்கிலத்தில் அவன் பாவங்களுக்கு ஏற்ற மன்னிப்படையும்படி என்றிருக்கின்றமையால், இந்த ஜெபம் சிசுக்களுக்கும் ஏனையவருக்கும் பொருத்தமாயிருக்கிறது. ஜென்மப் பாவம் மாத்திரம் இருப்பினும், கிரியைகளாகிய பாவங்களிருப்பினும், எல்லாவற்றையும் மன்னிக்கவேண்டுமென்று கர்த்தரிடம் வேண்டுதல் செய்கிறோம்.

viii சுவிசேஷ வாக்கியம். மார்க்கு 10:13-16. கொலோன் சிரேஷ்ட அத்தியக்ஷரான ஹேர்மான் என்பவர் வெளியிட்ட ஆலோசனை நூலில், இந்தச் சுவிசேஷ வாக்கியத்தை வாசிக்கும்படி குறித்திருந்தது. அந்த நூலைச் கிரான்மர் வாசித்திருந்தார் என்பது நிச்சயம்: அவர் வாங்கி உபயோகித்த பிரதி இந்நாள் மட்டும் லிச்பீல்ட் அத்தியக்ஷாதீனப் புஸ்தக மன்றத்தில் காக்கப்பட்டிருக்கிறது. (சீர்திருத்தக் காலம் என்ற நூலைக் காணவும்.) குழந்தைகளுக்கு நாம் ஞானஸ்நானம் கொடுப்பதற்கு முக்கியமான முகாந்திரம் இந்தப் பாகத்தில் அடங்கியிருக்கிறது: சுபாவத்தினுல் மற்றவர்களைப்போலவே கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம் என்று பரி. பவுல் (எபே. 2:3) எழுதியிருந்தபோதிலும், கர்த்தர் ஒருவருடைய அழிவையும் விரும்பாமல், பிள்ளைகளின்மேல் தயவாயிருக்கிறாரென்பது நிச்சயம். நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து பிள்ளைகளை ஆசீர்வதித்திருக்க, அவர் உடன்படிக்கையின் நலங்களில் நாம் அவர்களுக்குப் பங்கும் பாத்தியதையும் கொடுக்காமலிருப்பது அநியாயம் ஆகும்.

ix சுவிசேஷ வாக்கியத்தைப்பற்றியபோதனை. முன் கூறியவைகளை வற்புறுத்தி எடுத்துக் காட்டுகிறது.

x ஸ்தோத்திர ஜெபம். 1549-ல், குருவானவர் இந்த ஜெபத்தையும் சேர்ந்துச் சொல்லுவார் என்ற ரூப்ரிக் இருந்தது. நம் ஜெப புஸ்தகத்தில் இதைச் சொல்லவேண்டியது யார் என்று குறித்துவிடும் ரூப்ரிக் இல்லை. ஆயினும், ஆங்கில ஜெபத்தின் திட்டமான மொழிபெயர்ப்பாவது:

ஆகையால் நாம் விசுவாசத்தோடும் வணக்கத்தோடும் அவருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறவர்களாய்ச் சொல்லுவோமாக என்பது: ஆகவே, குருவானவரும் சபையாரும் இதைச் சேர்த்து சொல்வது வழக்கம். இந்த அருமையான ஜெபத்தில் மூன்று பகுதிகள் உண்டு:

a ஞானஸ்நானத்தின் சிறப்பு முன் தெளிவுற எடுத்துக் காட்டியிருக்கிறதற்கு இசைவாய், இந்த நன்மைகளில் பங்குபெறும்படி நம்மை அழைத்த கர்த்தருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தல்.

b கிறிஸ்தவர்கள் யாவரும் உறுதியாய் நிலைத்திருக்கும்படி விண்ணப்பம்.

c ஞானஸ்நானம் பெறப்போகிறவர்களுக்கு ஆவியும் மறு ஜனன சுதந்தரமும் அருளப்படவேண்டுமென்று விண்ணப்பம்.

xi ஞானத் தாய் தகப்பன்மாருக்குப் போதனை. பெரியவர்கள் ஞானஸ்நானம் பெறும்பொழுது, தாங்களே இந்தப் பிரதிக்கினைசெய்து கிறிஸ்தவர்களாய் நடக்கும் வாக்குப்பண்ணமுடியாது; பிள்ளைகள் தாங்கள் ஒன்றும்சொல்ல முடியாததால், அவர்கள் பேரால் சாட்சிகள் பிரதிக்கினை செய்யவேண்டும். சபையாரின் விசுவாசத்தையும் அவர்கள் செய்யும் ஜெபங்களையும் தேவன் அங்கீகரித்து, ஞானஸ்நானம் பெறும் பிள்ளைகளையும் அவர் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம். என்றாலும் இந்த உடன்படிக்கையைத் தானே ஒப்புக்கொள்ளத்தக்க வயதாகுமட்டும் என்பவற்றையும் கவனித்தல்வேண்டும். பிள்ளைகளுக்குத் தேவனுடைய கற்பனைகள் கற்பிக்கப்படும் என்ற நம்பிக்கையின் பேரிலேயே, அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கத் திருச்சபையானது சம்மதிக்கிறது. பெற்றோரும் ஞானப் பெற்றோரும் தங்கள் கடமைகளை நிறைவேற்றாமல் அசதியாயிருந்தால், சபையின் நோக்கம் நிறைவேறாது. எந்த வயதில் ஒரு பிள்ளை இந்த உடன்படிக்கை தானே ஒப்புக்கொள்ளக்கூடும்? பெரும்பாலும் பகுத்தறிவும் உத்தரவாத சிந்தையும் 15 வயதுக்குள் பூரணப்பட்டு வாராததினால், அந்த வயதான பிற்பாடுதான் திடப்படுத்தலைக்கொடுப்பது வழக்கம். ஆனால், அதற்கு முன் பிள்ளையின் மனச்சாட்சி கிரியைசெய்யத் தொடங்கும். 3 வயது ஆனவுடன், நன்மை தீமை பகுத்தறிய புத்தி பிள்ளையின் மனதில் உதயமாகத்தலைப்படும். ஆகவே, அந்த வயது முதல், தேவ சித்தம் இன்னதென்றும், அவன் பேரால் செய்யப்பட்ட பிரதிக்கினை இன்னதென்றும் பெரியவர்கள் சிறுவனுக்குப் போதிப்பது அவர்கள்மேல் விழுந்த கடமை.

xii கேள்விகளும் மறுமொழிகளும். பிள்ளைகள் திடப்படுத்தல் சமயத்தில் சொல்லும் வெறுத்துவிடுகிறேன், விசுவாசிக்கிறேன்,

கைக் கொள்ளுவேன், என்பவற்றில் இந்தப் பிரதிக்கினையின் சாராம்சம் அடங்கியுள்ளது:

a ஆவிக்குரிய சத்துருக்களாகிய பிசாசு, உலகம், மாம்சம் வெறுத்துவிடல்.

பிசாசு: ஆண்டவரிடத்தில் தன் முழு இருதயத்தோடு அன்பு கூறுகிறவன் பிசாசின் அடிமைத்தனத்தினின்று நீங்கலாக்கப் பட்டிருக்கிறான்.

உலகம்: பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம் என்று நம் ஆண்டவர் சொல்லி (மத். 6:19) உலக சிநேகத்தைக் கண்டனம் பண்ணினார். அதற்கு இசைய, உலக சிநேகம் கடவுளுக்கு விரோதமான பகையென்று உங்களுக்குத் தெரியாதா? ஆகையால் உலகத்துக்கு சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் கடவுளுக்குப் பகைவனாகிறான் என்று பரி. யாக்கோபும், (யாக். 4:4) உலகத்திலும் உலகத்திலுள்ளவை களிலும் அன்பு கூராதிருங்கள். ஒருவன் உலகத்தில் அன்பு கூறுவானானால் பிதாவின் அன்பு அவனிடம் இல்லை என்று பரி. யோவானும் (1 யோ. 2:15) எழுதியிருக்கிறார்கள்.

மாம்சம்: மானிட சுபாவத்திலுள்ள கீழான பாகம். வார்த்தையானவர் மாம்சமானார் என்று (யோ. 1:14) நமது ஆண்டவருடைய மனுஷாவதாரத்தைப்பற்றி சொல்லியிருக்கிறதினால், மாம்சம் தன்னில் தானே பாவமுள்ளது என்று சொல்லலாகாது. எனினும் அது இயற்கையால் அழிவுக்குரியது; தேவனுக்குரியவைகளை நாடாமல் தனக்குரியவைகளை நாடினால், அது பாவத்துக்கு உறைவிடமாகவும் அழிவுக்கு ஏதுகரமாகவும் இருக்கும். ஆதலால் பரி. பவுல் மாம்ச சிந்தை மரணம்.........மாம்ச சிந்தை கடவுளுக்கு விரோதமான பகை; அது கடவுளின் நியாயப் பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும் கீழ்ப்படிய முடியாமலும் இருக்கிறது; மாம்சத்துக்குள்ளானவர்கள் கடவுளுக்குப் பிரியமாயிருக்க முடியாது என்று எழுதினார். (ரோமர் 8:6-8).

b விசுவாசம். ஆதி முதற்கொண்டு, ஞானஸ்நானம் பெறுபவர்கள் விசுவாச அறிக்கை செய்வது வழக்கம் என்று முன் எழுதியுள்ளோம். அப்போஸ்தலருடைய விசுவாசப் பிரமாணம் ஞானஸ்நானம் பெறுவோர் சொல்லும் விசுவாச அறிக்கையாக ரோமாபுரியில் 2-ம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதென்று நினைக்கிறதற்கு ஏதுக்களுண்டு.

c விருப்பம். ஒருவனுக்கும் அவன் இஷ்டத்துக்கு விரோதமாய் ஞானஸ்நானம் கொடுத்தலாகாது. சில வேளைகளில், அரசியல் அதிகாரிகள்

ஆக்ஞையால், கட்டாய ஞானஸ்நானங்கள் நடைபெற்றதுண்டு. அவற்றால் திருச்சபையில் விளைந்த தீங்குகள் கொஞ்சமல்ல.

d நடத்தல். 1662 ல் வெளியிட்ட புஸ்தகத்தில் இந்தக் கேள்வியும் மறு மொழியும் முதல்முதல் சேர்க்கப்பட்டன. பருவங்கடந்த முறைமையில் தேவ ஒத்தாசையினால் அப்படியே நடந்துகொள்ளுவேன் என்ற மறுமொழி சிறந்தது. தேவ ஒத்தாசையின்றி ஒருவரும் இந்தப் பிரதிக்கினையைக் கைக்கொண்டு நிறைவேற்ற முடியாது.

xiii சுருக்க ஜெபங்கள். 1549 ல் இருந்த எட்டு ஜெபங்களில் நான்கு மாத்திரம் நம் தற்கால முறைமையில் காணப்படுகின்றன; விடப் பட்டவைகள் மறுபடியும் சேர்க்கப்பட்டால், நம் முறைமை அதிக சிறப்புடைத்தாய் இலங்கும். இந்த ஜெபங்கள் பிரதிக்கினைக்குப் பின் மிகவும் பொருத்தமாய்ச் சொல்லப்படும்; அந்தப் பிரதிக்கினையைக் கைக் கொள்வதற்கான தேவ கிருபை அருளப்பட வேண்டுமென்பது இந்தப் பிரார்த்தனைகளின் சாராம்சம்.

a 1-ம் ஜெபம்: பழையவை கழிந்து போதல்.

பழைய ஆதாம் என்பதை விளக்குவதற்கு, ரோமர் 5: 12-21, 1 கொரி. 15 : 45 - 54, கொலோ. 3 : 9–10.

b 2-ம் ஜெபம்: மாம்சத்தை ஆவி அடக்குவதற்கு.

c 3-ம் ஜெபம்: ஆவிக்குரிய சத்துருக்களை வெல்லுவதற்கு.

d 4-ம் ஜெபம்: ஞானஸ்நானம் பெறுபவர் யாவரும் பரிசுத்தத்தை அணிந்து கொள்வதற்கு.

xiv பிரதிஷ்டை ஜெபம்: இதில் மூன்று பகுதிகள் உண்டு:

a வேத அத்தாட்சிகள்:

யோ. 19 : 34: போர்ச் சேவகரில் ஒருவன் அவர் விலாவில் ஈட்டி யால் குத்தினன்; உடனே இரத்தமும் தண்ணீரும் வெளிப்பட்டது.

மத். 28 : 19 - 20: நீங்கள் புறப்பட்டுப் போய்ச் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்; பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திற் குள்ளாக அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசியுங்கள்.

b தண்ணீரைப் பிரதிஷ்டை செய்தல். ஜலமானது பரிசுத்தமடைய முடியாது, பரிசுத்த நோக்கத்திற்கென்று அது பிரத்தியேகம் பண்ணப் படலாம். ஞானோபதேச வினா விடையில் கண்டிருக்கிறபடி,

ஜலமானது காணப்படாத உள்ளான கிருபைக்குப் புறம்பான அடையாளமாயிருக்கிறது. தம் கிருபையுள்ள கிரியைகளை நடப்பிப்ப தற்குத் தம் சிருஷ்டிப் பொருட்களைக் கர்த்தர் ஏற்படுத்தச் சித்தங் கொண்டிருக்கிறார். இவ்வித சாதனங்களில்லாமல் அவர் கிரியை செய்ய வல்லவர் என்பது நிச்சயம்: ஆனாலும் நம் விசுவாசப் பலவீனத்திற்கு இரங்கி, அவற்றைத் தம் இரகசிய கிரியைகளுக்கு அடையாளமாக ஏற்படுத்தியிருக்கிறார்.

C ஞானஸ்நானம் பெறும் பிள்ளைக்காக வேண்டுதல்.
கிருபையும் நிலைவரமும் அருளப்பட வேண்டுதல் செய்யப்படுகிறது.

XV ஞானஸ்நானம்:

ரூப்ரிக் சட்டங்களைக் கவனித்து வாசிக்கவும். குருவானவர் பிள்ளையைப் பத்திரமாய் முழுக்காட்டி ஞானஸ்நானம் கொடுக்கவேண்டும் என்பது சபைச் சட்டம். பின்பு, பிள்ளை பலவீனமாயிருக்கிறதென்று அவர்கள் சொன்னால், அதன் மேல் ஜலத்தை வார்க்கிறதே போதும் என்று சேர்த்திருக்கிறது. முழுக்காட்டல் சட்டம், ஜலத்தை வார்த்தல் புறநடை. இங்கிலாந்தில் 16-ம் நூற்றாண்டு வரை பிள்ளைகளை முழுக்காட்டி ஞானஸ்நானங் கொடுக்கும் வழக்கம் ஒழியவில்லை; அதற்குப் பின், ஏற்படக் கூடிய சில அசௌகரியங்களினிமித்தம், ஜலத்தை வார்க்கும் நியமம் படிப்படியாய் உள்ளே நுழைந்துவிட்டது. இந்தச் சபையில் அதுதான் சாதாரணம் எனினும், தொட்டி வேண்டுமாயின் பிள்ளையை முழுக்காட்டி ஞானஸ்நானங் கொடுக்கத்தக்க அளவுடைத்தாயிருப்பது அவசியமென்று கவனிக்கவும். பல ஆலயங்களிலுள்ள தொட்டிகள் வெகுச் சிறியதாயிருப்பது துக்ககரமான காரியம். தொட்டியில்லாத சில ஆலயங்களில், ஞான ஸ்நானத்துக்கென்று கண்ணாடி டம்ளர் மேசையின்மேல் வைக்கப் பட்டதைக் கண்டு பன்முறை யாம் வருந்த நேரிட்டதுண்டு. முழுக்கு ஸ்நானம் அவசியம் என்று சிலர் தற்காலத்தில் சாதிக்கிறார்கள்: வேதத்தில் அதற்குப் போதிய அத்தாட்சி இல்லை. ஆதிச் சபையில் சிலர் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றனர் என்பது நிச்சயம். ஆனாலும், புராதன நூல்களை யும் படங்களையும் பார்த்தால், பெரும்பாலும் ஞானஸ்நானம் பெறுபவர் ஆற்றிலாவது, ஊற்றிலாவது நின்றுகொண்டிருக்க ஞானஸ்நானங் கொடுப்பவர் கையிலாகிலும் ஓர் பாத்திரத்திலாகிலும் ஜலத்தை அள்ளி அவன் சிரசின்மேல் வார்ப்பது வழக்கமென விளங்கும். ஞானஸ்நானத்துக்கு ஜலம் அவசியம் என்பது திருச்சபையின் ஐதீகம்; இவ்வளவு தண்ணீர் அவசியம் அல்லது இவ்விதமாய் மாத்திரம் ஞானஸ்நானங் கொடுக்கவேண்டு மென்று திட்டம் பண்ணச் சபையானது துணியவில்லை.

ஞானஸ்நானம் கொடுக்கையில் குருவானவர் செய்யவேண்டிய மூன்று காரியங்கள் உண்டு:

a கிறிஸ்தவ பேரை அளித்தல்.

b திரியேக தேவனுடைய நாமத்தைக் கூறுதல். இது இன்றியமையாதது. இந்தத் திருநாமத்தைச் சொல்லாமல் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டால் அது செல்லாது.
ஏனெனில்:

இரட்சண்யத்திற்கு ஆதிகாரணர் பிதாவானவர்.

இரட்சண்யத்தைச் சம்பாதித்தவர் குமாரனாகிய இயேசுகிறிஸ்து.

விசுவாசியின் இருதயத்தில் இரட்சண்யம் பயன்படச் செய்பவர் பரிசுத்த ஆவியானவர்.

இதை விளக்குவதற்கு அந்தத் திரியேக நாமம் கூறப்படுவது அவசியம்.

நாமத்திற்குள்ளாக என்று மொழி பெயர்த்தால் பொருந்தும்; ஏனெனில், மானிட ஆன்மாவுக்கும் தேவனுக்கும் இருக்கவேண்டிய ஐக்கியத்தை ஞானஸ்நானம் காட்டும்; கிறிஸ்துவின் திருச்சரீரத்தில் ஓர் அங்கமாய்ச் சேர்ந்து, ஒரு நாளும் அதை விட்டுப் பிரியாதபடி அந்தப் பிள்ளை ஞானஸ்நானம் பெறுகிறது.

xvi திருச்சபையில் சேர்த்துக்கொள்ளல். ஆதியில், சிலுவை அடையாளம் வரைதல் ஞானஸ்நானத்துக்கு ஆயத்தமான சடங்காசாரங்களில் ஒன்று என்று முன் எழுதியுள்ளோம். 1552ல், ஞானஸ்நானம் பெற்றவனைக் காணக்கூடிய இம்மைச் சபையில் சேர்த்துக்கொள்ளும் ஓர் அடையாளமாக மாற்றப்பட்டது. சிலுவை அடையாளம் ஓர் முத்திரை போன்றது; அரசரின் முத்திரை எதின்மேல் இடப்பட்டிருக்கிறதோ, அது அரசருக்குரியதென்று விளங்கும்; அது போலவே, பிள்ளையின் நெற்றியில் சிலுவை அடையாளம் வரைவதால், இந்தப் பிள்ளை கிறிஸ்துவுக்குச் சொந்தமென்று சபையானது பிரத்தியட்சமாய்க் காட்டுகிறது. ரோமான் சபையில், சிலுவை அடையாளம் வரைதல் பற்பல ஆராதனை முறைமைகளில் வழங்கி வருகிறது; உதாரணமாய், குருப் பட்டாபிஷேகம், பரிசுத்த நற்கருணையிலுள்ள பிரதிஷ்டை, ஞானஸ்நான ஆராதனையிலுள்ள ஜலப்பிரதிஷ்டை, எண்ணெ பூசுதல் முதலியன. நம் சபையிலோ, இந்த ஒரே சந்தர்ப்பத்திலேயன்றி, வேறெந்தச் சந்தர்ப்பத்திலாவது ஆராதனை முறைமையிலாவது அப்படிச் செய்யவேண்டும் என்கிற சட்டம் இராது. சிலர் வெவ்வேறு நேரங்களில் சிலுவை வரைதலும் வரைந்து கொள்ளுதலுமுண்டு. அது சபைச் சட்டத்துக்கு விரோதமானதன்று; ஆனால் அப்படிச் செய்வதற்கு சபையின் அதிகாரமில்லை.

xvii ஜெப அழைத்தல். இந்தப் பிள்ளை மறுஜென்மம் அடைந்து இந்தப் பதங்களைப்பற்றி திருச்சபையில் பெரிய தர்க்கங்களும் விவாதங்களும் நடைபெற்றுள்ளன. "பிள்ளை ஞானஸ்நானத்தினால் மறு ஜன்மம்

அடைந்திருந்தால், அவன் மனந்திரும்ப அவசியமென்ன, குணப்பட அவசியமென்ன, பரிசுத்தமாய் நடக்க அவசியம் என்ன?" என்பது பலர் கூறும் ஆட்சேபம். மறு ஜன்மம், என்பதற்கும் மனந்திரும்புதல் என்பதற்கும் இருக்கிற வித்தியாசத்தைப் பார்ப்போமானுல், சந்தேகம் தீரும். மறு ஜென்மம் தெய்வ செயலைக்குறிக்கும். மனந்திரும்புதல், குணப்படுதல் முதலியவை மானிட செயலைக் குறிக்கும். ஞானஸ்நானத்தில் கர்த்தர், தம் மிகுந்த தயவினுல் தம் பரம ஈவையும் நித்திய ஜீவனையும் அருளுகிருர்; ஆயினும் மானிட விசுவாசத்தின் மூலமாய் அதைப் பெற்றுக்கொண்டு அந்த நன்மைகளை அநுபவிக்கவேண்டும். ஒருவன் இன்னெருவனுக்கு ஓர் நிலத்தை எழுதிக்கொடுத்தால், வாங்கிக் கொள்ளுகிறவன் அதைப்பற்றிய தஸ்தாவேசு தன் கையில் எடுத்துக்கொண்டவுடனே, அந்த நிலம் அவனுடையதாகும்; பத்து வருடங்களாய் அவன் அதைப் போய்ப் பார்க்காதிருந்தும், அது அவனுக்கே உரியதாகும், வேறெருவருக்கும் உரியதாக முடியாது; ஆனுல் அது அவனுக்குப் பயன்படவில்லை, பெற்றுக் கொள்ளாதவன் போலிருக்கிருன். ஞானஸ்நானம் பெற்ற இளைஞரை மனந்திரும்பவும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவும் நாம் ஏவும்பொழுது, அது உனக்கு இல்லாததைப் பெற்றுக்கொள்ள நீ பிரயாசைப்படு என்று சொன்னுற்போல் அல்ல, உனக்குள்ளதைப் பிரயோஜனப்படுத்த நீ ஜாக்கிரதையாயிரு என்று சொல்வது போலிருக்கும். ஜெப புஸ்தகத்தை இயற்றினவர்கள் எப்பொழுதும் தேவ செயலை முக்கியப்படுத்தி எழுதுவது வழக்கம். ஆதலால், அவருடைய ஒப்பற்ற கருணையையும் வல்லமையையும் விளக்கிக் காட்ட வேண்டுமென்று, வேதத்துக்கு இசைவாய், (தீத். 3: 5) இந்தப் பிள்ளை மறு ஜன்மம் அடைந்து என்று எழுதினுர்கள்.

xviii கர்த்தருடைய ஜெபம். நம் ஜெபபுஸ்தகத்திலுள்ள ஒவ்வொரு ஆராதனை முறைமையிலும் கர்த்தருடைய ஜெபம் வழங்கும். அந்தந்த ஆராதனையிலும் விசேஷமான சடங்காசாரம் நிறைவேறின பின் அது வழங்கும். பரிசுத்த நற்கருணை ஆராதனையில், எல்லாரும் திருப்பந்தியில் சேர்ந்த பின், ஸ்தோத்திரப் பகுதிக்கு ஆரம்பமாக அது வழங்கும். அதுபோலவே, ஞானஸ்நானங் கொடுத்துத் தீர்ந்தவுடனே, ஸ்தோத்திரப் பகுதியின் முதல் அம்சம் இங்கே அதைச் சொல்லவேண்டுமென்று குறித்திருக்கிறது. பிள்ளைகள் தேவனுடைய பிள்ளைகளாய்ச் சேர்ந்திருக்கின்றமையால், எங்கள் பிதாவே என்று தொடங்குவது அதிகப் பொருத்தமானதென்று கவனிக்கவும்.

xix இறுதி ஜெபம்.

இதிலுள்ள வேத அத்தாட்சிகள் கவனிக்கவும்:

1 பேதுரு 2 : 24. நாம் பாவங்களுக்குச் செத்து நீதிக்குப் பிழைத்திருக்கும்படி

ரோமர் 6 : 4, 5, 6 நமது பழையமனுஷன் அவரோடு சிலுவையில் அறையப்பட்டது முதலியன.

xx, xxi சாட்சிகளுக்குப் போதனைகள்.

ஞானஸ்நானம் பெற்ற பிள்ளைகள் கிறிஸ்தவ பிள்ளைகளாய் வளர்க்கப் படுவார்கள் என்ற நம்பிக்கையின் பேரிலேயே, சபையானது பிள்ளைகளுக்கு ஞானஸ்நானங்கொடுக்கிறது. இதைப்பற்றி சிரத்தை எடுக்க ஞானத்தாய் தகப்பன்மார் கடமைப்பட்டவர்களாயிருக்கிறார்கள். அதற்காக அவர்கள் செய்ய வேண்டுவன:

a ஞானஸ்நான பிரதிக்கினை இன்னதென்று பிள்ளைக்குப் போதித்தல்.

b அவனுக்கு வேதப் போதனை முதலியவை புகட்டப்படும்படி பார்த்துக்கொள்ளல்.

c தேவ பக்திக்கேதுவாகப் பிள்ளை வீட்டிலும் பள்ளிக்கூடத்திலும் ஊரிலும் வளர்க்கப்படும்படி கவனித்தல்.

d திடப்படுத்தலைப் பெறும்படி அத்தியக்ஷரிடத்தில் கொண்டு வருதல்.

ஞானத்தாய் தகப்பன்மார் இதை ஏற்றவாறு நிறைவேற்றும்படி ஞானஸ்நானம் ஏற்படுத்தப்பட்ட நோக்கம் இன்னதென்று அவர்கள் எப்பொழுதும் நினைவு கூறவேண்டும்.

xxii இறுதி ரூப்ரிக் சட்டங்கள்.

a குழந்தைகளாய் இறந்துபோகும் பிள்ளைகளின் கதியைப்பற்றியது. ஓர் குழந்தை இறந்துபோனால், அந்த மரணம் தேவன் அந்தப் பிள்ளையின் மேலாவது அதன் பெற்றோரின் மேலாவது வைத்த கோபத்துக்கு அத்தாட்சியாகுமோ? இல்லவே இல்லை. தம் பரலோக ராஜ்யத்தில் பிள்ளைகளும் இருக்கவேண்டுமென்று சித்தங்கொண்டிருக்கிறார்; ஆதலால், அவர்களையும் தம்மிடத்தில் வர அழைக்கிறார். ஆகவே அந்தக் குழந்தைகளிடத்தில் உயிருள்ள விசுவாசம் உண்டாகாதிருந்தும், அவர்கள் தேவனுடைய ராஜ்யத்துக்குச் சுதந்தரவாளிகளாவார்களென்று நாம் உறுதியாய் விசுவாசிக்கலாம். இதற்குத் திட்டமான வேத அத்தாட்சியில்லை; தேவன் பிள்ளைகளின்மேல் கைகளை வைத்த வாக்கியங்களை இதற்கும் அத்தாட்சியாகக் கொள்ளலாம்.

2-ம் ருப்ரிக். சிலுவை அடையாளம். 16-ம், 17-ம் நூற்றாண்டுகளில் சுத்தாங்கம் என்ற கட்சியைச் சேர்ந்தவர்கள் இதைப்பற்றி பலமாய் ஆட்சேபஞ்சொல்லி வந்தார்கள். இது வேதத்தில் கற்பிக்கப்படாதது, வீண் சடங்காசாரம், அவபக்திக்கு ஏதுகரம் என்பது அவர்கள் செய்த

ஆட்சேபங்களின் சாராம்சம். இந்த ஆட்சேபங்களைத் தாக்கும்படி, 1604ல் வெளியிடப்பட்ட கனோன் சட்டப் புஸ்தகத்திலுள்ள 30-ம் சட்டத்தில் சிலுவை அடையாளம் வரையும் வழக்கம் சபையில் கையாள வேண்டுமென்பதை உறுதிப்படுத்தும் முகாந்தரங்கள் விபரமாய் எழுதப் பட்டன. அவற்றில் விசேஷமானவைகளாவன:

a பாப்புமாருடைய கேடான உபதேசங்களினால் ரோமான் சபை கெட்டுப்போன பின், சிலுவை அடையாளம் வரையும் வழக்கம் மிகவும் தவறுதலாய் உபயோகிக்கப்பட்டதென்று ஒத்துக்கொள்ளல் வேண்டும். ஆயினும் சிலர் யாதாமோன்றைத் தவறுதலாய் உபயோகப்படுத்தினாலும் கிரமமாய் அதை உபயோகப்படுத்துவதை அவர்களின் அக்கிரமம் நிராகரிக்க முடியாது.

b ஞானஸ்நானம் கொடுக்கும் நோக்கில் சிலுவை அடையாளம் வரைதல் அந்தச் சாக்கிரமேந்தை ஆசரிப்பதற்கு இன்றியமையாததன்று. (அந்தப் பழக்கமில்லாத மெதடிஸ்த், பப்திஸ்த் முதலிய சபைகளில் ஞான ஸ்நானம் பெற்றவர்கள் நம் சபையில் சேர விரும்பினால், அவர்களுக்கு நாம் மறுபடியும் ஞானஸ்நானம் கொடுக்கமாட்டோம். நம் சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு ரோமானித்தர் மறுபடியும் ஞானஸ்நானங் கொடுப்பது பொதுவான திருச்சபையின் சட்டங்களுக்கும் அவர்கள் சபையின் சட்டங்களுக்கும் விரோதமான பாதகம்.)

c ஞானஸ்நானம் பெற்ற பிள்ளை, சிலுவை அடையாளம் வரையப் படுவதற்கு முன் அந்த ஞானஸ்நானத்தின் பயனாகத் திருச்சபையின் பூரண அங்கத்தினனாகச் சேர்ந்ததுண்டு; அதைச் சேர்த்துக் கொள்வதற்குச் சிலுவை அடையாளத்தினிடத்தில் அற்புதமான சக்தி யாதொன்றும் கிடையாது.

d கிறிஸ்துவை ஏற்றவாறு விசுவாசித்த யாவருக்கும் அவருடைய சிலுவையும் அதை நினைவு கூறுதலும் மிகவும் அருமையாயிருப்பதால், ஞானஸ்நானங் கொடுக்கும் முறைமையில் இந்த அடையாளமிருக்க வேண்டுமென்று ஆங்கில சபையின் துணிபு; ஆதிக் காலத்திலிருந்த அப்போஸ்தல திருச்சபையில் வழங்கின வழக்கத்துக்கு இது அநுசாரணை யாயிருக்கிறது. இது கிறிஸ்தவர்கள் ஒப்புக்கொள்ளக்கூடிய புறம்பான சடங்காசாரம். சிலுவையில் அறையுண்டு மரணமடைந்த கர்த்தரைச் சேவிக்கும்படி பிள்ளை பிரதிஷ்டை செய்யப்பட்டதற்கு இது விசேஷமான ஓர் சின்னமாகவே இருக்கிறது.

ஓர் சடங்காசாரம் உள்ளபடி அவபக்திக்காவது மூட பக்திக்காவது ஏதுகரமாயிருக்குமென்று தோன்றினால் அதை விலக்கவேண்டும், அன்றேல் அதை ஏற்றுக்கொள்ளலாம் என்பது நம் ஜெபபுஸ்தகத்தை

இயற்றினவர்கள் இப்படிப்பட்ட காரியங்களைப்பற்றி கொண்டுள்ள அபிப்பிராயம்.

## iii வீடுகளில் பிள்ளைகளுக்குத் தனிமையாய்க் கொடுக்கும் ஞானஸ்நான முறைமை

ஞானஸ்நானம் பெற விரும்புவோர் ஆலயத்துக்கு வந்து சபைக்கு முன் நின்று ஞானஸ்நானம் பெற முடியாமற்போனால், மற்ற இடங்களிலும் வீடுகளிலும் அவர்கள் ஞானஸ்நானம் பெறலாமா? என்ற சந்தேகம் ஆதிக் காலத்தில் திருச்சபையில் உண்டாயிற்று. ஆலயத்தில் ஞானஸ்நானம் பெறக் கூடியதாயிருந்தால், அங்ஙனம் பெறவேண்டும். ஆயினும் அது அசாத்தியப்பட்டால், மற்ற இடங்களில் ஞானஸ்நானம் பெறலாமென்பது சபை பிறப்பித்த தீர்மானம். உதாரணமாய், கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் சிறைப்பட்ட ஒருவன் சிறைச்சாலையில் ஞானஸ்நானம் பெற்றதாகவும், வியாதிப்பட்ட இன்னொருவன் படுக்கையோடிருந்து ஞானஸ்நானம் பெற்றதாகவும் 4-ம் நூற்றாண்டிலிருந்த கிறிஸ்தவ ஆசிரியரான ஐசெயியு எழுதியிருக்கிறார். விசேஷமாய், ஒரு கிறிஸ்தவ குழந்தையும் ஞானஸ்நானம் பெறாமல் மரிப்பது சபையின் நோக்கத்துக்கு முரண்பாடாயிருப்பதால், வேண்டியபொழுது வீடுகளில் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் வழக்கம் ஏற்பட்டுக் கையாளப்பட்டது. மத்திய காலத்தில் வெளியிடப்பட்ட ஓர் உபதேச நூலில், அவசரம் ஏற்பட்டால் தங்கள் பிள்ளைகளுக்கு ஞானஸ்நானங் கொடுக்கவேண்டிய முறைமை இன்னதென்று சபையாருக்குத் தெரியவருமாறு, ஞாயிற்றுக்கிழமைகளில் குரு அடிக்கடி அதை விளக்கிக் காட்டுவது அவர் செய்யவேண்டிய கடமைகளில் ஒன்றேயாகும் என்று அடங்கியிருக்கிறது. ஆலயத்தில் ஞானஸ்நானம் கொடுக்கவேண்டியவர் குரு தான்; அவசரம் ஏற்படும்பொழுது, பட்டம் பெறாத ஆண்களும் பெண்களும் ஞானஸ்நானங் கொடுப்பது தவறன்று என்பது சபையின் ஐதீகம். 16-ம் நூற்றாண்டு மட்டும் இது எங்கும் வழங்கி வந்தது; ஏனெனில், இரட்சிப்பு அடைவதற்கு ஞானஸ்நானம் அவசியம் என்ற கொள்கை எங்கும் பரவியிருக்குங் காலத்தில், பிறக்கும் நோத்தில் சாகும் குழந்தைகளுக்கும் ஞானஸ்நானங் கொடுப்பது அவசியம் என்று எல்லாரும் சம்மதித்தார்கள். அல்லாமலும், தான் பெற்றுக்கொண்டதை ஒருவன் மற்றொருவனுக்குக் கொடுக்கக்கூடியதாயிருப்பதினால், ஞானஸ்நானத்தின் மூலமாய்த் தேவகிருபையைப் பெற்றுக்கொண்ட விசுவாசி, குருப்பட்டம் பெற்றில்லாவிடினும், ஞானஸ்நானத்தின் மூலமாய் அந்தக் கிருபை மற்றொருவனுக்குக் கிடைக்கும்படி செய்யவேண்டியதைச் செய்ய லாயக்குள்ளவனாயிருக்கிறான். ஆகையால், பட்டம் பெறாதவர்கள்

கொடுக்கும் ஞானஸ்நானம் உறுதியானது, பட்டம் பெருதவர்களிடம் ஞானஸ்நானம் பெற்றவர்கள் திருச் சபையில் மீண்டும் ஞானஸ்நானம் பெறுவதேயில்லை. 16-ம் நூற்ருண்டிலோ, சாக்கிரமெந்துக்களைப்பற்றி அபிப்பிராய பேதங்கள் உண்டாயின. சாக்கிரமெந்துக்கள் மிக உபயோகமாயிருப்பினும் அவைகள் இன்றியமையாதவை அல்ல என்பது ஒரு சாரார் துணிபு. உதாரணமாய், கல்வீன் என்ற கீர்த்தி வாய்ந்த வேத சாஸ்திரி எழுதியதாவது:

> தேவ வசனத்தால் நமக்குப் படைக்கப்பட்டு விசுவாசத்தினுல் பலிக்கும் நன்மைகளைத் தவிர, வேறு நன்மைகள் சாக்கிரமெந்துக்களின் மூலமாய்ப் பலிக்குமென்று நினைத்தல் தவருகும். சாக்கிரமெந்துக்களில் நாம் பங்கு பெறுவதால் நீதிமான்களாவோம் என்றும், இவற்ருல் இரட்சிப்பைப் பற்றிய நிச்சயம் உண்டாகும் என்றும் நாம் எண்ணக்கூடாது............சாக்கிரமெந்தில் பங்கு பெற முடியாமற் போனுல், அவற்றிற்குரிய கிருபையை நாம் தேவ வசனத்தினுலே மாத்திரம் பெறலாம்.

இதற்கு இசைய, சாகும்தறுவாயிலிருக்கும் குழந்தைகளுக்கு ஞானஸ்நானங் கொடுப்பது மூடபக்தி என்றும் பெண்கள் ஞானஸ்நானம் கொடுப்பது துணிகரமான பாவமென்றும் கண்டித்து, தாம் ஏற்படுத்திய சபைகளில் வீடுகளில் கொடுக்கும் ஞானஸ்நானத்தை முற்றிலும் விலக்கி நிறுத்திவிட்டார். அவருடைய கட்சியினர் பலர் 16-ம், 17-ம் நூற்ருண்டுகளில் இங்கிலாந்து சபையிலும் இருந்தனர். ஆகவே, அந்தச் சபைக்கும் அவர் உபதேசங்களைப் பிரமாணங்களாக ஏற்படுத்த முயன்றனர்.

ஞானஸ்நானம் பெருத குழந்தைகளின் கதியைப்பற்றி திருச்சபையில் மூன்று கொள்கைகள் பரவியதுண்டு:

a அவர்கள் நரகத்துக்குப் போய், நித்திய அக்கினிக்கு இரையாவார்களென்பது ஆகுஸ்தீன் முதலிய சபைப் பிதாக்களின் சித்தாந்தம்.

b அவர்கள் பரலோக ராஜ்யத்தை அடையாமலும், நரகத்துக்குப் போகாமலும் பிரத்தியேகமான இடத்தில் விலக்கப்பட்டிருக்கிருர்கள். அவர்கள் பாவஞ்செய்யாததால், அங்கே வேதனையும் துயரமுமில்லை; எனினும் தேவ தரிசனம் அவர்களுக்கு அளிக்கப்படாததால், அங்கே சந்தோஷமும் இல்லை. இது தற்காலத்து ரோமான் சபையின் உபதேசம்.

c தேவ தயவினுல், அவர்களெல்லாரும் இரட்சிப்பு அடைவார்கள். இது சபையின் உபதேசமன்று, பல கிறிஸ்தவர்கள் கொண்டுள்ள நம்பிக்கை.

நம் சபையில் இதைப்பற்றி திட்டமான உபதேசம் ஏற்படவில்லை.

இங்கிலாந்து சபை வேத சாஸ்திரிகளின் திலகமாகிய ஹூக்கர் எழுதியதாவது:

இவர்கள் நாசமாவார்களென்று நாம் சாதிக்கிறதுமில்லை, இரட்சிப்பு அடைவார்களென்றும் சந்தேகமின்றி சொல்லுகிறதுமில்லை.

ஞானோபதேச வினாவிடையில்:

ஞானஸ்நானமும் கர்த்தருடைய ராபோஜனமும் ஆகிய இவ்விரண்டை மாத்திரம் இரட்சிப்புக்குப் போதுப்பட அவசியம் என்று ஏற்படுத்தினர், என்பது இதைக்குறித்து நம் சபை நிலை கொண்டிருக்கும் நிலையை விளக்கிக் காட்டும். ஆகவே, தொன்றுதொட்டு இருந்தபடியே, அவசியம் ஏற்படும் பொழுது, வீடுகளில் பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் முறைமை கையாளப்பட்டு வருகிறது. யோசனையின்றி இந்த முறைமையை அநுசரித்தலாகாது. ஆலயத்தில் சபைக்கூட்டத்திலே பிள்ளைகள் ஞானஸ்நானம் பெறுவது உசிதம். ஆயினும், அது முடியாமற்போனால், வீட்டில் ஞானஸ்நானம் கொடுப்பது நல்லது.

ஞானஸ்நானங் கொடுக்கக்கூடியவர்கள் யார்?

1549 ஜெப புஸ்தகத்திலுள்ள ரூப்ரிக் சட்டமாவது:

கூடி வந்திருக்கிறவர்கள் தேவகிருபை அருளப்படவேண்டுமென்று அவரை நோக்கிப் பிரார்த்தனை செய்து, நேரம் இருந்தால் கர்த்தருடைய ஜெபத்தையும் சொல்வார்களாக. பின்பு அவர்களிலுள்ள ஒரு ஆள் பிள்ளையுடைய பேரைச் சொல்லி, அந்தப் பிள்ளையை ஜலத்தில் முழுக்காட்டி, அல்லது அதன்மேல் ஜலத்தை வார்த்து, பின் வருவனவற்றைச் சொல்லவேண்டும்.

ஞானஸ்நானம் பெற்ற எவனும் ஞானஸ்நானங்கொடுக்க லாயக்குள்ளவனென்றும், வேண்டுமாயின், பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு ஞானஸ்நானங்கொடுக்கலாமென்றும் இதனால் பிரத்தியட்சமாய் விளங்கும்.

எலிசபெத் ராஜாத்தியின் காலத்தில், கல்வீன் கட்சியினர் செல்வாக்கு அதிகரித்திருக்க, பட்டம் பெறாதவர்கள் ஞானஸ்நானங்கொடுப்பதை நீக்குவதெற்கென்று 1575ல் ஓர் சட்டம் தயாரிக்கப்பட்டது. ராஜாத்தி அதற்குஉடன்படாததால் அந்தச்சட்டம் ஊர்ஜிதத்திற்கு வரவில்லை. 1604-ம் ஆண்டிலோ, 6-ம் ஜேம்ஸ் அரசர் ராஜ்யபாரம் ஒப்புக்கொண்ட துவக்கத்தில், அந்தக் கட்சியினர் சமயம் வாய்த்ததென்று கண்டு, ரூப்ரிக் சட்டத்தைப் பின் வருமாறு மாற்றும்படி ஏற்பாடு செய்தனர்.

முதலாவது, சேகரக்குருவும் அவரோடு கூடியிருக்கிறவர்களும், தேவனுடைய கிருபை அருளப்பட வேண்டுமென்று பிரார்த்தித்து, நேரம்

இருந்தால், கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்வார்களாக. பின்பு, கூடியிருந்தவர்களில் ஒருவன் அந்தப் பிள்ளையின் பேரைச் சொல்ல, அந்தச் சேகரக்குரு அதை ஜலத்தில் முழுக்காட்டி, அல்லது அதன்மேல் ஜலத்தை வார்த்துப் பின் வருவனவற்றைச் சொல்லுவார்.

1662ல், மறுபடியும் அந்தச் சட்டம் மாறுதலடைந்து, இப்பொழுது இருக்கிறபடியே பிறப்பிக்கப்பட்டது. ஆயினும் நம் தமிழ் ஜெப புஸ்தகத்தி லுள்ள மொழிபெயர்ப்பு ஆங்கில மூலத்தின் திட்டவிட்டமாய்க் காட்டுகிற தில்லையென்று கவனிக்கவும். ஆங்கிலத்தில்

கிரமமாய்க் குருப்பட்டம் பெற்ற வேறொரு குருவானவர் என்றிராமல், கிரமமாய் அதிகாரம் பெற்ற வேறொரு பணிவிடைக்காரன் என்றி ருக்கிறது. இதன் அர்த்தம் இன்னதென்பதைப்பற்றி நியாயஸ்தலங்களில் தர்க்கங்கள் உண்டாக நேரிட்டதுண்டு. 1842ல் இங்கிலாந்திலுள்ள பிரதம நியாயாதிபதிகள் பின் வருமாறு தீர்மானஞ்செய்து அறிவித்தனர்:

குருமார் ஞானஸ்நானங்கொடுப்பது உசிதம் என்பது ஆங்கில சபையின் சித்தாந்தம். எனினும் பட்டம் பெறுதவர்கள் கொடுக்கும் ஞானஸ்நானம் விலக்கப்படாமல் அங்கீகரிக்கப்படும்.

இந்திய சபையில் இந்த விஷயத்தைப்பற்றி யாதொரு சந்தேகம் இல்லை. ஒரு சேகரக்குருவின் ஆதீனத்தில் பல சபைகள் இருப்பதாலும், அவர் எந்நேரமும் எல்லாச் சபைகளிலும் ஞானஸ்நானங்கொடுக்க முடியா ததாலும், வேண்டியபொழுது வியாதிப்பட்ட பிள்ளைகளுக்கு ஞானஸ்நானங் கொடுப்பதற்கு அத்தியக்ஷருடைய அதிகாரப்பத்திரம் பெற்றுள்ள ஊழியர் யாவருக்கும் அதிகாரமுண்டு. அப்படிப்பட்ட ஊழியன் சமீபத்தில் இல்லா விடில், ஞானஸ்நானம் பெற்ற எந்தச் சபையானும் ஞானஸ்நானங் கொடுக்கலாம்.

அவசர ஞானஸ்நானத்தை டாப்பில் பதிவு செய்யும் முறைமை.

பட்டம் பெறுதவர் ஒருவரால் ஒரு பிள்ளை ஞானஸ்நானம் பெற்றிருந்தால், அந்தச் சங்கதியைச் சேகரக் குருவானவருக்கு உடனே அறிவித்தல் வேண்டும். பிள்ளை பிறந்த தெய்தி, ஞானஸ்நானம் பெற்ற தெய்தி, பிள்ளைக்கு இட்ட பேர், அது ஞானஸ்நானம் பெற்ற ஊர், ஞானஸ்நானங் கொடுத்தவர் கையொப்பம் ஆகிய இவைகள் டாப்பில் எழுதப்படவேண்டும். ஞானஸ்நானங் கொடுத்தவர் கையொப்பத்தின் கீழ், அவசர ஞானஸ்நானம் என்று அவர் எழுதல் வேண்டும். அச்சமயத்தில், ஞானத்தாய் தகப்பன்மார் பேர் எழுத வேண்டுவதில்லை. அந்தப் பிள்ளை இறந்துபோனால், அது இறந்துபோன தெய்தி இன்னதென்று, அது ஞானஸ்நானம்பெற்ற தெய்தி யின் கீழ்ச் சேர்த்து எழுதல்வேண்டும். பிள்ளை பிழைத்தால், குருவானவர்

அதைக் கிரமமாய்ச் சபையில் சேர்த்துக்கொண்டு, அது நடந்த செய்தியைக் குறிப்பிட்டு எழுதவேண்டும்; அச்சமயத்தில் ஞானத்தாய் தகப்பன்மாருடைய பேரையும் எழுதவேண்டும்.

## ஆராதனை முறைமை வியாக்கியானம்

1-ம் நுப்ரிக் சட்டம். பிள்ளைகள் எந்த வயதில் ஞானஸ்நானம் பெற வேண்டுமென்று காட்டுகிறது. 1549 லும் 1552 லும்,

பிள்ளைகள் பிறந்த பின்வரும் முதலாம் ஞாயிற்றுக்கிழமையிலாவது திருநாளிலாவது ஞானஸ்நானம் பெறவேண்டும் என்றிருந்தது. பழைய உடன்படிக்கையின் காலத்தில், யூதருக்குள் பிறந்த ஒவ்வொரு ஆண் பிள்ளையும் 8-ம் நாளில் தவறாமல் விருத்தசேதனம் பண்ணப்படுவான். நம் ஜெப புஸ்தகத்தை இயற்றினவர்கள் அந்தப்பிரமாணத்தைக் கவனித்து, இந்தக் கட்டளையைப் பிறப்பித்தார்களென்று தெரிகிறது. அதனால் ஏற்படும் சில அசௌகரியங்களையிட்டு, 1662-ல்

> இரண்டாம் ஞாயிற்றுக்கிழமையிலாவது, அதற்கு இடையில் வரும் திருநாளிலாவது என்றும், 1928-ல்
>
> நாலாம் ஞாயிற்றுக்கிழமையிலாவது, ஐந்தாம் ஞாயிற்றுக்கிழமையிலாவது என்றும்

அந்தச் சட்டம் மீண்டும் மாற்றப்பட்டிருக்கிறதைக் கண்டு, திருநெல்வேலி அத்தியக்ஷாதீனத்தில், 42-ம் நாள் மட்டும் காத்திருக்கலாம், அதற்குப் பின் காத்திருக்கலாகாது என்று திருநெல்வேலி அத்தியக்ஷர் அநுமதி கொடுத்திருக்கிறதைக் கவனிக்கவும். இந்தச் சட்டத்தைக் குருமாரும் உபாத்திமாரும் சபையார் கேட்க அடிக்கடி வாசிக்கவேண்டும். ஞானஸ்நானம் இன்னதென்றும், அதைக் குறித்துச் சபை கொண்டுள்ள நோக்கம் இன்னதென்றும் சபையாருக்குத் தெரியாது. $1\frac{1}{2}$ வயதும் $2\frac{1}{2}$ வயதும் 5 வயதுமான பிள்ளைகளை ஞானஸ்நானம் பெறும்படி அவர்கள் கொண்டுவருவது மிகவும் விபரீதமான காரியம். இந்த ஒழுங்கீனம் நீங்கவும், தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்ளக் குழந்தைகள் கொண்டுவரப்படவும், சபையில் பணிவிடை செய்யும் யாவரும் ஊக்கமாய் முயலவேண்டும்.

2-ம் நுப்ரிக். மேற்சொல்லியபடி, ஞானஸ்நானம் பெறுவதற்குப் பெற்றோர் தங்கள் பிள்ளைகளைக் கிரமமாய்க் கொண்டு வருவார்களாயின், வீட்டு ஞானஸ்நானம் அபூர்வமாய்விடும். ஆனாலும் வேண்டியபொழுது வீட்டிலும் ஞானஸ்நானங் கொடுக்கலாமென்றும், அதை எப்படிச் செய்ய வேண்டுமென்றும் பணிவிடைக்காரர் அப்போதைக்கப்போது சபையாருக்கு அறிவித்தல் நலம்.

3-ம் நுப்ரிக். அவசரம் ஏற்படினும், கர்த்தருடைய ஜெபத்தைத்

தவருமல் சொல்லவேண்டும். ஜலத்தைப் பிரதிஷ்டை ஜெபஞ் சொல்ல வேண்டுமென்று கற்பிக்கப்படவில்லை; கர்த்தருடைய ஜெபம் அதற்குப் போதிய பிரதிஷ்டை என்றெண்ணி நம் சபைப்பிதாக்கள் இவ்விதமாய்க் கட்டளையிட்டனர்.

இந்த அவசரமான ஞானஸ்நானம் நடைபெற ஏற்பட்டால் பிள்ளை பலவீன நிலைமையிலிருக்கும் என்பது திண்ணம். ஆகவே, அதை ஜலத்தில் முழுக்காட்டுவதைப்பற்றி ஒன்றும் எழுதப்படவில்லை, ஜலத்தை வார்த்து என்று மாத்திரம் எழுதியுள்ளதைக் கவனிக்கவும்.

ii ஞானஸ்நானம். மற்ற ஆராதனை முறைமைகளில் இருக்கிறபடியே.

iii ஸ்தோத்திரம். ஆலயத்தில் வழங்கும் ஆராதனை முறைமையிலிருக்கிறபடியே. ஞானஸ்நானம் கொடுக்கிற நேரத்தில் பிள்ளை இறந்து போக நேரிட்டாலும், இதைச் சொல்லவேண்டுமென்று கவனிக்கவும். அவ்விதமாய்ப் பிள்ளை இறந்துபோயிருந்தால், இந்த ஸ்தோத்திர ஜெபம் அதைப் பரம பிதாவின் கைகளில் ஒப்புவிக்கும் ஜெபமாக வழங்கல் வேண்டும்.

iv தற்காலத் தமிழ் ஜெபபுஸ்தகத்தில், பின் வரும் ரூப்ரிக் சட்டங்கள் உண்டு:

ஆகிலும் ஒரு குருவாகிலும் வரக்கூடாதிருந்து மிகுந்த அவசரம் ஏற்பட்டால் அங்கே இருக்கிறவர்களில் ஒருவர் பிள்ளைக்குப் பெயரிட்டு, அதன் மேல் ஜலத்தை வார்த்துச் சொல்லவேண்டியதாவது:

> பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே உனக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன். ஆமென்.

பின்பு கூடி வந்திருக்கிறவர்கள் கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்ல வேண்டும். அதன் பின் இவ்விதமாய் ஞானஸ்நானம் கொடுத்ததாக அந்தச் சேகரக் குருவானவருக்கு உடனே தெரிவிக்கவேண்டும்.

இதெல்லாம் ஆங்கில ஜெப புஸ்தகத்திலில்லை என்று கவனிக்கவும்.

v குழந்தை வீட்டில் ஞானஸ்நானம் பெற்றதைப்பற்றிய அறிவிப்பு.

ஞானஸ்நானம் பெற்ற பிள்ளை பிழைத்தால், அது கிரமமாய் ஆலயத்தில் கொண்டு வரப்பட்டு, ஒழுங்கின்படி சபையாருக்கு முன்பாகச் சபையில் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும். முதலாவது, அது முறைமையின்படி ஞானஸ்நானம் பெற்றதோ இல்லையோ என்று, சபையார் அறிந்துகொள்ள வேண்டும். குருவானவர் தாமே ஞானஸ்நானம் கொடுத்திருந்தால், அவர் செய்யும் அறிவிப்புப் போந்தது; வேண்டுமாயின், தம்மோடு கூட இருந்த சாட்சிகள் யாரென்று அவர் சொல்லி, அந்தக் காரியத்தை நிச்சயப் படுத்தலாம்.

vi குழந்தை வீட்டில் ஞானஸ்நானம் பெற்றதைப்பற்றிய விசாரணை.

குருவானவர் தாமே ஞானஸ்நானம் கொடுத்திராத பட்சத்தில், அவர் பகிரங்கமாய் அதைப்பற்றி விசாரிக்க வேண்டும். இந்த நான்கு கேள்விகள் ஒவ்வொன்றையும் கவனித்தல் வேண்டும். சாக்கிரமெந்துக்கு இன்றியமையாதவைகள் மூன்று:

ஏற்ற பணிவிடைக்காரன். (ஞானஸ்நானங் கொடுப்பவன் தாம் ஞானஸ்நானம் பெற்றிருத்தல் வேண்டும்.)

வேண்டிய சாட்சிகள். (இரண்டு பேர் வாயினாலும் மூன்று பேர் வாயினாலும் எந்தக் காரியமும் நிலைவரப்படுமென்பது வேத பிரமாணம்: உபா. 1 : 16).

வேண்டிய பொருள். (நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கட்டளையிட்ட ஜலமானது.)

வேண்டிய வார்த்தைகள். (திரியேக தேவனுடைய நாமம் சொல்லப்பட்டிருப்பது அவசியம்.)

இவைகளில் ஒன்றாவது விடப்பட்டிருந்தால், அந்த ஞானஸ்நானம் உறுதியானதன்று; குறைவுள்ள ஞானஸ்நானம் பெற்றவன் மீண்டும் ஞானஸ்நானம் பெறல் வேண்டும். இவற்றில் குறைவு இல்லை என்று தென்பட்டால், மற்ற ஜெபங்கள் முதலானவைகள் குறைவுள்ளவைகளாயிருந்தும், மறு ஞானஸ்நானம் அவசியமில்லை.

(ஞானஸ்நானம் பெறாதவன் இன்னொருவனுக்கு ஞானஸ்நானங்கொடுக்க நேரிட்டால், அந்தச் சம்பந்தமாய்ச் செய்யவேண்டுவதென்ன? இது சம்பவிக்குமோ என்று சிலர் சந்தேகிக்கலாம்; இவ்விதமாய் நடைபெற்றதற்குப் போந்த அத்தாட்சிகளுண்டு. ஞானஸ்நானம் பெற்றிராத ஒருவன், தண்ணீரைக்கொண்டு, சபை கட்டளையிட்டதைச் செய்ய நோக்கத்தையுடையவராய்ச் சொல்ல வேண்டியதைச் சொல்லி இன்னொருவனுக்கு ஞானஸ்நானங்கொடுத்தால், அந்த ஞானஸ்நானம் உறுதியானது என்றும், அவ்விதமாய் ஞானஸ்நானம் பெற்றவனுக்கு மீண்டும் ஞானஸ்நானம் கொடுக்கக்கூடாது என்றும் ரோமான் சபை கொண்டுள்ள சித்தாந்தம். எனினும், தான் பெற்றுக்கொள்ளாததை ஒருவன் இன்னொருவன் கொடுப்பது அசாத்தியமென்று தோன்றுவதாலும், ஞானஸ்நானம் பெறாதவன் எந்தக் கருத்தோடு ஞானஸ்நானங்கொடுத்தானென்று அறிந்துகொள்வது கூடாத காரியமாயிருப்பதினாலும், இவ்விதமாய்ச் சம்பவித்திருந்தால், இந்த ஆராதனை முறைமையின் இறுதியில் கட்டளையிட்டிருக்கிறபடியே மறுபடியும் ஞானஸ்நானங்கொடுப்பது உசிதம்.)

எல்லாம் கிரமமாய்ச் செய்யப்பட்டதென்று நிச்சயமாய்த் தெரிய

வந்தால், குருவானவர் அதைச் சபையாருக்கு அறிவிக்க வேண்டும்.

ஜன்ம பாவமுள்ளவனும் தேவகோபாக்கினைக்கு உட்பட்டவனும் என்பவைகள் ஆலயத்தில் ஞானஸ்நானம் கொடுக்கும் முறைமையில் கண்டிராது என்பதைக் கவனிக்கவும்.

vii சுவிசேஷ வாக்கியம். viii அதைப்பற்றிய போதனை.

ஆலயத்தில் ஞானஸ்நானம் கொடுக்கும் முறைமையில் இருக்கிறபடியே.

ix கர்த்தருடைய ஜெபம். 1549-ம் ஆண்டு முறைமையிலிருந்தபடியே இங்கே வழங்கும். ஆலயத்தில் ஞானஸ்நானங்கொடுக்கும் தற்காலிக முறைமையில் சிலுவை அடையாளம் வரைந்த பின் அது வழங்குவதைக் கவனிக்கவும்.

x ஸ்தோத்திர ஜெபம். xi கேள்விகளும் மறுமொழிகளும்.

xii சிலுவை அடையாளம் வரைதல். xiii இறுதி ஜெபம்.

xiv ஞானத்தாய்த் தகப்பன்மாருக்குப் போதனை.

ஆலயத்தில் ஞானஸ்நானங்கொடுக்கும் முறைமையில் இருக்கிறபடி. திடப்படுத்தலைப்பெறும்படி பிள்ளையைக் கொண்டு வருவதைப்பற்றிய போதனை விடப்பட்டதைக் கவனிக்கவும்; 1549ல் ஆராதனை முறைமையை ஒப்பிட்டுப் பார்க்கவும்.

xvi நிபந்தனையின் பேரில் கொடுக்கப்படும் ஞானஸ்நானம்.

ஓர் பிள்ளை ஞானஸ்நானம் கிரமமாய்ப் பெற்றதோ இல்லையோ என்று துலக்கமாய்த் தெரியவராதிருந்தால், குருவானவர் செய்ய வேண்டியதைக் குறிக்கிறது.

ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கிறதும் "பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே" என்கிற வார்த்தைகளைச் சொல்லுகிறதும், ஞானஸ்நானத்துக்கு அவசியம் வேண்டியவனவாயிருக்கிறதினாலே என்பவற்றை விசேஷமாய்க் கவனிக்கவும்.

குருவானவர் இந்த முறைமையைக் கண்டு மட்டும் உபயோகித்தலாகாது. முதலாவது அவர் தீர விசாரிக்கவேண்டும். அப்படி விசாரித்திருந்தும், போதிய சான்று கிடைக்கிறதற்கு வழியில்லாமற் போனால், இந்த முறைமையின்படி ஞானஸ்நானம் கொடுக்கலாம். ரோமான் கோயிலில் விவாகஞ்செய்துகொள்ள நம் சபை சேர்ந்த ஒருவன் போயிருக்கும்பொழுது, ரோமான் சபைக்குருவானவர் இவன் ஞானஸ்நானம் பெற்றவனோ இல்லையோ என்று சற்றேனும் விசாரியாமல், அவனுக்கு மறுபடியும் ஞானஸ்நானங் கொடுத்தால், நீ இதற்கு முன் ஞானஸ்நானம் பெற்றிராவிட்டால் என்று

சொல்லி ஞானஸ்நானம் கொடுத்தாலும், அவர் அக்கிரமமாய் நடக்கிறார்; அவ்விதமாய்த் தாங்கள் பெற்ற ஞானஸ்நானத்தை அசட்டை செய்து, தங்களுக்கு மறுபடியும் ஞானஸ்நானங் கொடுக்கச் சம்மதிக்கிறவர்களும் அக்கிரமமாய் நடக்கிறார்கள். ரோமான் சபையிலிருந்தும், மற்ற ஒழுங்கான சபைகளிலிருந்தும் நம்மிடம் வந்து நம் சபையில் சேர விரும்புவோருக்கு நாம் மீண்டும் ஞானஸ்நானம் கொடுக்கிறதில்லை. ஞானஸ்நானம் வழங்காத இரட்சண சேனையிடத்திலிருந்து நம்மிடம் வருகிறவர்கள் கட்டாயம் ஞானஸ்நானம் பெறவேண்டும். மற்றச் சபைகளிலிருந்து வருகிறவர்கள் பெற்ற ஞானஸ்நானத்தைப்பற்றி சந்தேகமிருந்தால், இந்த நிபந்தனையின் பேரில் அவர்கள் மீண்டும் ஞானஸ்நானம் பெறுவது ஒழுங்கு.

V சிறு பிராயம் கடந்து சொல்லத்தக்கவர்களுக்குக் கொடுக்கும் ஞானஸ்நான முறைமை.

ஆதிகாலத்தில், ஞானஸ்நானம் பெறுபவர் பெரும்பாலார் சிறு பிராயம் கடந்தவர்கள். இடையிலோ, மேல் நாடுகளில் எல்லாரும் கிறிஸ்துவின் திருச்சபையில் சேர்க்கப்பட்ட பின்பு, கிறிஸ்தவர்கள் மத்தியில் வசித்துவந்த யூதர்களில் சிலர் கிறிஸ்தவர்களாக விரும்பினாலன்றி, சிறுபிராயம் கடந்தவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. 1290 லீ 1-ம் எட்வர்ட் அரசர் இங்கிலாந்தினின்று யூதர்கள் எல்லாரையும் துரத்தி விட்டிருந்தமையால், 16-ம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் அந்த அவசரமும் ஏற்படவில்லை. 1549 ல் முதல் ஆங்கில ஜெப புஸ்தகத்தைக் கிரான்மர் வெளியிட்டபொழுது, அந்நாட்டிலுள்ள யாவரும் கிறிஸ்தவர்களாயிருந்ததுமன்றி, சிறு பிராயத்தில் தங்கள் பிள்ளைகளுக்கு ஆலயத்திலாவது வீட்டிலாவது ஞானஸ்நானம் கொடுக்கவேண்டுமென்று மிகவும் ஆத்திரப்பட்டவர்களுமாயிருந்தார்கள். ஆகவே, சிறு பிராயம் கடந்தவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கும் முறைமை ஜெப புஸ்தகத்தில் அடங்கியிருப்பது அவசியமெனத் தோன்றவில்லை.

1662-ல் இந்த முறைமை ஜெப புஸ்தகத்தில் சேர்க்கப்பட்டது. குருமார் மகா நாட்டிலுள்ள மூன்று பிரதிநிதிகள் இதை அமைத்தார்கள். வேல்ஸ் நாட்டிலுள்ள பரிசுத்த ஆசாப் அத்தியக்ஷரான கிரிபித் சாஸ்திரி அந்த மூவருக்குத் தலைவராயினர். இதை அமைப்பதற்கு இருந்த முகாந்தரங்கள் யாவையென்று ஜெப புஸ்தக முகவுரையில் பின் வருமாறு கூறப்பட்டுள்ளன.

> மேலும் விசேஷ காலங்களுக்குத் தகுதியான சில ஜெபங்களையும் ஸ்தோத்திரங்களையும் ஏற்றவிடங்களில் சேர்ப்பது நலமென்றெண்ணினோம். இவற்றில் கடல் யாத்திரை செய்பவருக்காகச் செய்யப்படும் ஜெபங்களும், பருவங் கடந்தவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்

முறைமையும் முக்கியமானவை. பருவங்கடந்த ஞானஸ்நான முறைமை முந்தின புஸ்தகம் இயற்றினபோது அத்தனை அவசியமில்லாதிருந்தும், இடையில் உண்டான அவபக்தி காலத்தில் நமது நடுவில் நுழைந்த அனபாப்டிஸ்ம் என்ற கொள்கையினிமித்தம் இப்பொழுது அவசியமாயிருக்கிறது. மேலும் இது நமது குடியேற்று நாடுகளிலுள்ள சுதேசிகளுக்கும் நமது மார்க்கத்துக்கு வரும் மற்றவர்களுக்கும் ஞானஸ்நானம் கொடுப்பதற்கு எக்காலத்திலும் பிரயோஜனமாயிருக்கும். இதில் இரண்டு முகாந்தரங்கள் எடுத்து உரைக்கப்பட்டிருக்கின்றன:

1. இடையில் உண்டான அவபக்தி காலத்தில் ஞானஸ்நானம் ஒழுங்காய்க் கொடுக்கப்படவில்லை. அது எப்படியெனில், 1643ல், 1-ம் ஷார்ல்ஸ் ராயருக்கும் அவருடைய பிரஜைகளில் பலருக்கும் சண்டை உண்டாயிற்று. அரசியல் விஷயங்களில் ராயருக்கு விரோதமாயிருந்தவர்கள், ராயர் விசேஷித்த பட்சத்துடன் பரிபாலித்து வந்த ஆங்கில சபைக்கும் விரோதமாயிருந்து, அந்தப் போரில் அவர்கள் வெற்றியடைந்த பின், அரசியல் முறைமைகள் யாவற்றையும் மாற்றுவதோடு கூட, சபை முறைமைகளை மாற்றவும், ஆங்கில சபையை நிராகரிக்கவும் நிர்ணயஞ் செய்தனர். அத்தியக்ஷர்மார் இருத்தல் அவசியம் இல்லையென்பது அவர்களுக்குப் பிரதம சித்தாந்தம். ஆகவே, அத்தியக்ஷர்மார் துரத்துண்டு ஓடி, ஒளிப்பிடங்களில் சொல்லி முடியாத கஷ்டங்களை அநுபவித்துப் பிழைத்து வந்தனர். இரண்டாவது, ஆங்கில ஜெப புஸ்தகத்திலுள்ள எந்த ஆராதனை முறைமையும் பகிரங்கமாய் வழங்கலாகாது என்பது அவர்கள் பிறப்பித்தவிதி: அதற்கு இணங்க மனமற்றவர்களாய், ஆங்கில குருமாரில் ஆயிரக்கணக்கான பேர் தங்கள் வேலையைவிட்டு நீங்கிப் போயினர். அவர்களுக்குப் பதிலாக உள்ளே நுழைந்த சுயாதீன சபைக் குருமார் பலர் அனபாப்டிஸ்த் கொள்கைகளை அநுசரித்து, பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கக்கூடாதென்று போதித்ததுமல்லாமல் அதன்படி நடந்தமையால், அக்காலத்தில் அநேகர் ஞானஸ்நானம் பெறமுடியாமற் போயிற்று. 1662-ல் 2-ம் ஷார்ல்ஸ் ராயர் ராஜ்யபாரம் வகித்தபொழுது, ஆங்கில சபைக்கும் மீட்பும் விடுதலையும் கிடைத்தன; ஜெப புஸ்தகம் திருத்தப்பட்டு மறுபடியும் வெளியிடப்பட்டது; ஞானஸ்நானம் பெறப் பலர் முன் வந்தனர். பெரியவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதற்குப் பழைய முறைமை ஏற்றதன்று என்று அக்காலத்துச் சபைத் தலைவர்கள் இந்தப் புது முறைமை இயற்றிச் சேர்த்துவிட்டனர்.

2. 1549-ல் இங்கிலாந்து தேசத்திற்குக் குடியேற்றும் ஸ்தலங்களும் நாடுகளும் இல்லை; அது தரித்திரத்தினாலும் இடைவிடாத யுத்தங்களினாலும் பீடிக்கப்பட்டமையால், மற்றத் தேசங்களுக்குச் சென்று கிறிஸ்துவை

அறியாதவர்களுக்கு அவரைப்பற்றிய சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கலாமென்கிற உள்ளம் அக்காலத்து ஆங்கிலர் மனதில் தோன்றவில்லை. 1602-லோ, காரியம் அதிகமாய் மாறிவிட்டிருந்தது. 1620-ல் யாத்திரைப் பிதாக்கள் என்ற பேர் வழங்கியவர்கள் இங்கிலாந்தை விட்டுவிட்டு அமெரிக்காவில் குடியேறியிருந்தார்கள். அவர்களுக்குப் பின் மற்றநேகர் அவ்விதமாய்க் கடலைக் கடந்து அமெரிக்காவில் சேர்ந்து வாழ்ந்துவந்தனர். நாகரீகமில்லாத சுதேச ஜனங்களுக்குள் சுவிசேஷ ஊழியஞ்செய்யத் தலைப்பட்டிருந்தனர். 1600ல் இந்திய வியாபாரச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அந்தச் சங்கத்தின் தலைவர்கள் இந்தியருடைய ஆவிக்குரிய நலத்தைப்பற்றி கவலையற்றவர்களல்லர்; தாங்கள் இந்தியாவுக்கு அனுப்பும் குருமார் இந்திய பாஷைகளைக் கற்றுக்கொண்டு இந்துக்களுக்குச் சுவிசேஷத்தைப் போதிக்க வேண்டுமென்பது அவர்கள் விருப்பம். நம் சபை சேர்ந்த முதல் இந்தியக் கிறிஸ்தவன் லண்டனில் 1620 ம் ஆண்டிலே ஞானஸ்நானம் பெற்றான். இது நூதனமான காரியமாயிருந்தபடியால், அரசர் தாமே அவனுக்கு ஞானத் தகப்பனாக நின்றுகொண்டார்; அவன் எந்த முறைமையின்படி ஞானஸ்நானம் பெற்றானென்பதற்கு அத்தாட்சியில்லை.

## ஆராதனை முறைமை வியாக்கியானம்

### i நுப்ரிக் சட்டங்கள்

a. 1-ம் நுப்ரிக். அத்தியக்ஷருக்குத் தெரிவிக்கவேண்டும். ஆதி காலத்தில் ஞானஸ்நானங்கள் எல்லாம் அத்தியக்ஷர் முன்னிலையில் நடைபெறுவது வழக்கமென்று முன் எழுதியிருக்கிறோம். பின்பு குழந்தைகளுக்கு தம் வழக்கம்போல் ஞானஸ்நானங் கொடுப்பதற்கு குருவானவருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. பருவங் கடந்தவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுப்பதற்கு அநுமதியளிப்பது அத்தியக்ஷருக்குரியது; ஆதலால், ஒரு வாரத்துக்கு முன் அவருக்கு அதை அறிவித்தல் வேண்டுமென்பது சட்டம். தற்காலத்தில் பலர் இந்தச் சட்டத்தைக் கவனியாமலிருக்கிறார்கள். இது கையாளப்படுவது நலம். உதவிக் குருப்பட்டம் கொடுக்கும் முறைமையில், உதவிக்குருவானவர் செய்யவேண்டிய கடமைகளில் ஒன்றாக குருவானவர் இல்லாத சமயத்தில் குழந்தைகளுக்கு ஞானஸ்நானங் கொடுக்கவும் என்பது குறிக்கப்பட்டிருக்கின்றமையால், குருவானவரைத் தவிர வேறொருவரும் பெரியவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கக்கூடாதென்று இதிலிருந்து அநுமானமாகச் சொல்லலாம். உதவிக் குரு பெரியவன் ஒருவனுக்கு ஞானஸ்நானங்கொடுக்க நேர்ந்தால், அந்த ஞானஸ்நானம் உறுதியாயிருப்பதால் அந்தப் பெரியவனுக்கு மீண்டும் ஞானஸ்நானம் கொடுக்கப்படுவதில்லை; ஆயினும் உதவிக் குருவானவர் செய்தது ஒழுங்கீனம் என்று எண்ணப்படும்.

கிறிஸ்து மார்க்கத்தின் பிரதான உபதேசங்களை நன்றாய்க் கற்று அறிந்திருக்கிறார்களா? 4-ம் அத்தியாயத்தில் ஞானஸ்நான ஆயத்தத்தைப்

பற்றி எழுதியுள்ளதைக் காண்க. உபவாசத்தினாலும். நம் ஜெப புஸ்தகத்தில் இந்த ஒரு சந்தர்ப்பத்தில் உபவாசஞ் செய்வதைப்பற்றி திட்டமான கட்டளை ஒன்றுண்டு. லெந்து என்னும் நாட்களில், உபவாசஞ்செய்வதைப் பற்றிய வேத வாக்கியங்கள் வாசிக்கப்படும். அழுகையோடும் உபவாசத்தோடும் ஜெபத்தோடும் உம்மிடத்தில் திரும்புகிற உமது ஜனமாகிய எங்கள் மேல் கிருபையாயிரும் என தேவ கோபாக்கினை கூறல் என்ற முறைமையில் நாம் வேண்டுவதுண்டு. குறித்த காலங்களில் உபவாசஞ் செய்வது ஆவிக்குரிய நலங்களுக்கு ஏதுகரமாயிருக்கும் என்பதற்கு வேதமும் நம் இரட்சகர் காட்டிய முன் மாதிரியும் அத்தாட்சி.

2 குறிக்கப்பட்ட ஞாயிற்றுக்கிழமையிலாவது திருநாளிலாவது.

ஒரு குரு பல சபைகளை மேல்பார்க்கவேண்டியதாயிருப்பதினால் திருநாட்கள் அல்லாத நாட்களில் பருவங் கடந்த ஞானஸ்நானங் கொடுக்க நேரிடும். கூடியபொழுது, ரூப்ரிக் சட்டத்திற்கு மாறாக நடவாமல் அதன்படியே நடப்பது உசிதம். இந்த ஆராதனையும் சபையார் கூட்டமாகக் கூடிவந்திருக்கையில் நடத்தப்பட வேண்டுமென்பது ஜெப புஸ்தகத்தை இயற்றினவர்களுடைய நோக்கம். ஞானஸ்நானத் தொட்டியண்டையில் என்றிருக்கிறபடியினால், இந்த ஆராதனையும் எப்பொழுதும் ஆலயத்தில் ஆசரிக்கப்படும் என்று இதை இயற்றினவர்கள் உத்தேசித்திருந்தனரென்பது தெளிவு. ஆயினும், குளங்களிலும், ஆறுகளிலும் பருவங் கடந்த ஞானஸ்நானம் கொடுக்கும் வழக்கம் இந்திய சபையில் தொன்றுதொட்டு வழங்கி வருகிறது; அப்படிச் செய்வது தவறு அன்று என்று அத்தியக்ஷர்மார் பன்முறை அறிவித்திருக்கின்றனர். பருவங் கடந்தவர்களுக்கு முழுக்கு ஸ்நானங் கொடுப்பது உசிதம்: ஞானஸ்நானம் இன்னதென்று அதினால் அவர்களுக்கு எளிதில் விளங்கும் (ரோமர் 6-ம் அத்தியாயத்தைக் காண்க) அல்லாமலும் முழுக்கு ஸ்நானம் அவசியமென்று சாதிக்கிற பெந்தேகோஸ்தே கூட்டத்தார் முதலியவர்கள் நடமாடிக்கொண்டிருக்கும் இந்தக்காலத்தில், நம்முடையவர்களில் சிலர் அங்ஙனம் ஞானஸ்நானம் பெற்றிருப்பது அவர்களுக்கும் சபைக்கும் ஓர் பாதுகாப்பாக இருக்கலாம்.

ii முகவுரை. குழந்தைகள் ஆராதனை முறைமையில் இருக்கிறபடியே; எனினும், பெரியவர்களிடத்தில் ஜன்மபாவம், கர்மபாவம் இரண்டும் இருப்பதினால், மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்க மாட்டாமல் பாவத்தில் நடந்து அநேக அக்கிரமங்களைச் செய்து வருகிறதினாலும் என்பது சேர்க்கப்பட்டிருக்கிறது. (ரோமர் 8:8ஐக் காண்க.)

iii சுருக்க ஜெபங்கள். குழந்தைகள் ஆராதனை முறைமையிலிருக்கிறபடியே. ஆனாலும்,

அப்பொழுது சபையார் எல்லாரும் முழங்கால் படியிட்டிருக்கவேண்டும். என்ற ரூப்ரிக் அந்த முறைமையிலில்லாதிருப்பதைக் காண்க.

iv சுவிசேஷ வாக்கியம்: பரி. யோவான் 3:1-8. பருவங்கடந்த ஞானஸ்நானத்திற்கு இது மிகவும் பொருத்தமானது. இதில் நமது ஆண்டவர் தெளிவுறப் போதித்தவைகளாவன:

a மறு ஜன்மம் அடையாதவன் நிலைமை.

b ஆவிக்குரிய மறு ஜன்மம் அவசியம்.

c மறு ஜன்மம் அடைந்தவன் தன்மை.

d மறு ஜன்மம் அடைந்தவனுக்குப் பலிக்கும் ஆசீர்வாதம்.

v சுவிசேஷ வாக்கியத்தைப் பற்றிய போதனை.

இது இந்த முறைமைக்கென்று புதிதாய் இயற்றப்பட்டது. ஞானஸ்நானம் பெறுவது அவசியம் என்று காட்டும்படி, அதைப்பற்றி வேதத்திலுள்ள முக்கியமான வாக்கியங்களை அத்தாட்சியாகக் கூறுகிறது:

யோவான் 3:5
மார்க்கு 16:5,6
அப்போஸ்தலர், 2:37-40
1 பேதுரு 3:21

vi ஸ்தோத்திர ஜெபம்: குழந்தைகள் ஆராதனை முறைமையிலிருக்கிறபடியே.

vii ஞானஸ்நானம் பெறுவோருக்குப் போதனை. குழந்தைகள் ஆராதனை முறைமையிலுள்ள போதனையிலுள்ள பொருள் இதிலும் அடங்கியிருக்கிறது. பெரியவர்களுக்கு ஏற்றதாக சில வார்த்தைகள் மாற்றப்பட்டிருக்கின்றன. ஞானத்தாய் தகப்பன்மார் சாட்சிகள் என்று அழைக்கப்படுவதைக் கவனிக்கவும். அவர்கள் இந்த முறைமையில் பிரதிக்கினை செய்பவரல்ல; ஞானஸ்நானம் பெறுவோர் தாங்களே பிரதிக்கினை செய்வார்கள். ஞானத்தாய் தகப்பன்மார், இவர்கள் ஞானஸ்நானம் பெறலாயக்குள்ளவர்களென்று வாக்குறுதி செய்பவராகவும், அவர்கள் செய்யும் பிரதிக்கினைக்குச் சாட்சிகளாகவும், அவர்களுக்காக ஜெபஞ்செய்பவராகவும் தொட்டியண்டையில் நிற்கிறார்கள்.

viii கேள்விகளும் மறுமொழிகளும்.

அப்பொழுது ஞானஸ்நானம்பெற வந்திருக்கிற ஒவ்வொருவரிடத்திலும் குருவானவர் கேட்கவேண்டிய கேள்விகளாவன: என்ற ரூப்ரிக் சட்டத்தைக் கவனிக்கவும். இது மட்டும் நீங்கள், உங்கள் என்று ஒவ்வொரு இடத்திலும் எழுதியிருக்க, இங்கே, நீ, உன் என்று இருக்கிறபடியினால், ஒவ்வொருவரும் தனியாய் தன் விசுவாச அறிக்கை செய்வது சபையின் நோக்கம் என்று தெளிவாய்த் தெரிகிறது. பலர் ஒரே நேரத்தில் ஞானஸ்நானம் பெற

நேரிட்டால், எல்லாரையும் ஒன்றாய் விடை சொல்லச் செய்வது வழக்கம். அப்படிச் செய்ய நேரிட்டால், ஒவ்வொருவரும் மனதார உத்தரவு சொல்லியிருக்கிறாரோவென்று குருவானவர் அதிகக்கருத்தாய்க் கவனிக்கவேண்டும்.

4-ம் மறுமொழியில் தேவ ஒத்தாசையினால் என்பது சேர்க்கப்பட்டதைக் கவனிக்கவும்.

ix, x ஞானஸ்நானம் பெறுபவனுக்காகச் செய்யப்படும் ஜெபங்களும், பிரதிஷ்டை ஜெபமும். குழந்தைகள் முறைமையிலிருக்கிறபடியே.

xi ஞானஸ்நானம். ரூப்ரிக் சட்டத்தைக் கவனிக்கத்தக்கது: அதன் திட்டமான மொழிபெயர்ப்பாவது:

அப்பொழுது ஞானஸ்நானம் பெறப்போகிற ஒவ்வொருவனுடைய வலது கையையும் குருவானவர் பிடித்து, தம் யுக்தபடி ஞானஸ்நான தொட்டியருகே வசதியான விதமாய் அவனை இருக்கச் செய்து:

ஞானஸ்நானம் பெறுவோரை முழங்காற்படியிட்டு அதைப் பெறச் சொல்வது வழக்கம். ஆனால் இது குருவானவருடைய யுக்தபடி செய்யப்படவேண்டும். பெரியவர்களும் மூழ்கி ஞானஸ்நானம் பெறக்கூடிய பெரிய தொட்டிகள் வட இந்தியாவிலுள்ள சில ஆலயங்களிலிருக்கின்றன. தென் இந்தியாவில் அப்படிப்பட்ட தொட்டிகள் இருக்கிறதாக யாம் கேள்விப்பட்டதில்லை.

xii சிலுவை அடையாளம் வரைதல். இந்தப்பிள்ளையை என்பதற்குப் பதிலாக, இவனை என்று எழுதியிருக்கிறது; மற்றப்படி, குழந்தைகள் முறைமையிலிருக்கிறபடியே இருக்கிறது.

xiii, xiv ஜெப அழைத்தல், கர்த்தருடைய ஜெபம்.

குழந்தைகள் முறைமையிலிருக்கிறபடியே.

xv இறுதி ஜெபம். சுவிசேஷ வாக்கியத்துக்குப்பின் சொல்லிய ஸ்தோத்திர ஜெபம் மறுபடியும் சொல்லப்படுகிறது. இது இந்த முறைமையிலுள்ள ஓர் குறைவு என்று சொல்லவேண்டும். குழந்தைகள் ஆராதனை முறைமையில் சொல்லப்படும் அருமையான ஜெபங்கள் சற்று மாற்றப்பட்டதாய் இங்கே சொல்லும்படி ஏற்பாடு செய்யப்படுவது நல்லது.

xvi, xvii இரண்டு போதனைகள்

ஞானத்தாய் தகப்பன்மாருக்குச் சுருக்கமாய் ஆலோசனை சொல்லப்படுகிறது; தங்கள் ஞானப்பிள்ளைகள் ஞானஸ்நானம் பெற்றவுடன் தாங்கள் செய்யவேண்டியதெல்லாம் செய்தாயிற்றென்று கருதாமல், அவர்கள் கிறிஸ்தவ ஜீவியத்தில் விருத்தி அடையும்படி அவர்களை ஏவுவது இன்னும்

ஞானப்பெற்றோரின் மேல் சுமரும் கடமை.

வேத அத்தாட்சிகள்:

2 பேதுரு 3:18. நம்முடைய ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள்.

தீத். 2:12. நாம் அவபக்தியும் லௌகீக இச்சைகளையும் வெறுத்து, நிதான புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இந்த உலகத்தில் ஜீவித்து......காத்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது.

ஞானஸ்நானம் பெற்றவர்கள் பரிசுத்தமாய் நடக்கவேண்டுமென்று அவர்களுக்கும் சுருக்கமாய் எச்சரிக்கப்படுகிறது.

முன் எடுத்துரைக்கப்படாத வேத அத்தாட்சிகள்:

கலா. 3:27. உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்கள்.

கலா. 3:26. நீங்களனைவரும் இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் கடவுளின் புத்திரராயிருக்கிறீர்களே.

எபே. 5:8. வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள்.

1 தெச. 5:5 நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகள்; நாம் இருளுக்கும் இரவுக்கும் உரியவர்களல்ல.

xviii இறுதி நுப்ரிக் சட்டங்கள்.

a இந்த முறைமையில் திடப்படுத்தலைப்பற்றிய போதனையில்லை; இவர்கள் கூடிய சீக்கிரம் திடப்படுத்தலைப் பெறுவது நல்லது என்று நுப்ரிக் சட்டமாக எழுதியுள்ளது. ஞானஸ்நான ஆயத்தத்துக்கும் திடப்படுத்தல் ஆயத்தத்துக்கும் அதிகமான வித்தியாசமில்லை. ஆதலால், பருவங்கடந்தவர்களாய் ஞானஸ்நானம் பெற்றவர்கள் அதற்கென்று ஏற்றவாறு பயிற்சிபெற்று ஆயத்தம் பண்ணப்பட்டிருந்தால், அவர்கள் திடப்படுத்தலைப் பெறுவதை ஒத்தியிருப்பது அவசியமில்லை. சில வேளைகளில், பருவங்கடந்த ஞானஸ்நானம், திடப்படுத்தல், பரிசுத்த நற்கருணை என்ற மூன்று ஆராதனைகள் தொடர்பாக நடைபெறுவதுண்டு. அப்படிப்பட்ட சமயங்களில், திடப்படுத்தல் ஆராதனை முறைமையின் முகவுரையையும், விசுவாசப் பிரதிக்கினை உறுதியாக்கல் என்ற பகுதியையும் வாசியாமல் விட்டுவிடலாமென்பது இந்தியமாகாணத்து அத்தியக்ஷர்மார் செய்திருக்கும் தீர்மானம்.

b ஒன்றும் சொல்ல முடியாத குழந்தைகளுக்கும், தங்கள் உத்தரவாதத்தை உணர்ந்து தங்களுக்காக உத்தரவு சொல்லக்கூடிய பெரியவருக்கும்

இடையிலுள்ளவர்களுண்டு. ஏழு வயதுள்ள ஓர் பிள்ளை சிசுவுமல்ல, குழந்தையுமல்ல, ஆனாலும், ஞானஸ்நானம் பிரதிக்கினை சிறப்பு அந்த வயதுள்ளவர்களுக்கு முழுவதுமாய் விளங்காது. அன்னவர்களுக்கு எங்ஙனம் ஞானஸ்நானம் கொடுப்பது என்பதைப்பற்றிய சந்தேகம் தீர இந்த நுபரிக் சட்டம் ஏற்பட்டுள்ளது. எந்த வயது முதல் பிள்ளைகள் தங்களுக்காக உத்தரவு சொல்லலாம் என்பதுபற்றி இன்னமும் சந்தேகமிருக்கலாம். அதை நீக்குவதற்குத் திருநெல்வேலி அத்தியக்ஷர்மாரால் பிறப்பிக்கப்பட்ட உபசட்டமாவது:

12 வயது முடிந்து 13 வயதுள்ளவர்கள் முதலாய் எல்லாரும் பருவங்கடந்தவர்களாய் ஞானஸ்நானம் பெறவேண்டும்; அவர்கள் ஞானஸ்நானம் இளமை பிராயம் கடந்தவர்கள் ஞானஸ்நான டாப்பில் பதிவு செய்யப்படவேண்டும். 12 வயது முடியாதிருந்தால், 12 வயதுள்ளவர்களும் அந்த வயதுக்கு கீழ்பட்ட எல்லாரும் பிள்ளைகளாய் ஞானஸ்நானம் பெற வேண்டும். அவர்கள் ஞானஸ்நானம் குழந்தைகள் ஞானஸ்நான டாப்பில் பதிவு செய்யப்படவேண்டும்.

### vi 1928 ல் வெளியிடப்பட்ட ஆங்கில ஜெப புஸ்தகம்.

1927-ம், 1928-ம் ஆண்டுகளில் இங்கிலாந்து சபை அதிகாரிகள் புது ஜெப புஸ்தகம் ஒன்றைத் தயாரித்து வெளியிட்டனர். இங்கிலாந்தில் சபைக்கும் ராஜாங்கத்துக்கும் இணக்கம் இருப்பதால், ஜெப புஸ்தகம் பார்லமெந்தென்னும் மகா சங்கத்தால் அங்கீகாரம் பெற்றாலன்றி, அது ஆலயங்களில் உபயோகிக்கும்படியான புஸ்தகமாய்ச் சபை அதிகாரிகள் அதை ஏற்படுத்தமுடியாது. 1928 ல் வெளியிட்ட புஸ்தகத்தைப் பார்லமெந்து அங்கீகரிக்கவில்லை. இப்படியிருக்க, இங்கிலாந்திலுள்ள பல ஆலயங்களில் அது வழங்கி வந்தாலும், அதுவும் அதிலுள்ள முறைமைகளும் அதிகாரம் பெற்றவையல்ல; அன்றியும் அவற்றை உபயோகப்படுத்துகிறவர்கள் நியாயப் பிரமாணத்தின் திட்டவட்டத்தை மீறி நடக்கிறார்கள். இந்தியாவிலே, 1930 முதல், இந்திய சபைக்கும் ராஜாங்கத்துக்கு சம்பந்தமில்லாதிருக்கிறபடியால், இந்திய சபையில் வழங்கத்தக்க ஆராதனை முறைமைகளைப்பற்றி அப்போதைக்கப்போது செய்யவேண்டிய தீர்மானங்களைச் செய்வதற்கு அத்தியக்ஷர்மாருடைய மகாச் சங்கத்துக்கு பூரணமான அதிகாரமுண்டு. இதற்கு இசைய, இந்தியாவில் வழங்கும்படி அத்தியக்ஷர்மார் 1928ல் வெளியிட்ட ஆங்கில புஸ்தகத்தைப் பொதுப்பட அங்கீகரித்திருக்கிறார்கள். எனினும் ஒவ்வொரு அத்தியக்ஷாதீனத்திலும் அதில் எந்தப் பகுதிகளை உபயோகப்படுத்தல் என்பதைப்பற்றி அந்தந்த அத்தியக்ஷர் தீர்மானித்து அனுமதி கொடுக்கவேண்டும். திருநெல்வேலி அத்தியக்ஷாதீனத்திலுள்ள ஆங்கில ஆலயங்களில் (ஆராதனை வழக்கமாய்

ஆங்கில பாஷையில் வழங்கிவரும் ஆலயங்களில்), 1928 புஸ்தகத்திலுள்ள ஞானஸ்நான ஆராதனை முறைமைகளை வாசிப்பதற்குப் பொதுவான அனுமதி அளிக்கப்பட்டதுமல்லாமல், அவ்வாலயங்களில் சாமானியமாய் அந்த முறைமைகள் மாத்திரம் வழங்கும். தமிழ் ஆலயங்களில் அவற்றை உபயோகிப்பதற்கு இதுகாரும் அனுமதி அளிக்கப்படவில்லை; ஜெப புஸ்தக அநுபந்தத்திலும் அந்தப் புது முறைமைகள் அடங்கவில்லை. எனினும், அத்தியக்ஷர் அனுமதி கொடுத்தால், இந்த முறைமைகள் தமிழிலும் வழங்கக்கூடியனவாயிருப்பதால், பழைய முறைமைகளுக்கும் இவற்றிற்கும் உள்ள தாரதம்மியத்தை எடுத்துச் சுருங்கக் காட்டல் நலமென்று தோன்றுகிறது.

### குழந்தைகளுக்கு ஞானஸ்நானங் கொடுக்கும் முறைமை

i இந்த முறைமைக்குரிய பொதுவான ரூப்ரிக் சட்டங்கள் தொகுப்பாகச் சேர்க்கப்பட்டு அச்சடிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் கவனிக்கவேண்டிய குறிப்புகளாவன:

பெரிதும் அங்கீகரிக்கப்படத்தக்கதுமான முகாந்தரம் இருந்தாலன்றி, பிள்ளைகள் பிறந்த பின் நான்காம் அல்லது எப்படியாயினும் ஐந்தாம் ஞாயிற்றுக்கிழமையில் ஞானஸ்நானம் பெறும்படி அவைகளைக் கொண்டுவரவேண்டும்.

மூன்று சாட்சிகள் முன்வருவது அரிதாயிருந்தால், ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒரு ஞானத் தகப்பனும் ஒரு ஞானத் தாயும் இருப்பது போதும். அவசரம் ஏற்பட்டால், வேறு சாட்சிகள் கிடைக்காதிருக்க நேரும்போது, பெற்றோர் தங்கள் சொந்தப் பிள்ளைகளுக்கும் பிணையாளிகளாய் மறுமொழி சொல்லலாம். ஞானஸ்நானம் பெறாத எவனும் ஞானஸ்நானச் சாட்சியாய் முன்வரக்கூடாது.

ii முகவுரை. அதன் ஆரம்பப் பகுதி பின்வருமாறு மாற்றப்பட்டிருக்கிறது:

கிறிஸ்து இயேசுவுக்குள் பிரியமானவர்களே, மானிடர் யாவிடத்திலும், அவர்கள் பிறக்கும் நாள்முதல் பாவஞ் செய்யும்படியான சிந்தை யிருப்பதினாலும், அன்பின் சொரூபியாகிய தேவன் எல்லா மானிடரும் இரட்சிப்பு அடைய வேண்டுமென்று பிரியமுள்ளவராயிருப்பதினால், ஒருவன் ஜலத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் ..........

பாவத்தில் உற்பவித்துப் பிறந்திருக்கிறதினாலும் என்பது நீக்கப்பட்டதைக் கவனிக்கவும்.

iii ஜெபங்கள் பழைய ஏற்பாட்டிலிருந்து எடுத்துரைக்கப்பட்ட

வேத அத்தாட்சிகள் இரண்டும் விடப்பட்டிருக்கின்றன. இவ்விரண்டு ஜெபங்களில் ஒன்றையாவது வாசிக்கும்படி குறித்திருக்கிறது.

iv சுவிசேஷ வாக்கியத்துக்கு முன்:

தேவரீருக்கு மகிமை உண்டாவதாக என்றும்

சுவிசேஷ வாக்கியத்துக்குப் பின்

கிறிஸ்துவே, உமக்கே ஸ்தோத்திரம் உண்டாவதாக என்றும் சொல்லக் குறித்திருக்கிறது.

v ஞானத் தாய் தகப்பன்மாருக்குப் போதனை. முதலாம் பாகம் பின் வருமாறு மாற்றப்பட்டிருக்கிறது.

பிரியமானவர்களே, ஞானஸ்நானம் பெறுவதற்கு இந்தப் பிள்ளையை கொண்டு வந்தீர்களே; நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இவனை ஏற்றுக்கொண்டு சுத்திகரித்துப் பரிசுத்தஞ் செய்யவேண்டுமென்று வேண்டிக்கொண்டீர்கள்.

பாவங்களிலிருந்து விடுதலையாக்கி, பரிசுத்த ஆவியினாலே, பரலோக ராஜ்யத்தையும் நித்திய ஜீவனையும், என்பவை விடப்பட்டிருக்கிறதாகக் கவனிக்கவும்.

vi கேள்விகளும் மறுமொழிகளும். 2-ம் கேள்வி இந்தப் பிள்ளையின் பேராலே, கிறிஸ்தவ விசுவாசத்தை அறிக்கையிடுகிறாயா?

மறுமொழி: அறிக்கையிடுகிறேன்.

நுப்ரிக்: பின்பு குருவானவரும் ஞானத் தாய் தகப்பன்மாரும் அப்போஸ்தல விசுவாசப் பிரமாணத்தைச் சொல்லுவார்கள்.

3-ம் கேள்வி. இந்தப் பிள்ளையின் பேராலே, தேவனுடைய பரிசுத்த சித்தத்திற்கும் கட்டளைக்குக் கீழ்ப்படிவதாக வாக்குக்கொடுக்கிறாயா?

மறுமொழி: வாக்குக்கொடுக்கிறேன்.

4-ம் கேள்வி. இந்தப் பிள்ளையின் பேராலே, ஞானஸ்நானங் கொடுக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறாயா?

மறுமொழி: அதையே கேட்டுக்கொள்ளுகிறேன்.

vii பிரதிஷ்டை ஜெபம். இது ஸ்தோத்திர ஜெபமாயிருக்கும்படி, வாக்கியங்களோடும் மறுமொழிகளோடும் பின்வருமாறு வழங்கும்படி ஏற்பட்டிருக்கிறது:

குரு: கர்த்தர் உங்களோடிருப்பாராக

அவர் உமதாவியோடும் இருப்பாராக

குரு: உங்கள் இருதயத்தைக் கர்த்தரிடத்தில் உயர்த்துங்கள்.

எங்கள் இருதயத்தைக் கர்த்தரிடத்தில் உயர்த்துகிறோம்.

குரு: நம்முடைய கர்த்தராகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தக் கடவோம்.

அப்படிச் செய்வது தகுதியும் நீதியுமாயிருக்கிறது.

குரு: கர்த்தாவே, பரிசுத்த பிதாவே, சர்வ வல்லமையுள்ள நித்திய தேவனே, நாங்கள் தேவரீருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறது மிகவும் தகுதியும் நீதியும் எங்களுக்கு விசேஷித்த கடமையுமாயிருக்கிறது. விசேஷமாய் ......... சிந்தினதற்காகவும் ...... கட்டளையிட்டதற்காகவும் உமக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தக் கடமையுள்ளவர்களாயிருக்கிறோம்.......
(பரிசுத்த நற்கருணை ஆராதனை முறைமையை ஒத்துப்பார்க்கவும்.)

viii ஜெப அழைப்பு. மறு ஜன்மம் அடைந்து என்பதற்கு மறுபடியும் பிறந்து என்று எழுதியிருக்கிறது.

ix இறுதி ஜெபம். இரண்டாகப் பிரிக்கப்பட்டுப் பின் வருமாறு எழுதியிருக்கிறது:

மிகவும் இரக்கமுள்ள பிதாவே, உம்முடைய பரிசுத்த ஆவியினாலே இந்தக் குழந்தையை மறுபடியும் ஜநிப்பித்து, புத்திர சுவிகாரத்தினாலே உம்முடைய சொந்தப் பிள்ளையாக ஏற்றுக்கொண்டு உம்முடைய பரிசுத்த சபையின் அங்கத்தினனாகச் சேர்த்ததற்காக முழு இருதயத்தோடே உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். ஆமென்.

கர்த்தாவே, ஞானஸ்நானத்தின் மூலமாய்க் கிறிஸ்துவின் மரணத்துக்குள் அவருடனே கூட அடக்கம்பண்ணப்பட்டிருக்கிற இவன் அவர் உயிர்த்தெழுதலுக்குப் பங்காளியாயிருக்கவும், புது ஜீவனை அடைந்தவனாய் உம்மைச் சேவிக்கவும், கடைசியில் மற்றுமுள்ள உம்முடைய பரிசுத்த சபையார்களோடுகூட உமது நித்திய ராஜ்யத்தில் சுதந்தரவாளியாகவும் எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்மூலமாய்க் கிருபை செய்தருளும். ஆமென்.

பாவத்துக்கு மரித்து நீதிக்குப் பிழைத்து, பாவச் சரீரத்தை முற்றிலும் அழிக்கவும் என்பவைகள் விடப்பட்டிருக்கிறதைக் கவனிக்கவும்.

x குடும்ப ஜீவியத்திற்காக சொல்லிய ஜெபம்.

பெற்றோருக்காகவும் அவர்கள் செய்யும் குடும்ப ஜீவியத்திற்காகவும் இந்த ஜெபம் சேர்க்கப்பட்டது இப்புதிய முறைமையில் கண்டுள்ள சிரேஷ்டமான மாற்றல்.

எங்கள் பரமபிதாவாகிய கடவுளே, உமது திருக்குமாரனாகிய இயேசு கிறிஸ்து இம்மையிலிருக்கும் பொழுது நாசரேத்தூரிலுள்ள ஓர் வீட்டில் வளர்ந்து வந்தாரே; இந்தப் பிள்ளை இருக்கும் வீட்டை ஆசீர்

வதித்து, இந்தப் பிள்ளை எப்பொழுதும் உமக்குப் பயந்து உம்மிடம் அன்பு கூறுகிறவனுய் வளரும்படி இவனை பராமரித்துவரும் யாவருக்கும் ஞானத்தையும் விவேகத்தையும் அருளிச்செய்யவேண்டு மென்று எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமேன்.

xi போதனைகள்.

முதலாம் போதனையில், நீங்கள் பார்த்துக்கொள்ளவேண்டும் என்ப வற்றின் பின் எழுதியுள்ளவைகளாவன:

ஏற்ற ஆயத்தத்தைப் பெற்றுக் கொண்டவனுய் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சரீரமும் இரத்தமுமாகிய பரிசுத்த நற்கருணையில் அவன் பங்கு பெறும்படியாகவும், திருச்சபையின் ஐக்கியத்தில் நிலைத்திருந்து உண்மையோடு உலகத்தில் தேவனைச் சேவிக்கும்படியாகவும், திடப் படுத்தலைப் பெறும்படி அவன் அத்தியக்ஷரிடத்தில் கொண்டுவரப்படும்படி நீங்கள் கருத்துள்ளவர்களாயிருக்கவேண்டும்.

கேள்வி: இவற்றையெல்லாம் கற்றுக்கொள்ளவும் செய்யவும் இந்தப் பிள்ளைக்கு உதவி செய்வீர்களா?

மறுமொழி: கர்த்தர் எனக்குச் சகாயராயிருக்க அப்படியே செய்வேன்.

பின்பு

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து காண்பித்த நல்மாதிரியைப் பின்பற்றி முதலானவைகள் வரும்.

xii கடைசிய ஆசீர்வாதம்.

ரூப்ரிக்: காலை மாலை ஜெபமல்லாத நேரத்தில் இந்த ஞானஸ்நான ஆராதனையை ஆசரிக்க நேரிட்டால், பின்வரும் ஆசீர்வாதத்தைச் சொல்லிக் குருவானவர் கூடிவந்திருக்கிறவர்களைப் போக விடுவார்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதித்துக் காக்கக் கடவர் முதலானவை.

## வீடுகளில் பிள்ளைகளுக்கு ஞானஸ்நானங் கொடுக்கும் முறைமை.

ஆலயத்தில் குழந்தைகளுக்கு ஞானஸ்நானங் கொடுக்கும் முறைமையில் மேற் கூறியபடி செய்யப்பட்ட மாற்றங்களுக்கு இசைவாய், இந்த முறைமையில் அதே மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. விசேஷமாய் கவனிக்க வேண்டிய சில மாற்றங்கள் உண்டு:

ரூப்ரிக்: ஆகிலும் ஒரு குருவாகிலும் வரக்கூடாதிருந்து மிகுந்த அவசரம்

ஏற்பட்டால், அங்கே இருக்கிறவர்களில் ஒருவர் பிள்ளைக்குப் பெயரிட்டு அதன்மேல் ஜலத்தை வார்த்துச் சொல்லவேண்டியதாவது:

பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே உனக்கு ஞான ஸ்நானம் கொடுக்கிறேன். ஆமென்.

பின்பு கூடி வந்திருக்கிறவர்கள் கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்ல வேண்டும். அதன்பின் இவ்விதமாய் ஞானஸ்நானம் கொடுத்ததாக அந்தச் சேகரக்குருவானவருக்கு உடனே தெரிவிக்கவேண்டும்.

மேற் கூறியபடி, இந்த ரூப்ரிக் நம் தற்காலத் தமிழ் ஜெப புஸ்தகத்திலும் சேர்க்கப்பட்டுள்ளதைக் கவனிக்கவும். இதிலுள்ள ஓர் விபரீதம் கவனிக்கற்பாலது. எவ்விதமான பிரதிஷ்டை ஜெபமின்றி, சாதாரணமான தண்ணீரைக் கொண்டு ஞானஸ்நானங் கொடுக்கக் குறித்துள்ளது. இது சபை வழக்கத்துக்கும் ஐதீகத்துக்கும் முரண்பட்டது. ஒழுங்கான பிரதிஷ்டை ஜெபத்தைச் சொல்வதற்குப் பட்டம் பெற்றவருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டதைத் தவிர, வேறொருவருக்கும் அதிகாரம் கொடுக்கப்படாததால், குரு இல்லாதிருக்கும்பொழுது ஞானஸ்நானங் கொடுக்க நேர்ந்தால், முதலாவது பிரதிஷ்டை ஜெபத்துக்குப் பதிலாக்க் கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்வி, அதன்பின் ஞானஸ்நானங் கொடுக்க வேண்டுமென்பது பழைய சபையின் நல்ல ஏற்பாடு. இது மாற்றப்பட்டது உசிதமானதன்று.

தேவ கோபாக்கினைக்குட்பட்டவனும் என்பது விடப்பட்டதைக் கவனிக்கவும்.

## பருவங் கடந்த ஞானஸ்நான ஆராதனை முறைமை

இதுவும் மேற்கூறிய குழந்தைகள் ஆராதனை முறைமைக்கு அநுசரணையாக மாற்றப்பட்டிருக்கிறது. விசேஷமாய்க் கவனிக்கத்தக்க சில மாற்றங்களும் உண்டு.

i நுப்ரிக்: அவர்கள் ஞானஸ்நானம் பெறத் தகுதியுள்ளவர்களாகக் காணப்பட்டால், தங்களுக்குச் சாட்சிகளாக மூன்று பேரை, அல்லது குறையாமல் இரண்டு பேரைத் தெரிந்து கொள்வார்கள்.

(ஞானத்தாய் தகப்பன்மார் என்ற பெயர் விடப்பட்டு, இந்த முறைமையில் சாட்சிகள் என்பது மாத்திரம் வழங்கி வருகிறது).

ii சுவிசேஷ வாக்கியத்திற்கு பின் வரும் போதனையில்

. இன்னும் அநேக வார்த்தைகளையும் சொல்லி என்பவை முதல் உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது என்பவை மட்டும் வாசியாமல் விடப்படலாம் என்று குறித்திருக்கிறது.

iii கர்த்தருடைய ஜெபத்துக்குப் பின்வரும் இறுதி ஜெபம்

குழந்தைகள் முறைமையிலுள்ள ஜெபமும் (மாற்றமின்றி) பருவங் கடந்த முறைமையிலுள்ள ஜெபமும் அச்சடிக்கப்பட்டு, இவற்றில் ஒன்றையாவது வாசிக்க வேண்டுமென்று கற்பித்திருக்கிறது.

iv இறுதியில் சேர்க்கப்பட்ட இரண்டு புது நடபடிச் சட்டங்கள்:

a இளமைப்பிராயம் கடந்த ஒருவன் முன் கிரமமாய் ஞானஸ்நானம் பெற்றதுண்டோ இல்லையோ என்பதைப் பற்றி சந்தேகம் உண்டாக நேரின், இந்த முறைமையைக் குருவானவர் அநுசரித்து, ஞானஸ்நானங்கொடுக்கும் பொழுது,

நீ இதற்கு முன் ஞானஸ்நானம் பெற்றிராவிட்டால்,......பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே உனக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன். ஆமென்.

என்று சொல்லவேண்டும்.

b இளமைப்பிராயம் கடந்த ஒருவன் மரணத்தருவாயிலிருந்தால், அல்லது பலவீனத்தினால் ஆலயத்துக்கு வரமுடியாத நிலைமையிலிருந்தால், அவனிடத்திலிருக்கும் மனந்திரும்புதல் விசுவாசம் ஞானஸ்நானம் பெறும்படியான விருப்பம் ஆகிய இவைகள் போதியவைகள் என்று குருவானவர் விசாரித்து அறிந்து, வீடுகளில் பிள்ளைகளுக்கு ஞானஸ்நானங் கொடுக்கும் முறையின்படியே, அவன் பிராயத்துக்கு ஏற்பச் செய்ய வேண்டிய மாற்றங்களைச்செய்து அவனுக்கு ஞானஸ்நானம் கொடுக்கலாம்.

முன் சந்தேகத்துக்குட்பட்ட சிலவற்றை விளக்குவதற்கு இவைகள் மிகவும் உபயோகமானவைகள் என்று கவனிக்கவும்.

1928 ஜெப புஸ்தகமும் ஞானஸ்நானத்தைப்பற்றிய உபதேசமும்.

திருச்சபைச் சித்தாந்தங்களும் உபதேசங்களும் இந்தப் புது ஜெப புஸ்தகத்தில் சற்றெனிலும் மாற்றப்படவில்லை என்று 1928-ல் இந்தப் புஸ்தகத்தை வெளியிட்டவர்கள் ஒப்புக்கொண்டு அறிக்கை செய்தார்கள். அதற்குரிய பாயிரத்தில், பின்வருமாறு அடங்கியிருக்கிறது:

பழைய பரிசுத்த நற்கருணை முறைமையோடுகூட புது முறைமை ஒன்றை நாங்கள் சேர்க்கப்பட்டதைக் குறித்தும், வியாதியஸ்தர் நற்கருணைக்குச் சில புதிய நியமங்களை நாங்கள் ஏற்படுத்தியதைக் குறித்தும் சிலர் வருத்தப்படலாம். எனினும் அதினாலே பரிசுத்த சாக்கிரமெந்தை மாற்றுவதையாவது, கர்த்தருடைய நியமத்திற்கு மாறாக அதை உபயோகப் படுத்துவதற்கு அனுமதி கொடுப்பதையாவது உத்தேசித்து நாங்கள் அப்படிச் செய்தோமென அவர்கள் எண்ணலாகாது. வேதபோதனை

யையும் புராதன காலத்துச் சபைப்பிதாக்கள் பயபக்திக்கும் நல்லொழுக்கத்துக்கும் ஏதுவாக ஏற்படுத்திய நியமங்களையும் அநுசரித்துச் சகலத்தையும் செய்வது எங்கள் மேல் விழுந்த கடமையென்று எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருக்கிறோம்

என்ற போதிலும். பழைய புதிய ஞானஸ்நான ஆராதனை முறைமைச் சங்காசஞ் செய்தால், ஜெபங்களிலும் சட்டங்களிலும் சில மாற்றங்கள் செய்யப்பட்டதோடுங்கூட, திருச்சபை உபதேச விஷயத்திலும் மாறுதல் ஏற்பட்டதென்று விளங்கும். பிள்ளைகள் என்னத்துக்கென்று ஞானஸ்நானம் பெறுகிறார்கள் என்றும், ஜன்ம பாவம் இன்னதென்றும் கேட்டுக் கொண்டால் அந்த மாறுதல் இன்னதென்று விளங்கும். புதிய முறைமையைப் பார்த்தால், ஜன்ம பாவம் பாவஞ் செய்வதற்கு இசைந்திருக்கும் ஓர் பலவீனம் என்று தாற்பரியப்படுத்த வேண்டும். இப்படியிருப்பதினால், ஞானஸ்நானத்தின் மூலமாய்த் தேடப்படும் வரமானது ஆவிக்குரிய பிரகாரமாய்ப் பலப்படுத்தப்படலும், புத்திர சுவீகாரத்தின்மூலமாய்த் தேவனுக்குப் பிள்ளையாதலும், அந்த நிலைமையில் நிலைத்திருக்கும்படியான மன உறுதியுமே. பழைய முறைமையைப் பார்த்தாலோ, வேறு கொள்கை அதில் அடங்கியிருக்கிறதென்று தென்படும். அதென்னவெனில், மனுஷக் குலம் ஒன்றாயிருப்பதாலும், மானிடர் யாவரும் ஒரே சுபாவத்தில் பங்காளிகளாயிருப்பதாலும், மனுக்குலத்தின் மேல் தேவகோபம் தங்கிக்கொண்டிருப்பதாலும், பிள்ளைகளிடத்திலுள்ள சுபாவம் பாவமுள்ள சுபாவமென்றும், அவர்களும் தேவ கோபாக்கினைக்குட்பட்டவர்களென்றும் சொல்வது பொருத்தமாயிருக்கும். இப்படியிருக்க, ஞானஸ்நானத்தில் தேடும் ஆசீர்வாதங்களாவன: தேவ கோபாக்கினைக்கு நீங்கலாதல், பிள்ளையினிடத்திலும் இருக்கிற பாவத்தன்மை அழிக்கப்படுவது, பிள்ளை பாவத்துக்குச் செத்து நீதிக்குப் பிழைத்திருத்தல் என்பவைகளே.

இவ்விரண்டில் வேதத்துக்கும் பொதுவான திருச்சபையின் உபதேசத்துக்கும் அநுசாரமானது எது என்று இந்த நூலில் விவரித்து ஆராய்வது கூடிய காரியமன்று. அந்த வேறுபாடு இருக்கிறதென்று விளக்கிக் காட்டுவது அவசியமென்று தோன்றுகிறது. பரிசுத்த சாக்கிரமெந்துக்களைப் பற்றிய உபதேசத்தைத் தீர ஆராய்ந்து விளக்கிக் காட்டும் நூல் ஒன்று வருங் காலத்தில் வெளியிடப்பட நேரிட்டால், அதில் இந்த விஷயம் நுணுக்கமாய் ஆராயப்படுவது பொருத்தமாகும்.

## 3-ம் அத்தியாயம்: ஞானஸ்நானத்திற்குரிய ஆயத்தம்.

இங்கிலாந்தில் எல்லாரும் பேர் மட்டிலுமாவது கிறிஸ்தவர்களாயிருக்கிறார்கள்; 100-க்கு 95 பேர் குழந்தைகளாய் ஞானஸ்நானம் பெற்றிருப்பார்கள். ஆகவே, ஞானஸ்நானத்திற்குரிய ஆயத்தத்தைப்பற்றி நம் ஜெப புஸ்தகத்தில் வேண்டிய குறிப்புகளும் ஆலோசனைகளும் இரா. இது ஓர் குறைவு; இந்தக் குறைவு நிவர்த்தியாக்கும்படி, தற்காலத்தில் இந்திய சபைத் தலைவர்கள் முயன்று வருகிறார்கள்.

அப்போஸ்தலர் காலத்தில், ஒருவன் தான் இயேசு கிறிஸ்துவை மெசியாவாக ஏற்றுக்கொண்டதாகப் பகிரங்கமாய் அறிக்கை செய்தால், உடனே வேறு ஆயத்தமின்றி அவனுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது வழக்கம். பெந்தேகோஸ்தே நாளில் 3000 பேர் பேதுரு செய்த பிரசங்கத்தைக் கேட்டு, மனதில் குத்துண்டு மனந் திரும்பி அக்ஷணமே ஞானத் தீட்சையைப் பெற்றார்கள். (அப். 2:41). ஏசாயா தீர்க்கதரிசனத்தின் 53-ம் அத்தியாயத்தைப் பிலிப்பு தாற்பரியப்படுத்தினதைக் கேட்ட பின், எத்தியோப்பிய மந்திரி பிலிப்புவை நோக்கி: இதோ, தண்ணீர், நான் ஞானஸ்நானம் பெறத் தடையென்ன என்றான். இரதத்தை நிறுத்த அவன் கட்டளையிடவே, பிலிப்பும் அண்ணகனும் தண்ணீரில் இறங்கினார்கள்; பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். (அப். 8:37-38). பிலிப்பி பட்டணத்திலுள்ள சிறைச்சாலைக்காரனும் அவன் வீட்டாரும் கிறிஸ்துவை விசுவாசித்த அன்று இரவிலேயே ஞானஸ்நானம் பெற்றனர். (அப் 16:33-34). வேதம் நமக்கு முன்மாதிரியும் கட்டளை நூலுமாக இருக்கிறது: என்ற போதிலும், இதைப் போன்ற எல்லாக் காரியங்களிலேயும் வேதத்தில் சொல்லியதைப் பிரமாணமாக வைத்து அதன்படி நாம் செய்வது அவசியமா? ஓர் இந்து நண்பர் 'இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறேன், எனக்கு ஞானஸ்நானங்கொடுங்கள்' என்று கேட்டுக்கொண்டால், வேறு ஆயத்தமின்றி உடனே நாம் அவருக்கு ஞானதீட்சை அளிப்பது சரியாயிருக்குமோ? இல்லவேயில்லை. அப்போஸ்தலர் காலத்தில் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் யூதரும், யூதமார்க்கத்தைச் கற்றுக் கொண்டவர்களுமே. ஆகவே கிறிஸ்தவ சம்பிரதாயத்திலுள்ள சில முக்கியமான அம்சங்களை முன்னதாகவே ஏற்றுக்கொண்டிருந்தனர். அவையாவன: தேவனுடைய ஏகத்துவம், பாவத்தின் தன்மை, பாவத்துக்குவரும் தண்டனை, சன்மார்க்கப் பிரமாணம், ஜெப தவங்கள், நித்திய ஜீவன் முதலானவைகளே. இவற்றைக் கைக்கொண்டதுமல்லாமல், இயேசு என்பவர் மெசியாவும் தேவகுமாரனுமாயிருக்கிறார். அவர் மூலமாய்ப் பாவ விமோசனமாம் என்ற சத்தியங்களை அவர்கள் ஏற்றுக்கொண்டால், அவர்களைப் பூர்ண கிறிஸ்தவர்களாகப் பாவித்துத் தாமதமின்றி அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது நலம் என்று தோன்றிற்று. பின்பு, சன்மார்க்கப் பிரமாணத்தையும் பழைய ஏற்பாட்டில் தேவன் தம்மைக் குறித்து வெளிப்படுத்தியிருந்த சத்தியங்

களையும் அறியாத புறமதஸ்தர் கூட்டங் கூட்டமாய்த் திருச்சபையில் சேரத் தலைப்பட்டபொழுது, காரியம் முற்றிலும் வேறுபட்டது. இவர்கள் அவசரமாய்த் திருச்சபையில் சேர இடங்கொடுக்கப்பட்டால், சபையின் பவித்திரம் அற்றுப்போகும் என்றும் அதன் விசேஷத்தன்மை மாறிவிடும் என்றும் சபைத் தலைவர்கள் அறிந்து, ஒருவன் தீரப் பரிசோதிக்கப்பட்டு விசுவாசமுள்ளவனாய்க் காணப்பட்டாலன்றி, அவனுக்கு ஞானஸ்நானங் கொடுக்கப்படலாகாது என்று கண்டிப்பாய் விளம்பரஞ்செய்தார்கள். 3-ம் நூற்றாண்டில், ஞானஸ்நான ஆயத்தக்காரர் ஆயத்தம் பண்ணப்படவேண்டிய காலம் மூன்று வருஷங்கள் என்பதற்கு இப்போலிற்று என்ற நூலாசியர் சாட்சி. மூன்று வருடங்கள் சென்ற பிற்பாடும், அவனிடத்தில் வெளியரங்கமான பாவம் கண்டு பிடிக்கப்பட்டால், அல்லது அவனிடத்திலுள்ள விசுவாசம் குறைவுள்ளதாகக் காணப்பட்டால், அவனுக்கு ஞானஸ்நானங்கொடுக்கச் சபைத் தலைவர்கள் சம்மதியாமல் ஆயத்தக்காரனாய் நிலைத்திருக்கும்படி சொல்லுவார்கள்.

திருச் சபை வரலாற்றைக் கவனிக்குங்கால், சபை கெட்டுப்போவதற்கு அவசரமான ஞானஸ்நானம் முக்கியமான ஓர் ஏது என்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்கும். எந்தக் காலங்களிலும் நாடுகளிலும் சபைத் தலைவர்கள் இதைப்பற்றி ஜாக்கிரதையாயிருந்து, விசுவாசமில்லாதவர்களுக்கு ஞானஸ்நானங்கொடாமல், விசுவாசமாயுள்ளவர்களை மாத்திரம் சபையில் சேர்த்துக்கொண்டிருக்கிறார்களோ, அக்காலங்களிலும் நாடுகளிலும் சபை தளிர்த்தோங்கி முன்னேற்றம் அடைந்திருக்கிறது. சபைத் தலைவர்கள் அசதியாயிருந்து, கண்டமட்டும் வேண்டிய ஆயத்தமின்றி ஞானத்தீட்சை அளிப்பதற்கு இடங்கொடுக்கத் தலைப்பட்டால், சில வருடங்களுக்குள் சபையானது அதற்கேற்ற வனப்பை இழந்து, தளர்ந்து குற்றுயிராய்க் கிடக்கும். சென்ற நூற்றாண்டில் ஊழியஞ்செய்த மிஷனெரிமார் இதை நன்றாய் அறிந்து, விசுவாசமில்லாத எவருக்கும் ஞானஸ்நானங் கொடாதபடி அதிக ஜாக்கிரதையாயிருந்தனர். திருநெல்வேலி ஜில்லாவில் திரளான ஜனங்கள் கிறிஸ்தவர்களாக அபேட்சித்த காலத்தில், அவர்களை ஆயத்தக் காரராக அவர்கள் சேர்த்தார்களே தவிர, அவர்களுக்குச் சீக்கிரம் ஞானஸ்நானங்கொடுக்கவில்லை. கிறிஸ்து மார்க்க சத்தியங்களை நன்றாய்ப்படிக்க வேண்டுமென்று வாசிக்கத் தெரியாதவர்களையும் கட்டாயப்படுத்தினார்கள். சிலரை ஏழு வருடங்களாக ஆயத்தக்காரராக வைத்து வந்தார்கள். அவர்கள் காலத்தில் சபை அடைந்த உச்சிதமான நிலைமை உலகமெல்லாம் அறிந்த விஷயம். பிற்காலத்திலோ, சிறந்த மிஷனெரிமார் ஏற்படுத்திய கண்டிப்பான சட்டங்களுக்குப் பதிலாக, இளக்காரங் காட்டும் காலம் தொடங்கிற்று. நம்முடைய காலத்தில் சிலர் மூன்று ஞாயிற்றுக் கிழமைகளில் தொடர்பாக ஆலயத்துக்கு வந்தபின், எவ்விதமான ஆயத்தமின்றி ஞானஸ்நானம் பெற்றதைக் கேள்வியுற்று யாம் வருந்தியது உண்டு. அப்படிப்பட்ட செய்கைகளினால் விளையும் கேடு இன்னதென்று அறிய விரும்பின், சபை முன்

இருந்த நிலைமையையும் அது இப்பொழுது இருக்கிற நிலைமையையும் ஒத்துப் பார்ப்பதனால் அது விளங்கும்.

இந்தக் கெட்ட வழக்கம் உள்ளே நுழைந்து சபை பாழாக்கினதற்குக் கலப்பு விவாகம் முக்கியமான காரணம். கலப்பு விவாகம் நல்லதன்று என்று வேதாகமம் பற்பல ஆகமங்களிலும் சந்தர்ப்பங்களிலும் வற்புறுத்திப் போதிக்கிறது:

உபாகமம். 7 : 3—4.

நெகே. 13 : 23—27.

நல்ல கிறிஸ்தவன் தன் மகனுக்கு இந்து பெண்ணை எடுக்கலாமென்று ஒரு நாளும் நினைக்கவே மாட்டான்; தன் மகளை ஓர் இந்து மாப்பிள்ளைக்குக் கட்டிக் கொடுக்கலாமென்று கனவிலுங்கூட நினைக்கவே மாட்டான். எங்கே பயபக்தியுள்ள கிறிஸ்தவர்கள் இருக்கின்றார்களோ, அங்கேயே தன் மகனுக்குப் பெண்ணையும் தன் மகளுக்குப் புருஷனையும் தேடிப் பார்ப்பான். இந்தக் கேடான காலத்திலோ, பயபக்தியில்லாதவர்கள் பலர் இந்த ஒழுங்கீனத்தைச் செய்துகொண்டு, அப்படிப்பட்ட விவாகங்கள் ஆலயத்தில் நடத்தப்பட வேண்டுமென்று வந்து கேட்பதுண்டு. இது தகுதியன்று. இந்தக் கெட்ட வழக்கத்தினால் குடும்பத்துக்கும் சபைக்கும் பல தீமைகள் விளையுமென்று குருமாரும் உபதேசியாரும் அடிக்கடி சபையாரை எச்சரித்தல் வேண்டும். எனினும், இப்படிப்பட்ட விவாகங்கள் ஆலயத்தில் நடக்கக்கூடாதென்று சபையானது அவற்றை விலக்காமல், மானிட பலவீனத்திற்கு ஓர் அளவில் இணங்கி, இந்துப் பெண்ணுக்கு அல்லது மாப்பிள்ளைக்கு ஞானஸ்நானங் கொடுத்து விவாகத்தை ஆலயத்தில் கிரமமாய் நடத்தும்படி சில நிபந்தனைகளை ஏற்படுத்தியதுண்டு.

1 இது பருவங் கடந்த ஞானஸ்நானம் போல் பாவியாமல், குழந்தைகள் ஞானஸ்நானம்போல் பாவித்துக் கொடுத்தல் வேண்டும். இதற்கு ஆதாரமானது: அவிசுவாசியான புருஷன் தன் மனைவியால் பரிசுத்தமாக்கப்படுகிறான். அவிசுவாசியான மனைவியும் அந்தச் சகோதரனால் பரிசுத்தமாக்கப்படுகிறாள் என்று பரிசுத்த பவுல் (1 கொரி. 7 : 13) எழுதியதே. இது திருச்சபையானது ஞானத்தாய் தகப்பன்மாருடைய விசுவாசத்தைப் பார்த்துப் பிள்ளைகளுக்கு ஞானஸ்நானங் கொடுப்பதைப் போன்றது. மாப்பிள்ளை விசுவாச அறிக்கை செய்யக்கூடியவனாயிருந்தால், அந்த விசுவாசத்தை ஆதாரமாகக்கொண்டு பெண்ணுக்கு ஞானஸ்நானங் கொடுக்கச் சபை சம்மதிக்கிறது. பெண் விசுவாச அறிக்கை செய்யக் கூடியவளாயிருந்தால், மாப்பிள்ளைக்கு ஞானஸ்நானங் கொடுக்கச் சபை

மறுக்கிறதில்லை. விசுவாசமுள்ளவர்களுடைய விசுவாசம் அவிசுவாசிகளைப் பரிசுத்தமாக்கும் என்ற நம்பிக்கை இந்த ஞானஸ்நானத்திற்கு ஆதாரம்.

2 விவாகஞ் செய்துகொள்ளப் போகும் ஒருவன் ஒருத்தி அதன்முன் ஞானஸ்நானம் பெற வேண்டுமாயின், அறிக்கை வாசிக்கப்படும் பதினைந்து நாட்களாயினும் ஆரம்பப் பயிற்சியைப் பெற்று, ஞானஸ்நானம் பெறும் சமயத்திலும் விவாகஞ் செய்துகொள்ளும் சமயத்திலும் சொல்லவேண்டுவனவற்றைச் சற்று உணர்வோடு சொல்லும்படியாக, கிறிஸ்து மார்க்கத்தின் அடிப்படையான சத்தியங்களைக் கற்று அறிந்து கொண்டிருக்கவேண்டும்.

3 இப்படிப்பட்டவர்களுக்குத் திடப்படுத்தல் உடனே கொடுக்கப்படுவது ஆகாது.

4 கிறிஸ்தவர்கள் படிக்கவேண்டிய எல்லாவற்றையும் வருங் காலத்தில் படிக்கும்படி ஞானஸ்நானம் பெறப் போகிறவர்கள் வாக்களிக்க வேண்டும்.

5 கிறிஸ்தவ பிரகாரமாய் அவர்களை நடத்தவும் வளர்க்கவும் கிறிஸ்தவ வீட்டார் ஜாக்கிரதையாயிருக்கும்படி வாக்களிக்க வேண்டும். இந்த நிபந்தனைகள் நிறைவேறினால், விவாகத்திற்கென்று கிறிஸ்தவர்களாக விரும்புவோருக்கு ஞானஸ்நானங் கொடுக்கலாம். இவ்வித ஞானஸ்நானங்களினால் ஏற்படக்கூடிய தீங்குகள் கூடியவாறு நீக்கப்படலாம்.

மற்றப்படி, சிலர் கிறிஸ்தவர்களாக வேண்டுமென்று தங்கள் விருப்பத்தை அறிக்கையிட்டால், அவர்களுக்கு அவசரமாய் ஞானஸ்நானங் கொடுக்காமல், அவர்கள் வேண்டிய பயிற்சியைப் பெறும்படி ஒழுங்கு செய்ய வேண்டுமென்பது சபைச் சட்டம். இதன் சம்பந்தமாய்த் திருநெல்வேலி அத்தியக்ஷாதீனத்தில் ஏற்பட்ட சட்ட திட்டங்களை இங்கே விவரித்துக் காட்டுவோம்:

சிலர் தாங்கள் ஞானஸ்நானம் பெற வேண்டுமென்று தங்கள் விருப்பத்தை மனவுறுதியுடன் குருவானவரிடம் தெரிவித்தால், கூடிய சீக்கிரம் ஜெபத்தோடு கூட அவர்களை ஞானஸ்நான ஆயத்தக்காரராய்ச் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

பரிசுத்த ஞானஸ்நானம் பெற விரும்புவோரை ஏற்றுக்கொள்ளும் ஆராதனை.

இந்த ஆராதனை முறைமை திருநெல்வேலி அத்தியக்ஷருடைய அநுமதியைப் பெற்றுள்ள விசேஷ கால ஆராதனை முறைமைகள் என்ற நூலில் அடங்கியுள்ளது. இந்த ஆராதனை முறைமையை எல்லாரும்

வாசித்துக் கவனமாய்ப் படித்திருப்பது அவசியம். இதில் கவனிக்க வேண்டிய குறிப்புகளாவன:

1 ஆராதனையின் முதலாம் பாகம் ஆலயத்தின் பிரதான வாசலின் முன் வழங்க வேண்டும்.

இது புறத்திலுள்ளவர்களை உள்ளே கொண்டுவரும் ஓர் ஆசாரம்.

2 அபேட்சகரைச் சபை மூப்பர் குருவானவரிடம் கூட்டிக்கொண்டு வரவேண்டும்.

ஆகவே, சபை மூப்பர்கள் அவர்களோடு உறவாடி, அவர்களிடம் வினவி, அவர்கள் உண்மையுள்ளவர்களென்று அறிந்திருக்க வேண்டும். சபை மூப்பர் இவ்வித ஆவிக்குரிய கடமைகளை நிறைவேற்றக் கூடியவர்களாயிருத்தல்வேண்டும் என்று கவனிக்கவும்.

3 அபேட்சகர் சில வாக்குத்தத்தங்களைச் செய்யவேண்டும். ஆனாலும் இது ஓர் விசுவாசிக்க அறிக்கையென்று நினைக்கலாகாது. விசுவாசிக்க வேண்டிய சத்தியங்களை இவர்கள் இன்னும் தீரப் படிக்கவில்லை, அவற்றை அறிக்கையிடக்கூடிய நிலைமைக்கு வரவுமில்லை.

இவர்கள் ஒப்புக்கொள்ளவேண்டியவை மூன்று:

இந்து மார்க்கப் பழக்க வழக்கங்களை வெறுத்துவிட.

கிறிஸ்து மார்க்க சத்தியங்களை ஊக்கமாய்ப் படிக்க.

தாங்கள் அறிந்துகொண்டதை மற்றவர்களுக்கு அறிவிக்க.

4 குருவானவர் ஒவ்வொருவரையும் அழைத்துப் பேர் சொல்லி ஆயத்தக்காரனை ஏற்றுக்கொள்ளவேண்டும். சிலர் அச்சமயத்தில் தங்கள் பேரை மாற்ற விரும்புவார்கள்; அவர்கள் இந்து நாமத்தில் ஓர் பிசாசின் பேர் அம்சமாயிருந்தால், அப்பொழுது அந்தப் பெயரை மாற்றி ஓர் கிறிஸ்தவ பெயரைக் கொடுப்பது நல்லது: எனினும், இவ்விதம் செய்யப்பட்டிருக்குமேயாயின், ஞானஸ்நானம் கொடுக்கும்பொழுது, அத்துடன் இன்னொருக் கிறிஸ்தவ பெயரைச் சேர்த்துக்கொள்ளல் நலமென்று கவனித்தல்.

இந்த ஆராதனை முறைமைக்குப் புறம்பான சடங்காசாரம் ஒன்றும் கற்பிக்கப்படவில்லை. ஆயத்தக்காரர் விரும்பினால் ஓர் சிறு சிலுவையை ஆசீர்வதித்து அவர்கட்குக் கொடுக்கல் பொருந்தும்.

5 அச்சமயத்தில் கூறப்படும் ஆசீர்வாதத்திற்குப் பின், எல்லா ஆராதனைகளிலும் நடப்பதுபோல், கர்த்தருடைய ஜெபம் வழங்கிவருவதைக் கவனிக்கவும்.

6 பின்வரும் ஜெபங்களில் ஒன்று பிதாவை நோக்கியும் ஒன்று குமாரனை நோக்கியும், ஒன்று பரிசுத்த ஆவியை நோக்கியும் சொல்லப்படுவதைக் கவனிக்கவும்.

பின்பு செய்ய வேண்டுவனவற்றைக் குறித்துத் திருநெல்வேலி அத்தியக்ஷர் பிறப்பித்த விதிகளாவன:

1 ஞானஸ்நான ஆயத்தக்காரர் அந்த நிலைமையில் ஒரு வருஷமாக இருப்பது நல்லது. அவர்கள் படித்தவர்களாயிருந்தால், அவர்கள் குறையாமல் மூன்று மாதமும், படியாதவர்களாயிருந்தால், குறையாமல் ஆறு மாதங்களாய் ஆயத்தக்காரராக நிலைத்திருக்கவேண்டும்.

2 ஏற்றுக்கொள்ளும் ஆராதனை முடிந்தவுடன், அந்தந்தச் சபை டாப்பிலும் ஆயத்தக்காரருடைய நாமங்களைப் பிரத்தியேகமாய்ப் பதிவு செய்யவேண்டும். அவர்களை ஏற்றுக்கொண்ட தெய்தியையும் எழுதல் வேண்டும்.

3 அவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அந்தச் சேகரத்திலுள்ள ஒவ்வொரு சபையிலும் தெரிவிக்கவேண்டும். அவர்கள் ஞானஸ்நானம் பெறுமளவும், ஒவ்வொரு சபையிலும் அவர்களுக்காக ஜெபம் பண்ணப்பட வேண்டும்.

4 விசேஷமாய், பரிசுத்த நற்கருணை ஆசரிக்கப்படும் பொழுதெல்லாம், சபையார் இவர்களுக்காக ஜெபம்பண்ணும்படி குருவானவர் அவர்களை ஏவவேண்டும். திருச்சபைக்காகச் செய்யும்படி ஏற்பட்டிருக்கிற பொதுவான பிரார்த்தனை வழங்குவதற்குமுன் ஞானஸ்நான ஆயத்தக்காரருக்காக விண்ணப்பஞ் செய்வது சபை வழக்கம். அதற்கு ஏற்பட்டுள்ள பிரார்த்தனை யாவது ஜெப புஸ்தக அநுபந்தத்திலுள்ள 14-ம் விசேஷகால ஜெபம்: பரிசுத்த ஞானஸ்நானத்துக்கு ஆயத்தப்படுகிறவர்களுக்காக.

5 ஆயத்தக்காரர் ஞானஸ்நானம் பெற வருமுன், அவர்கள் படிக்க வேண்டிய பாடங்களைப் படித்ததுமல்லாமல், அவர்கள் உள்ளபடியே தங்களைக் கிறிஸ்துவுக்குத் தத்தம்செய்திருக்கிறார்களோவென்று குருவானவர் தம்மால் இயன்ற மட்டும் அறிந்து கொள்ள முயலல் வேண்டும். அவர்கள் நடக்கை எவ்விதத்திலும் திருப்திகரமானதென்று சபை மூப்பர் உறுதி வாக்குக் கொடுக்கவேண்டும்.

## பரிசுத்த ஞானஸ்நானத்துக்கு அடுத்த ஆயத்தம்

இந்த விஷயத்தைப் பற்றி திருநெல்வேலி அத்தியக்ஷர் 1940-ம்

ஆண்டில் பிறப்பித்த விதிகளான:

1. ஞானஸ்நான ஆயத்தக்காரர் படிக்கவேண்டிய பாடங்கள் யாவை? எல்லாவற்றிற்கும் மேலாக, கிறிஸ்துவின் ஜீவன் மரணம் உயிர்த்தெழுதல் ஆகிய இவற்றைப் பற்றி அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். தாங்கள் விசுவாசித்தவர் யாரென்று அவர்கள் அறியாதிருந்தால், அந்த விசுவாசம் உறுதியாவது எங்ஙனம். அநேகமாய்க் கிராமவாசிகள் பன்னிரண்டு பாடங்களை நன்றாய்ப் படித்தால் போதும். குறிப்பிட்ட பாடங்களாவன:

1 கிறிஸ்துவின் பிறப்பு, தேவதூதர் பாடிய கீதம்.
2 காணாமற்போன ஆட்டைப் பற்றிய உவமை.
3 குஷ்டரோகி சுத்தஞ்செய்யப்பட்டது.
4 திமிர்வாதக்காரன்.
5 பாவியான ஸ்திரீ.
6 யாவீரின் மகளை உயிரோடு எழுப்பினது.
7 நல்ல சமாரியன்.
8 கிறிஸ்து மறு ரூபமாதல்.
9 கெட்டகுமாரன்.
10 கெத்சேமனே.
11 சிலுவையில் கிறிஸ்து அடைந்த மரணம், அவர் மொழிந்த திவ்விய மொழிகள்.
12 எம்மாவுக்குப் போன இரண்டு சீஷர்கள்.

இவையெல்லாம் பரிசுத்த லூக்கா எழுதின சுவிசேஷத்தில் அடங்கியிருப்பதனால், வாசிக்கத் தெரிந்தவர்கள் அந்த ஒன்றை மாத்திரம் வாங்கினால் குறிக்கப்பட்ட எல்லாப் பாடங்களையும் அவர்கள் படிக்கலாம்.

ஆயத்தக்காரர் இவற்றை மனப்பாடமாய்ப் படிக்க வேண்டுவதில்லை, ஆயினும் இவற்றின் பொருளும் இவற்றில் அடங்கியுள்ள சத்தியங்கள் அவர்களுக்குத் தீர விளங்கியிருத்தல்வேண்டும்.

2. ஜெபம். ஒருவன் தனியாயிருந்து ஜெபஞ்செய்து கொண்டு தன் பரம தந்தையோடு பழகக் கற்றுக்கொள்ளாவிடின், அவனிடம் ஆவிக்குரிய உயிர் உண்டாகவில்லை என்பது திண்ணம். ஆகவே, இதைப்பற்றி தேவ ஊழியஞ்செய்பவர்கள் விசேஷித்த சிரத்தையெடுக்கவேண்டும். ஆலயத்தில் இதைப்பற்றி பாடங்களைக் கற்பிப்பதுமல்லாமல், ஆயத்தக்காரரைத் தனியாக அழைத்து, அவர்களோடு ஜெபஞ்செய்து, ஜெப ஜீவியம் இன்னதென்று அவர்களுக்கு விளக்கிக் காட்ட முயலவேண்டும். கிறிஸ்துவை அறியாத தங்கள் இனத்தாருக்காக ஊக்கமாய் ஜெபம் பண்ண புதுக் கிறிஸ்தவர்கள் கற்றுக்கொள்வது இன்றியமையாதது. சிலரை ஞானஸ்நானம் பெறுவதற்குக் குருவானவர் முன் நிறுத்துவதற்கு முன்னே, இவர்கள் ஒழுங்காய் ஜெபஞ் செய்து வருகிறார்கள் என்பதைப்பற்றி தேவ ஊழியனுக்கு நிச்சயம் உண்டாக வேண்டும்.

3 கிறிஸ்தவ சன்மார்க்கம். இதற்கு ஆதாரமாக, பத்துக் கற்பனை களின் சாராம்சத்தைக் கற்பிக்கலாம். ஞானஸ்நான ஆயத்தக்காரர் பத்துக் கற்பனைகளை மனப்பாடஞ்செய்வது அவசியமில்லை; அது திடப்படுத்தலுக் கென்று ஏற்பட்ட ஓர் பாடம். எனினும், கிறிஸ்தவ ஜீவியத்தின் சிறந்த லட்சணங்கள் எவையென்று ஆரம்ப முதல் புதுக் கிறிஸ்தவர்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும். விசேஷமாய், சண்டை, பழிவாங்குதல், கடன், பொய்ச்சாட்சி முதலியவற்றைப்பற்றி கிறிஸ்தவர்கள் கைக்கொள்ள வேண்டிய சட்டங்கள் எவையென்று அவர்களுக்கு விவரித்துப் போதிப்பது நல்லது. அல்லாமலும் கிறிஸ்தவ இல்வாழ்க்கையைப்பற்றியும் விசுவாச விஷயமாய்க் கிறிஸ்தவர்கள் கைக்கொண்டு நடக்கவேண்டிய பிரமாணங் களைப்பற்றியும் போதனை செய்யப்படுவது அவசியம். இல்லாவிட்டால், புதுக் கிறிஸ்தவர்கள் சபைப் பிரமாணங்களைத் தெரியாமல் மீறலாம். இது அவர்களுடைய ஆவிக்குரிய உயிருக்குப் பெரிய இடையூறாயிருக்கலாம்.

4 கிறிஸ்தவ ஈகை. புதுக் கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானம் பெறுவ தற்கு முன், கிறிஸ்தவர்கள் செலுத்தும் காணிக்கைகள் இரட்சண்யத்தின் சந்தோஷத்தை அடைந்தவர்கள் தேவனுக்கு மனதாரச் செலுத்தும் ஸ்தோத்திர பலியென்று அவர்கள் உணர்ந்திருக்கவேண்டும்.

பின்பு, படிக்கவேண்டிய பாடங்களை இவர்கள் தீரப்படித்ததோடுங்கூட, சபை மூப்பரின் நற்சாட்சி பெற்றிருக்கவேண்டும். இந்து சடங்காசாரங் களையும் பழக்கவழக்கங்களையும் இவர்கள் முற்றிலும் வெறுத்துவிட்டு, விபசாரம், குடி முதலிய கெட்டசெய்கைகளை ஒழித்துவிட்டு, எல்லாரோடும் சமாதானமாயிருக்கிறார்களாவென்பதை சபை மூப்பர் தீர விசாரித்திருக்க வேண்டும். இவர்கள் நிலைமையின் மெய்ம்மை குருவானவருக்கு மறைவா யிருக்கலாம், ஆவி நிறைந்த சபை மூப்பருக்கு அது மறைந்திருக்கமுடியாது. சபை மூப்பர் ஆவி நிறைந்தவர்களாயிருப்பது அவசியம். மற்றப்படி அவர்கள் இந்த முக்கியமான பணிவிடையைச் செய்யமுடியாது என்று சொல்லாமலே எல்லாருக்கும் தெரியும்.

கடைசியாக, புதிதாய் ஞானஸ்நானம் பெற்றவர்கள் தாங்கள் சேர்ந் திருக்கும் சபை ஓர் அடைக்கலமும் ஐக்கியக் கூட்டமும் என்று உணர்ந்து, தாங்கள் விட்டுவந்த பழைய மதத்தை மீண்டும் விரும்பாதபடி, கிறிஸ்தவர் கள் யாவரும் அவர்கள்மேல் அன்பு பாராட்டி, கிறிஸ்துவின் அன்பு எவ்வளவு அருமையானதென்று செய்கையின் மூலமாய் அவர்களுக்கு அறிவிக்க ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

பரிசுத்த ஞானஸ்நானத்தைப்பற்றிய வேதசாஸ்திர நூல்
முற்றிற்று.

## திருநெல்வேலி வேத சாஸ்திர நூல்கள்

| | | ரூ. அ. ப்பை |
|---|---|---|
| 1940 | இஸ்ரவேலர் கானான் தேசத்தில் குடியேறின காலம் | 0—4—0 |
| | அப்போஸ்தலருடைய நடபடிகள் ... ... | 0—6—0 |
| | மூன்று விசுவாசப் பிரமாணங்கள் ... ... | 0—4—0 |
| | சபைப் பிதாக்களின் காலம் (a) ... ... | 0—3—0 |
| | ... (b) ... ... | 0—3—0 |
| 1941 | ஐக்கிய அரசும் அதின் சிதைவும் ... ... | 0—6—0 |
| | ரோமர் நிருபம் ... ... ... | 0—4—0 |
| | கலாத்தியர் நிருபம் ... ... ... | 0—4—0 |
| | லித்தானியாவும் விசேஷித்த ஜெபங்களும் ... | 0—4—0 |
| | திருச்சபைச் சரித்திரம் கி. பி. 500—1000 ... | 0—6—0 |
| 1942 | ஆமோசின் தீர்க்கத் தரிசனம் ... ... | 0—4—0 |
| | ஓசியாவின் தீர்க்கத் தரிசனம் ... ... | 0—4—0 |
| | பரி. யோவான் சுவிசேஷம் ... ... | 0—10—0 |
| | பரிசுத்த நற்கருணை ஆராதனை ... ... | 0—4—0 |
| | கிறிஸ்தவமும் இஸ்லாமும் ... ... | 0—4—0 |
| 1943 | ஏசாயா, மீகா தீர்க்கத் தரிசனங்கள் ... ... | 0—6—0 |
| | i. கொரிந்தியர், i, ii தெசலோனிக்கேயர் ... | 0—8—0 |
| | பரிசுத்த நற்கருணை ஆசரிப்பின் வரலாறு ... | 0—6—0 |
| | 14-ம், 15-ம் நூற்றண்டுகள் ... ... | 0—6—0 |
| 1944 | யூத ராஜ்யம் சிதைந்த காலம் ... ... | 0—6—0 |
| | பரி. லூக்கா சுவிசேஷம் ... ... | 0—10—0 |
| | பரிசுத்த ஞானஸ்நான முறைமைகள் ... ... | 0—4—0 |
| | சபை சீர்திருத்தக் காலம் ... ... | 0—10—0 |
| | எதிர்வாத சீர்திருத்தம் ... ... | 0—6—0 |

மேற் காட்டிய புஸ்தகங்கள் பாளையங்கோட்டை, அத்தியக்ஷாதீன புத்தக சாலையில் வாங்கலாம்.

---

## 1945 ம் வருஷத்துப் பாடங்கள்

பழைய ஏற்பாடு. சிறையிருப்பின் காலம். ஏசாயா, அதி. 40—55, 58, 61. தானியேல் அதி. 1—6.

புதிய ஏற்பாடு. பிலிப்பியர், கொலோசேயர் நிருபங்கள்.

ஜெப புஸ்தகம். ஞானோபதேச வினு விடை, திடப்படுத்தல்.

திருச்சபைச் சரித்திரம். இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்காத்லாந்து தேசங்களின் சபை சீர்திருத்தம்.

---